# திருக்குறள் கதைகள்
# பொருட்பால்
# 831 – 880

## தமிழறிஞர்
## கே.வி.குணசேகரம்

# நூல் விபரம்


| | | |
|---|---|---|
| நூலின் பெயர் | :- | திருக்குறள் கதைகள் (831 – 880) |
| நூலாசிரியர் | :- | தமிழறிஞர் கே.வி.குணசேகரம் |
| பதிப்பாண்டு | :- | 2010 |
| மொத்தப் பக்கங்கள் | :- | |
| விநியோகம் | :- | லங்கா புத்தகசாலை<br>கு.டு 1.14, டயஸ் பிளேஸ்<br>குணசிங்கபுர,<br>கொழும்பு – 12 |
| தொ.பேசி | :- | 011-2341942 |
| விலை | :- | |

# என்னுரை

திருக்குறள் கதைகள் பொருட்பால் 831 - 880 வரையான 50 குறள்களுக்கான கதைகள் இந்நூலில் உள்ளன. இது வரை 830 குறள்களுக்கான கதைகள் வெளிவந்துவிட்டன. 1330 குறள்களுக்கும் இதுவரை யாரும் தொடர்கதை எழுதவில்லை. ஒரு நாவலாக இதை நான் எழுதிய போதும் தனித்தனியாகவும் வாசிக்கலாம். ஒவ்வொரு குறளுக்கும் பொருள், விளக்கம், கதை எழுதியுள்ளேன். இப்படியும் இதுவரை யாரும் எழுதவில்லை. குறளுக்கு உரையே எழுதியுள்ளனர். நான் குறளுக்குக் கதை எழுதியதால் குறளை யாபேரும் விளங்கிக் கொண்டனர்.

எழுத வாசிக்கத் தெரிந்த ஒருவர் குறளின் அர்த்தத்தையும் கருத்தையும் புரிந்து கொள்ள வேண்டும் என்று நினைத்தே கதைகளாக எழுதினேன். எனது எண்ணம் பெருவெற்றி பெற்றது. தரம் ஐந்தில் கற்கும் பத்து வயது மாணவி எனது குறள் கதைகளை வாசித்துவிட்டு வகுப்பில் தன்னுடன் படிக்கும் மாணவர்களுக்கு அக்கதையை விளக்கமாகக் கூறியதை நான் நேரில் கண்டேன். இது எனக்குக் கிடைத்த வெற்றி மட்டுமல்ல குறளுக்குக் கிடைத்த வெற்றியுமாகும். குறளை மனனம் செய்வதாலோ, அதன் கருத்தைக் கூறுவதாலோ பயனில்லை. அதன் அர்த்தத்தைப் புரிந்து கொள்ளல் வேண்டும். அந்தப் புரிந்துணர்வை எனது குறள் கதைகள் நிறைவேற்றியுள்ளன.

இந்த வகையில் இந்து தத்துவ நூல்கள் பலவற்றைக் கதைகளாக்கி வருகிறேன். அவற்றைச் சிறியவர்கள் முதல் பெரியவர்கள் வரை விருப்புடன் வாசித்து வருகிறார்கள். இந்த வகையில் திருவருட்பயனையும், சிவஞானபோதத்தையும் தற்பொழுது கதைகளாக எழுதியுள்ளோன். இக்கதைகள் இந்து தத்தவத்தை மக்களுக்குப் புரிய வைக்கும் என்று நினைக்கிறேன். நான் படிக்கும் போது என்னால் புரிந்துகொள்ள முடியாதவற்றை இந்து தத்துவ நூல்களைத் திரும்பத்திரும்பப் படித்துப் புரிந்து கொண்டேன். அவற்றை இந்துக்கள் எல்லோரும் புரிந்து அதன்படி நடக்க வேண்டுமென்பதே எனது விருப்பம். இக்கதைகளிலுள்ள பெயர்களும் சம்பவங்களும் கற்பனையேயாகும். யாரையும் குறிப்பிடுவனவல்ல.

நான் எழுதும் நூல்களில் உள்ள எழுத்துப் பிழைகளை நீக்கிச் சீர்செய்து தரும் ஓய்வுபெற்ற அதிபர்களான திரு வா. ஜெயரட்ணம், திரு. தி. கிருஷ்ணகுமார் அவர்களுக்கும், எழுத்துப் பிழைகளை நீக்கித் தருவதோடு, தகுந்த ஆலோசனைகளை வழங்கி என்னை உற்சாகப்படுத்தும் ஆசிரியை செல்வி ப.இறைமகளுக்கும், எனது கதைகளை அழகாக கணனி மயப்படுத்தித்தரும் செல்வி. க.தேனமிர்தம் அவர்களுக்கும், இந்நூலை வெளியிடும் கொழும்பு 12இல் அமைந்துள்ள லங்கா பதிப்பகத்தினருக்கும் நன்றி கூறிக்கொள்கிறேன்.

அன்புடன்

**கே. வி. குணசேகரம்**

ஓய்வு பெற்ற கோட்டக்கல்விப் பணிப்பாளர்,
கோப்பாய், நல்லூர், யாழ்ப்பாணம். கோப்பாய் மத்தி, கோப்பாய்.

# அணிந்துரை

தமிழும் சைவமும் புலமையும் திறமையும்
தகவும் இசையும் சால்புறு கலைகளும்
கமழும் கோவையூர் கலைக் கடலினுள்ளே
கதிரும் கதிரவனைப் போல் உதித்தனனே!

பணிதல் இன்சொல் பயத்தல் பண்பினைப்
பகிர்தல் கல்வி வளம் பெருக்கல் பயனுறத்
துணிந்து செயற்படல் பிறருக்குதவுதல் துன்பந்
துடைத்தல் துலக்குதல் இவர் தம் அணிகளாம்.

சொல்லும் பொருளும் சுவை சேர் வாக்கும்
சுடர்விடு அறிவும் தூய நல்லெழுத்தும்
வெல்லும் செயலும் விழிப்பும் ஆர்வமும்
குணசேகரனின் உள்ளொழுகும் விழுமியங்களே!

இந்த மனிதனின் எத்தனம் எத்தனை
எடுத்துச் சொல்லுதல் இயலுமா அத்தனை!
அந்த மாமணி தன்னையே “தமிழறிஞன்”
என்று ஏத்தினர் தமிழ் உலகோ!

பல்சுவையுறு நாவல்கள் தெவிட்டாத இலக்கியங்கள்
பயனுறு கதைகள் பாங்கான பாடல்கள்
வித்தைகள் புரி கதை கட்டுரைகள் விமர்சனங்கள்
வானொலி நாட்டிய நாடகங்கள் சமய நூல்கள்
அறநூலாம் திருக்குறள் பாக்கள் 1330இற்கும்
அகிலமே செய்யாத கதைகள் எழுதிய
பெருமைக்கும் போற்றுக்கும்
கே.வி.கு. வே உரித்தாளர்.

நலம் திகழ் கோப்பாய் நாவலர் பள்ளி
குடிகொண்ட வித்தியா மகா கணபதியை
நித்தம் வளம் வந்து பெற்றாய் ஏற்றம்
வகுத்தளித்தவன் அவனே அன்றோ
உலகுக்கவன் தான் உருத்திரன்
உத்தமன் அவனை நம்பு!
நலம் பெறும் நல்லிலக்கியம்
அளிப்பான் உனக்கு.

வி. தயாபரன், வெற்றி இலக்கு
தயா அச்சகம், யாழ்ப்பாணம்.

பாடலாக்கம் நயினை எஸ். எஸ். பிள்ளை.

## பேதைமை

மிகவும் மனம் குழம்பிய நிலையில் மனைவியின் வீட்டிலிருந்து வந்து திண்ணையில் அமர்ந்து யோசித்துக் கொண்டிருந்த நவராசாவுக்கு அருகில் வந்து அமர்ந்தார் கதிரேசன். அவர் வந்தமர்ந்ததை நவராசா கவனிக்கவில்லை. வானத்தை அண்ணாந்து பார்த்துக் கொண்டிருந்தான். பல நாட்களாகச் சவரஞ் செய்யப்படாத அவனது முகம் விகாரமாகக் காட்சியளித்தது. கண்கள் சோர்ந்து களையிழந்திருந்தன.

"தம்பி….. தம்பி நவராசா…." மெல்ல அழைத்தார் கதிரேசன். நவராசாவுக்கு அவர் அழைத்தது கேட்கவில்லை. அதனால் பாச மிகுதியுடன் நவராசாவின் தோளில் கையை வைத்தார் கதிரேசன்.

நவராசா திடுக்கிட்டுத் திரும்பினான்; "காலையில் சாப்பிட்டாயா….?" பாசம் பொங்கக் கேட்டார் கதிரேசன். நவராசா தனது மனைவி துர்க்காவுடன் பிரச்சினைப் பட்டுக் கொண்டு பல நாட்களாக அவள் சமைத்த உணவை உண்பதில்லை. அதைப்பற்றிஅ வன் வீட்டில் சொல்லவில்லை. ஆனால் அது வீட்டாருக்குத் தெரியும். இருந்த போதும் அவர்கள் அதைப்பற்றி அவனைக் கேட்கவில்லை. ஆனால் அன்று கதிரேசன் அவனைக் கேட்பதென்று தீர்மானித்திருந்ததால் அப்படிக் கேட்டார்.

"சாப்பிட்டுட்டன்" ஒரு வார்த்தையில் பதில் சொன்னான் நவராசா.

"எங்கை சாப்பிட்டனி. கடையிலா?"

நவராசா தலைகுனிந்தான். அவனால் பதில் கூற முடியவில்லை. "மனைவியுடன் பிரச்சினைப்படாமல் உலகத்தில் வாழ்பவர்கள் யாரும் இல்லை. மனைவியுடன் பிரச்சினைப்பட்டால் ஓரிரு மணித்தியாலத்துள் அதைத் தீர்த்துக் கொள்பவர்கள் தான் உண்மையான தம்பதிகள். இரண்டொரு நாட்களில் அதைத் தீர்க்காவிட்டால் அது நிரந்தரமான பிரிவுக்கு வழிவகுத்துவிடும். நீ துர்க்காவுடன் பிரச்சினைப்பட்டு இரண்டு வாரங்களுக்கு மேலாகி விட்டது. அது எமக்கு எப்பவோ தெரியும். கணவனும் மனைவியும் பிரச்சினைப்பட்டால் அதை அவர்களே தீர்த்துக் கொள்ளல் வேண்டும். அதைவிட அப்பிரச்சினை வெளியாருக்குத் தெரிய வந்தால் அவர்கள் ஒவ்வொருவரும் ஒவ்வொரு மாதிரியாகக் கதைத்துக் குடும்பத்தைப் பிரித்து விடுவார்கள். அத்துடன் குடும்ப மானமும் போய் விடும். குடும்பப் பிரச்சினைகள் பெற்றாருக்குக் கூடத் தெரியப்படாது என்பதற்காகத் தான் உனது தாயார் உன்னை எதுவும் கேட்பதில்லை. நீ இரண்டு வாரமாக வீட்டில் உணவு உண்பதில்லை இது பெரும் பிரச்சினையில் போய் முடியப் போகிறது."

நவராசாவுக்கு துக்கம் தொண்டையை அடைத்தது. அதைச் சிரமப்பட்டு அடக்கினான். அதைத் தெரிந்த போதும் தெரியாதது போலச் சொன்னார் கதிரேசன்; "துர்க்கா பெரும் பணக்காரி.

நாலைந்து சகோதரர்கள் வெளிநாட்டில் இருக்கிறார்கள். அதனால் அவள் மற்றவர்களை மதிக்கமாட்டாள். அதனால் மற்றவர்கள் தான் அவளை அனுசரித்துச் செல்ல வேண்டும். பெரும் பணக்காரியான அவளுக்கு நீ கமஞ் செய்வது பிடிப்பதில்லை. தான் ஒரு விவசாயியின் மனைவி என்பதை அவள் விரும்புகிறாள் இல்லை. அதனால் நீ வேறு ஏதாவது தொழில் செய்ய வேண்டும். படிக்கும் காலத்தில் நீ படிக்கவில்லை. வியாபாரமும் உனக்குச் சரிவராது. அதனால் உன்னால் செய்யக்கூடிய தொழில் ஏதாவதிருந்தால் செய். அத்துடன் அவளுக்கு அத்தொழிலில் விருப்பமிருக்கா என்று கேட்டு, அவள் விரும்பிய பின்புதான் அதைச் செய். பின் அத்தொழிலில் நீ முதலிட்டு விட்டு அவள் விரும்பாவிட்டால் கரைச்சல்'' என்றார் கதிரேசன்.

``வியாபாரம் தான் செய்ய விரும்புறன். அது அவளுக்கு விருப்பம். ஆனால் அவள்; ``வேலை எதுவும் செய்ய வேண்டாம். பேசாமல் இருந்து சாப்பிடுங்கள்.'' என்கிறாள். அது என்னால் முடியவில்லை. இன்னொருவரின் உழைப்பில் வாழ எனக்கு விருப்பமில்லை. அத்துடன் சகோதரர்களென்றாலும் அவர்கள் எத்தனை நாட்களுக்குப் பணம் அனுப்புவார்கள்''.

``உண்மைதான். மதிப்பு செய்யும் தொழிலால் உண்டாவதில்லை. அது மனிதன் நடந்து கொள்ளும் முறைகளால் தான் உண்டாகிறது. பேதைமை என்று சொல்லப்படுவது என்ன வென்றால், கெட்டவற்றைக் கைக்கொண்டு நல்லவற்றையும் கைவிடுதலாகும். அவள்

அப்படித்தான் செய்கிறாள். அவளைத் திருத்த முடியாது'' என்றார் கதிரேசன்.

**831. பேதைமை என்பதுஒன்று யாதெனில் ஏதம்கொண்டு ஊதியம் போக விடல்.**

பேதைமை என்று சொல்லப்படுவது என்னவென்றால், தனக்குக் கெடுதியானவற்றைச் செய்து கொண்டு நல்லவற்றைக் கைவிடுவதாகும்.

## பெரும் அறியாமை

பல நாட்களாக நவராசாவின் இதயத்துள் தேங்கி நின்று அவனைப் பைத்தியக் காரனாக உருவாக்கிக் கொண்டிருந்த துயரம், கதிரேசனது ஆதரவான அன்பான வார்த்தைகளால் வெளிப்பட்டதால் அவன் விம்மி விம்மி அழுதான். கதிரேசன் அவன் அழுவதைப் பார்த்துக் கொண்டிருந்தார். அவன் திருமணம் முடித்த நாளில் இருந்து மகிழ்சசியாக வாழவில்லை என்பது அவருக்குத் தெரியும். இருந்தும் அவர் அது பற்றித் தெரியாதவராக நவராசாவுக்கு முன்னால் நடித்துக் கொண்டிருந்தார். இனியும் அப்படி நடித்தால் அவனின் வாழ்கை சீரழிந்து நாசமாகிப் போய்விடும் என்பதற்காகத்தான் அவனது வாழ்வில் நடந்த துயரங்களை மெல்ல அன்பாக விசாரித்தார். தான் கேட்டவுடன் துயரத்தைத் தாங்க முடியாது விம்மி விம்மி அழும் நவராசாவைப் பார்க்க கதிரேசனுக்குத் துக்கமாக இருந்தது. எனினும் அதை வெளிக்காட்டிக் கொள்ளாது அவன் கொஞ்ச நேரம்

அழட்டும் என விட்டு விட்டுத்தான் உள்ளுக்குள்ளே குமுறிக் கொண்டிருந்தார்.

“எனக்கு வாழ்க்கை வெறுத்து விட்டது அப்பு. தெரியாத்தனமாக நீங்கள் சொல்லச் சொல்லக் கேளாது அவளைக் காசுக்காகக் கட்டி நான்படும் நரக வேதனையை என்னால் தாங்கிக் கொள்ள முடியவில்லை” அவன் துர்க்காவைத்தான் பெருஞ் சீதனத்துடன் திருமணம் செய்ய விரும்புவதாகக் கதிரேசனுக்குக் கூறிய போது அவர் கூறிய வார்த்தைகள் அவனது காதில் ஒலித்தன; “மகனே, பணம் பொருளல்ல வாழ்க்கை. பணம் பொருளில்லாமல் மனிதனால் இன்பமாக வாழ முடியாது தான். அதற்காகப் பணம் தான் வாழ்க்கை என்று நீ நினைக்கிறாய். உனது பெற்றோர் பணம் படைத்தவர்களல்ல. அதற்காக அவர்கள் எப்போதும் துன்பமாகவா வாழ்ந்தார்கள்? இன்பம் என்பது மனதில்தான் தங்கியுள்ளது. போதுமென்ற மனம் ஒருவனை இன்பத்திற்கு அழைத்துச் செல்லும். அதனால் பணம் பொருளுக்காக அவளைத் திருமணம் செய்வதாகச் சொல்லாதே. நேற்றுப் பணமில்லாது துன்பப்பட்ட பலர் இன்று கோடீஸ்வரராக இருக்கி றார்கள். இதையெல்லாம் உனது கண்களால் நீ தினமும் காண்கிறாய். அதனால் யோசித்துச் செய். அவர்களுக்குச் சம்மதம் தெரிவித்து விட்டு யோசிப்பதால் பிரயோசனமில்லை”

“உங்களது சொல்லைக் கேட்காததால் தான் எல்லாம் நடந்தது. இனியோசித்து என்ன பயன்?” பெருமூச்சு விட்டான் நவராசா.

"இனித்தான் யோசித்தல் வேண்டும். பணத்தால் சகல இன்பங்களையும் அடையலாமென்று நினைத்து உனது வாழ்க்கையை ஆரம்பித்தாய். உன்னால்எதையும் அனுபவிக்க முடியவில்லை என்பதால் நீ வழிதவறி நடக்கிறாய்..." என்ற கதிரேசன் கதைக்க முடியாது சில கணங்கள் தடுமாறினார். பின் தன்னைச் சுதாகரித்துக் கொண்டு சொன்னார்; "இப்போது நீ ஒழுக்கமில்லாத செயல்களில் விரும்பங் கொண்டு அதற்கு அடிமையாகி அவற்றிலிருந்து மீள முடியாது அவதிப்படுகிறாய். இது பேதைமை எல்லாவற்றுள்ளும் மிகப்பெரிய பேதைமையாகும். ஒருவனுக்கு வாழ்க்கை மீது வெறுப்பு ஏற்பட்டால் கடவுளின் மீது நம்பிக்கை வைக்க வேண்டும். பெரியவர்களோடு நட்புப்பூண்டு அவர்களிடம் ஆலோசனை கேட்க வேண்டும். அதைவிட்டு விட்டு விடிந்தது முதல் குடித்துக் கொண்டும், வீட்டுக்குச் செல்லாமல் கடைகளில் உணவை உண்டு கொண்டும் திரிந்தால் பிரச்சினைகள் யாவும் தீர்ந்து விடுமா....? துக்கம் குறையுமா...? நீ என்னுழைடய பேரன். நீ படிக்கா விட்டாலும் உலக நடைமுறைகள் யாவற்றையும் நான் உனக்குக் கூறியுள்ளேன். எந்தச் செயலால் உனக்கு நிம்மதியின்மை ஏற்பட்டதோ அந்தச் செயலை நீக்க வேண்டும். அதனால் நீ வீட்டுக்குச் சென்று உனது மனைவியின் மனதை முதலில் மாற்றுவதற்கு முயற்சி செய். மனைவியுடன் பிரச்சினைப்படுபவனுக்கு வாழ்வில் ஒரு கணம் கூட நிம்மதியிராது. அவன் ஒரு போதும் இன்பத்தை அனுபவிக்க மாட்டான். அவன் நரகத்தில் தான் உழல்வான். எடுக்கும் பிறவிகள் தோறும் கூட அவனுக்கு நிம்மதியிராது. ஏனென்றால் மனிதப்

பிறப்பில்தான் உயிர்கள் நல்ல வாழ்வு வாழ்ந்து தான தர்மஞ் செய்து அடுத்த பிறவிக்கான செயற்பாடுகளைச் செய்வது. இந்தப் பிறவியில் எதையும் செய்யாத உனக்கு அடுத்த பிறவி எப்படிச் சிறக்கும்?" என்று கேட்டார் கதிரேசன்.

**832. பேதைமையுள் எல்லாம் பேதைமை காதன்மை**
**கையல்ல தன்கண் செயல்.**

ஒருவனுக்குப் பேதைமை எல்லாவற்றிலும் மிக்க பேதைமை என்னவென்றால், ஒழுக்கமில்லாத செயல்களை விரும்பிச் செய்வதே.

## அறிவற்ற செயல்கள்

"உண்மைதான் அப்பு, நான் எதையும் சமாளித்து வாழத்தான் விரும்புகிறன். நீங்கள் அடிக்கடி எனக்குச் சொல்வீர்கள்; "தாரமும் குருவும் தலைவிதிப்படி" என்று. அதனால் இதுதான் எனது தலைவிதி என்று நினைத்துப் பொறுமையுடன் அவள் செய்யும் அநியாயங்களையெல்லாம் பொறுத்து வாழ்ந்து வருகிறேன். ஆனால் அவள் எனது அந்த நடத்தையை எனது பலவீனமெனக் கருதி என்னைக் கீழானவனாக மதிக்கிறாள். அவள் என்னை ஒருபோதும் தனது கணவன் என்று நினைப்பதில்லை. தான் பெரும் பணக்காரி என்று நினைத்து என்னை அவர்களது வீட்டு வேலைக்காரனாக நினைக்கிறாள். அப்படி வீட்டில் நடந்தாலும் பரவாயில்லை. செல்லுமிடங்களிலும், பலரின் முன்னிலையிலும் அப்படி நடந்து கொள்கிறாள். தோட்டச் செய்கைக்கு அவள் உதவி

செய்வதில்லை. நான் தோட்டத்தில் வேலை செய்யும் தொழிலாளர்களுக்கு உணவும் தேநீரும் கடைகளில் வாங்கிக் கொடுக்கிறேன். தோட்டத்திற்கு நான் சென்று வந்தால் என்னை வீட்டுக்குள் நுழைய விடுகிறாள் இல்லை. அழுக்கான உடலுடன், அழுக்கான உடையுடன் தனது ஆடம்பரமான வீட்டுக்குள் வரவேண்டாமென்கிறாள். நான் என்ன செய்வது?” அழுதான் நவராசா.

“நெஞ்சமுழுத்தம் மிக்க ஆண்மகன் ஒருவன் எந்தத் துன்பம் வந்தாலும் கண்கலங்கக் கூடாது. முதலில் உனது அழுகையை நிறுத்து. துணிவில்லாதவர்கள் தான் கலங்குவார்கள். ஐந்து பேருக்கு அடிக்கக் கூடிய பலம் பெற்ற நீ ஒரு பெண்ணுக்கஞ்சி அழுவதை என்னால் பொறுத்துக் கொள்ள முடியவில்லை. மனிதன் தனது பகைவர்களை எதிர்த்துப் போராட வேண்டுமே தவிரத் தனது மனைவியை எதிர்த்துப் போராடக் கூடாது. அவள் மீது நீ அன்பு செலுத்து. ஆரம்பத்தில் அவள் செய்யும் செயல்களைக் கவனிக்காதே. அவளை எதிர்க்காது அவள் மீது அதிக அன்பு செலுத்து. உன்னால் அவள் மீது அன்பு செலுத்த முடியாவிட்டால் அன்பு செலுத்துபவனைப் போல நடி...” கதிரேசன் சொல்லிக் கொண்டிருக்கும் போது நவராசா குறுக்கிட்டுச் சொன்னான்; “அவளுக்கு அன்பு என்றால் என்னனென்று தெரியாது. அவள் ஒரு மிருகம். பெண் உருவில் நடமாடும் பேய்”

“மகனே, அமைதியாக இரு. ஆத்திரப்படுவதன் மூலம் உன்னை நீயே வருத்திக் கொள்கிறாய். தகாத செயல்களைச் செய்வதில்

வெட்கப்படாமல் இருப்பது, தக்கது எதுவென்று தெரியாமல் நடப்பது, அன்பில்லாமல் இருப்பது, காக்க வேண்டியவற்றை யெல்லாம் காக்காமல் விடுவது ஆகியவையெல்லாம் அறிவற்றவர்களின் செயல்களாகும். அவள்தான் அறிவற்ற பேதை என்றால் நீ அதைவிடப் பேதையாக இருக்கிறாயே."

"என்னை என்ன செய்யச் சொல்கிறீர்கள்?" என்று கேட்டான் நவராசா.

"அமைதியாக இரு. ஒரு மனிதன் எப்போதும் ஒரே மாதிரியாக வாழ முடியாது. சந்தர்ப்பம் சூழ்நிலைகளுக்கேற்ப மாறித்தான் தீர வேண்டும். சண்டையிட்டுக் கொண்டும் குறைகள் பலவற்றைச் சொல்லிக் கொண்டும் இருந்தால் வாழ்க்கை முழுவதிலும் அவற்றையே செய்து கொண்டிருக் கவேண்டும். வாழ்க்கையைச் சீர்படுத்த அவை நமக்கு ஒதுபோதும் உதவ மாட்டாது. அதனால் பொறுமையாக இருந்து அவளைத் திருத்தப்பார். அவள் திருந்தாவிட்டாள் நீ திருந்தி நட. அப்படியும் அவள் திருந்தாவிட்டால் அவளுடனான உறவை முறித்து விட வேண்டியது தான். அது பாவமில்லை. எச் செயலைச் செய்வதானாலும் அச் செயலால் நாம் பாவம் செய்யக் கூடாது" என்றார் கதிரேசன்

"அப்படித்தான் நானும் நினைக்கிறேன். என்னால் அவளுடன் நிம்மதியாக வாழ முடியாது. நான் எனது மனதில் நினைத்ததை நீங்கள் சொல்லி விட்டீர்கள்" என்றான் நவராசா.

கதிரேசன் சில நிமிடங்கள் பேசாதிருந்து யோசித்தார். தான் சொன்னதும் அவன் அதையே சொல்கிறானென்றால் அவன் அனுபவித்து வரும் துன்பம் எப்படியானது என்று அவருக்குத் தெரிந்தது. அவரது நாற்பது வருடக் குடும்ப வாழ்வில் அவரது மனைவி ஒரு நாளென்றாலும் அவரின் மனம் நோகும்படியாக நடக்கவில்லை. அவரும் அவரது மனைவியை நன்கு மதித்து அன்பு பூண்டு வாழ்ந்து வந்தார். நவராசா திருமணமாகி நான்கு மாதத்துள் அவளிடமிருந்து பிரிய நினைக்கிறான். அதை நினைக் கஅவரது நெஞ்சு அடைத்து.

---

**833. நாணாமை நாடாமை நார்இன்மை யாதொன்றும்
பேணாமை பேதை தொழில்.**

---

தகாத செயல்களைச் செய்வதில் வெட்கப்படாமல் இருப்பது, செய்யத் தக்க செயல்களைச் செய்யாமல் இருப்பது, உயிர்களிடத்தில் அன்பில்லாமல் இருப்பது, காக்க வேண்டியவற்றைக் காக்காமல் இருப்பது ஆகியனவெல்லாம் பேதைமை உடையவர்களின் செயல்களாகும்.

## கடைப்படிக்காவிட்டால்

கஜேந்திரன், கதிரேசனின் வீட்டுக்கு வந்தான். ஓய்வான நேரங்களில் அவன் அவரிடம் வருவதுண்டு. கதிரேசன் மகா கணபதி ஆலய மடததில் தங்கியிருந்த காலத்தில் அவன் கோயிலுக்கு வரும் வேளைகளில் அவருடன் கதைப்பான். கதிரேசனுக்கும் அவனில் இனம்புரியதா அன்பு உண்டு.

நவராசாவின் குடும்பப் பிரச்சினை ஊரில் உள்ள எல்லோருக்கம் தெரியும். விபரமாகத் தெரியாவிட்டாலும் துர்க்கா ஒழுக்கமில்லாத பெண் எனறும், அவள் கணவனுக்கு அடங்கி நடப்பதில்லை என்றும் தெரியும்.

வீட்டுத் திண்ணையில் தலை கவிழ்ந்திருந்த நவராசா கஜேந்திரனைக் கண்டு தன்னைச் சுதாகரித்துச் சிரித்து விட்டு வீட்டினுள்ளே சென்றான்.

''இருதம்பி...'' என்ற கதிரேசன் கஜேந்திரனைப் பார்த்தார். கதிரேசன் எந்த வேளையிலும் மிகவும் மகிழ்வுடன் இருப்பார். அது கஜேந்திரனுக்கு ஆச்சரியத்தைக் கொடுக்கும். ஒருநாள் அவன் அவரிடம் கேட்டான்; ''கதிரேசப்பூ, நான் உங்களை எப்போது சந்தித்தாலும் மிகவும் மகிழ்ச்சியாக இருக்கிறீர்கள். உங்களால் கவலைகளை மறந்து மகிழ்ச்சியாக எப்படி இருக்க முடிகிறது? அதைச் சொன்னீர்களானால் பலர் பயனடைவார்கள''.

கதிரேசன் சிரித்தார். ''எல்லாரும் அதைத்தான் கேட்கிறார்கள். நீ படிப்பில் சரியான கெட்டிக்காரன். எப்படிப்படிக்கிறாய்?'' என்று கேட்டார் கதிரேசன்.

கஜேந்திரன் சிரித்தான்; ''முதலில் நான் கேட்டதற்கு மறுமொழி சொல்லுங்கோ..'' என்றான்.

மீண்டும் கதிரேசன் சிரித்தார். பின்; ‘‘நான் எதையும் செய்வதாக நினைப்பதில்லை. மகாகணபதிதான் என்னைப் படைத்த தந்தை. பிள்ளைக்கு என்னென்ன செய்ய வேண்டுமென்று அவருக்குத் தெரியும். அதனால் நடைபெறுவதை மகிழ்வுடன் ஏற்கிறேன். எனக்கு ஆசை இல்லை; விருப்பு வெறுப்பு இல்லை; மானத்தை மறைக்கத் துணியும் வயிற்றுப் பசிக்கு உணவும் இருந்தால் போதும் என்று நினைக்கிறேன். அதை நீங்கள் மகிழ்ச்சி என்கிறீர்கள்’’ என்றவர், அன்று தாங்க முடியாத துக்கத்தில் இருந்தார்.

‘‘இன்று உங்களது முகத்தில் கவலையின் ரேகைகள் தெரிகின்றன. ஒரு நாளுமில்லாதவாறு குழம்பியிருக்கிறீர்கள்’’ என்றான் கஜேந்திரன.

கதிரேசன் எதுவும் பேசாமல் சிறிது நேரம் இருந்தார். பின்; ‘‘கோயில் மடத்தில் இருக்கும் போது மகா கணபதியின் நினைவைத்தவிர வேறு எவையும் எனது மனதில் இருக்கவில்லை. அதனால் நான் மிகவும் மகிழ்ச்சியுடன் இருந்தேன். இங்கு வந்ததுதம் பந்த பாசங்கள் பற்றிப் பிடித்து விட்டன. நவராசாவை நினைக்கக் கவலையாக உள்ளது. அவனுடைய வாழ்க்கை சீரழிந்துவிட்டது’’ என்று பெருமூச்சு விட்டார் கதிரேசன்.

கஜேந்திரன் அவரது முகத்தைப் பார்த்தான். அவரது முகம் துன்பத்தால் கறுத்திருந்தது. கண்கள் கலங்கியிருந்தன; ‘‘எனக்கு நவராசா மீது அளவுக்கதிகமான பாசம் உண்டு. அவனது வாழ்வில் பல துன்பங்கள் வந்ததை

என்னால் தாங்கிக் கொள்ள முடியவில்லை. அதைப் போலத்தான் உன்னிலும் பாசம் வைத்திருக்கிறேன். நீ ஒழுக்கமானவன்; அறிவுள்ளவன். அதனால் உனது எதிர்காலம் சிறப்பாக இருக்க வேண்டுமென்று விரும்புகிறேன். நவராசா படிக்காதவன். அவன் நான் சொல்லச் சொல்லக் கேட்காது கெட்ட குடியில் பெண் எடுத்து விட்டான். அதனால் துன்பப்படுகிறான். ஆனால் நீ சிறந்த அறிவு தரும் பல நூல்களைக் கற்று, அவற்றின் பொருளை நன்கு உணர்ந்து, பிறருக்கு அவற்றை விளக்கமாக எடுத்துச் சொல்லும் அறிவு மிக்கவன். அப்படியான நீ, சிறந்த நூல்கள் கூறுகின்ற கருத்துக்களைப் பேணி வாழ வேண்டும்...'' கதிரேசன் கூறும் போது கஜேந்திரன் குறுகிட்டுச் சொன்னான்; ``நான் அப்படித்தான் வாழ்வேன்.''

கதிரேசன் சிறிது நேரம் அவனை உற்றுப் பார்த்து விட்டுச் சொன்னார்; ``நவராசாவும் அப்படித்தான் சொன்னவன். அதனால் அவனது வாழ்வு கெட்டு விட்டது. நீயும் அப்படித்தான் பொய் சொல்கிறாய். தணிகாசலம் எனக்குச் சொல்லிக் கவலைப்பட்டது. காதல் கொள்வது குற்றமல்ல. காதல் கொள்ளப் பருவம் வேண்டும். அதற்கு ஒரு முறை உண்டு. அவ்வளவு தான் நான் சொல்வேன். உனக்கு யாவும் விளங்கியிருக்குமென்று நான் நினைக்கிறேன்'' என்றார் கதிரேசன். கஜேந்திரன் அதைக் கேட்டு அதிர்ந்து போனான்.

---

**834. ஓதி உணர்ந்தும் பிறர்க்குஉரைத்தும் தான் அடங்காப்**
**பேதையின் பேதையார் இல்.**

---

சிறந்த நூல்களைக் கற்று, அதன் பொருளை நன்கு அறிந்து, பிறருக்கு அதைக் கற்பித்துக் கொண்டிருப்பவன், அந்த உயர்ந்த கருத்துக்களைத் தன் வாழ்வில் கடைப் பிடிக்கவில்லையென்றால் அவனை விடப் பேதமை உள்ளவன் உலகில் எவனும் இல்லை.

## ஏழு பிறவியில்

“தம்பி, நான் நவராசாவுக்குச் சிவகுருநாதனின் பேர்த்தி வாசுகியைத் திருமணம் பேசினனான். ஆனால் அவள் சிவராஜசிங்கத்தின் மகனான மயூரனை விரும்பினவளாம். அவன் வெளிநாட்டில் இருக்கிறான். அவனை நம்பி வாசுகி நவராசாவைத் திருமணஞ் செய்ய மறுத்திட்டாள். வாசுகிக்கும் மயூரனுக்கும் ஊரில் அவன் இருக்கும் போது காதல் இருந்திருக்கிறது. அவன் வெளிநாட்டிற்குச் சென்ற ஆரம்பத்தில் அவளுக்குக் கொஞ்சக் காசு அனுப்பினவனாம். அதோடை கைத்தொலைபேசியொன்றும் அனுப்பியிருக்கிறான். தற்போதய ஆண்களும் பெண்களும் எதிர்காலத்தை நினைத்தா காதல் கொள்கிறார்கள்?. கண்டதும் காதல்.... பிறகு மயூரன் இன்னொருத்தியைத் திருமணம் செய்திட்டான். பின்பு சிவகுருநாதன் வந்து நடந்ததெல்லாவற்றையும் சொல்லி அவளை நவராசாவைச் செய்யும் படி கேட்டவர். எனக்கும் விருப்பமில்லை. காதலிப்பது தவறென்று நான் சொல்லவில்லை. காதலிக்கிறவை கல்யாணம் செய்ய வேண்டும். இல்லாவிட்டால் பிற்காலத்திலை பெரும் பிரச்சினைகள் உண்டாகும்.” பெருமூச்சுவிட்டுவிட்டுச் சிலகணம் பேசாமல்

இருந்தார் கதிரேசன். பின் வெற்றிலைத் தட்டத்தில் இருந்த புகையிலையை எடுத்துச் சுருட்டி வாயில் வைத்துப் பற்றிப் புகைவிட்டார்.

“நவராசா அவரசப்பட்டு விட்டான். இருபத்தைந்து இலட்ச ரூபா காசு என்றவுடன் அவன் மற்றொன்றையும் நினைக்கவில்லை. காசுதான் வாழ்க்கை என்று உணர்ந்து நான் சொல்லச் சொல்லக் கேளாமல் அவளைக் கட்டிவிட்டான். ஒழுக்கமில்லாத பெண்ணை விரும்பித் திருமணம் செய்பவன் பேதை. அவன் அத்திருமணத்தின் மூலம் தனது ஏழு பிறவிகளிலும் தான் அனுபவிக்கின்ற துன்பத்தை அவளோடு வாழும் அந்த ஒரு பிறவியிலேயே அனுபவித்து விடுவான். இப்ப நவராசா அதைத்தான் அனுபவிக்கிறான். தனக்கு வாழ்க்கை வெறுத்து விட்டதாம். அவளை விவாகரத்துச் செய்ய வேண்டும் என்கிறான். அது அவனாகத் தேடிக் கொண்ட துன்பம். ஆனால் நீ படித்தவன்; பண்புள்ளவன்; பெரியவர்கள் சொல்வதைக் கேட்கக் கூடியவன். அதனால நீ எந்தப் பெண்ணையும் காதலிக்காதே. ஒரு பெண்ணை ஓர் ஆண் விரும்பு முன் அவளது குலம் கோத்திரம் யாவற்றையும் அறிந்து கொள்ளல் வேண்டும். அத்துடன் அவள் எப்படிப்பட்டவள். அவள் முன்பு யாரையாவது காதலித்திருக்கிறாளா...? ஒழுக்முள்ளவளா? என்றெல்லாம் தெரிந்த பின்பு தான் காதலிக் கவேண்டும். அதே போல ஒரு பெண் ஓர் ஆணைக் காதலிக்கு முன் அவனது வரலாறு முழுவதையும் தெரிந்து கொள்ளல் வேண்டும். இல்லாவிட்டால் எதிர்கால வாழ்வு நாசமாகி விடும்.”

‘‘அன்று தணிகாசலம் அண்ணை வித்தியாவைத் துவிச்சக்கரவண்டியில் ஏற்றிச் சென்றதைக் கண்டு விட்டு வேலாயுதபிள்ளை அண்ணைக்குச் சொன்னதால் வித்தியா கண்டபடி ஏசினாள். இப்போது கதிரேசப்புக்குச் சொன்னதால் அவர் உபதேசஞ் செய்கிறார். அவர் இன்றும் யார் யாருக்குச் சொல்லியிருக்கிறாரோ’’ என்று நினைத்தான் கஜேந்திரன்.

‘‘இவர்களின் கதையைப் பார்த்தால் காதலிப்பது பாவம் போலத் தெரிகிறது’’ என்று நினைத்துக் கொண்டிருந்தவனைக் கதிரேசனின் குரல் நிஜ உலகிற்குக் கொண்டு வந்தது.

‘‘அன்று உன்னைப் பற்றித் தணிகாசலம் கவலைப்பட்டார். நன்றாகக் கவலைப் பட்டார். நன்றாகப் படிக்கக்கூடிய நீ, உனது படிப்பு முடிந்ததும் நல்ல குடும்பத்தில் உள்ள ஒரு பெண்ணைப் பார்த்துச் செய்யலாம் தானே. ஊரில் உள்ள பலர் உன்னை மாப்பிள்ளையாக எடுக்க விரும்புகிறார்கள். பெரும் பெரும் கோடீஸ்வரர்களெல்லாம் ஆசைப்படும் நீ சாக்கடையில் விழலாமா…? வாழ்க்கை ஒரு முறை மலரும் மலரைப் போன்றது. அந்த மலர் வாடாத மலர். வாடி விழுந்து விட்டால் பின் மலராது. அதனால் திருமண விஷயத்தில் நாம் மிகவும் கவனமாக இருத்தல ் வேண்டும்; ‘‘ஏழு பிறவியிலும் தான் அடைகின்ற நரக வேதனையின் துன்பத்தைப் பேதை தனது இழிவான செயல்கள் மூலம் ஒரு பிறவியிலேயே தேடிக் கொள்வான்’’ என்று பெரியவர்கள் சொல்வார்கள். மேதையான நீ பேதையாகாதே. நவராசா பேதை. அதனால்

அவனது வாழ்வு சீர்குலைந்து விட்டது. ஆனால் உனது வாழ்வு மேம்பட வேண்டும்'' என்றார் கதிரேசன்.

கஜேந்திரன் பேசத்தோன்றாது மௌனமாக இருந்தான்.

**835. ஒருமைச் செயல்ஆற்றும் பேதை எழுமையும் தான்புக்கு அழுந்தும் அளறு.**

ஒருவன் தனது ஏழுபிறப்பிலும் அடைவதற்குரிய நரகவேதனையைப் பேதை ஒருவன் தனது ஒரு பிறப்பிலேயே அனுபவிப்பான்.

## பேதையின் செயல்

புஸ்பநாதனும் அவளது மனைவி இல்சுமியும் நவராசாவின் வீட்டிற்கு வந்தனர். அந்த நேரம் நவராசாவின் பெற்றோர் அங்கிருக்கவில்லை. நவராசாவும் கதிரேசனும் இருந்தனர்.

நவராசாவைக் அச்சிரிப்பின் பின் கண்ட இலட்சுமி கவர்ச்சியாகச் சிரித்தாள். அந்தச் சிரிப்பைக் கதிரேசன் பார்த்தார். நவராசாவின் மனதில் ஓர் உற்சாகம் பிறந்ததையும் கதிரேசன் கவனித்தார்.

இலட்சுமிக்கு நாற்பது வயதிருக்கும். ஆனால் இருபத்தைந்து வயதுள்ள இளம் பெண்ணைப் போல அவள் தோற்றமளித்தாள். மிகவும் அலங்காரமாக அவள் வந்திருந்தாள்.

சட்டையின் கை முழங்கைக்கு வெகு தூரத்தில் இருந்தது. முதுகின் முக்கால் பகுதி வெறுமையாகக் காட்சியளித்தது. வயிற்றின் பெரும்பகுதி சம வெளியைப் போலத் தெரிந்தது. துர்க்காவும் இவளைப் போலத்தான் ஆடையுடுத்துவாள். அவளைப் பார்க்கக் கதிரேசருக்குப் பிடிக்கவில்லை. அவளால் தான் நவராசா துர்க்காவை மணம் புரிய வேண்டி வந்தது.

"நவம், நீங்கள் இப்படி நடக்கலாமா...? எந்தக் குடும்பத்தில் பிரச்சினை இல்லை? முன்பு இவர் குடித்து விட்டு எத்தனை பிரச்சினைப்பட்டவர். ஊர் முழுவதும் இவரைப் பற்றிக் கேவலமாகக் கதைத்த போதும் அவரை நான் வெறுக்கவில்லை. அவர் என்னை வெறுக்கவில்லை. துர்க்கா அப்படி என்ன சொல்லி விட்டாள். உங்களைக் கமஞ் செய்ய வேண்டாமென்கிறாள். அவளுக்கு விருப்பமில்லாததை நீங்கள் ஏன் செய்கிறீர்கள். அவர் விரும்பியவாறு ஏதாவது வியாபாரம் செய்யுங்கள். ஆம்பிளைக்கு ஒரு தொழில் வேண்டும். அதற்காகத்தான் செய்யுங்கள். நீங்கள் முன்பு வியாபாரம் செய்யும் போது எவ்வளவு உழைத்தனீங்கள். உங்களாலை அது முடியும். ஏன் வீணாகப் பிடிவாதம் பிடிக்கிறீர்கள். துர்க்கா கொஞ்சம் பிடிவாதக்காரியே தவிரக் கெட்டவளல்ல. அவள் தினமும் உங்களுக்காகச் சமைக்கிறாள். நீங்கள் கடையில் சாப்பிடுகிறீர்கள். துர்க்காவிடம் வாங்கிச் சாப்பிட விருப்பமில்லாவிட்டால் என்னிடம் வந்திருக்கலாம். உங்களுக்காக நான் எதையுஞ் செய்வேன். உங்களில உள்ள நல்ல அபிப்பிராயத்தால் தான் நான் அவளை உங்களுக்குத் திருமணஞ் செய்து தர விரும்பினேன். இப்போ துர்க்காவின் வீட்டார்

என்னைக் குறை கூறுகிறார்கள்..'' கண்கலங்கினாள் இலட்சுமி.

அதைக் கண்ட நவராசாவின் நெஞ்சு சிறிது வலிப்பதைப் போலிருந்தது; ''வீட்டுப் பிரச்சினைகள் வெளியாட்களுக்கு எக்காரணம் கொண்டும் தெரியக்கூடாது. தெரிந்தால் மானக்கேடு உங்களுக்குத்தான். நீங்கள் இரண்டு வார காலமாகக் கடையில் மூன்று நேரமும் சாப்பிடுகிறீர்கள். நான் ஒருத்தி இருப்பது உங்களின் நினைவுக்கு வரவில்லை. என்னைப் பிறத்தியாளாக நினைத்து விட்டீர்கள்.'' அந்த வாக்கியத்தை அவள் சற்று அழுத்திச் சொன்னாள்.

நவராசாவின் மனமும் உடலும் மெல்லக் கசிய ஆரம்பித்தது. அதை கதிரேசன் கவனித்தார்.

''கதிரேசப்பா, நீங்கள் பெரியவர்; பேரனுக்குப்புத்தி சொல்லலாம் தானே. இரண்டு வாரகாலமாக அவர் கடையில் சாப்பிடுகிறார். எமது வீட்டுக்கும் வருவதில்லை. நீங்களாவது உணவு கொடுத்திருக்கலாம் தானே...''

கதிரேசனால் அவளின் கேள்விக்கு உடனடியாகப் பதில் கூறமுடியவில்லை. சற்றுச் சிந்தித்தார். ''எனக்கு இவன் குடும்பத்தோடு பிரச்சினைப்பட்டது தெரியாது. தினமும் வருவது போல வந்து போகிறான். இப்ப நீங்கள் வந்து சொன்ன பின்பு தான் எனக்குத் தெரியும். அத்துடன் பிள்ளையென்றாலும் மனைவியோடு பிரச்சினைப்பட்டு வந்தால் அவனை ஆதரித்து உணவு கொடுக்கக்கூடாது. அது அவர்களின் குடும்பப்

பிணைப்பைக் குலைக்கும். சந்தோஷமாக இருவரும் வந்தால் தினமும் கொடுக்கலாம். அத்துடன் இது நாம் செய்து வைத்த திருமணமல்ல; “ஒழுக்க நெறிகளை அறியாத பேதை ஒரு செயலை மேற்கொண்டால் அது நிறைவு பெறாது. அத்துடன் அவன் குற்றவாளியாகி அடிமைப்படுவான்.” என்று பெரியவர்கள் கூறுவார்கள்... அதுபோல நவராசா அப்பெண்ணுக்கு அடிமைப்பட்டு விட்டான். அவள் தனது பணத்தால் இவனை அடிமை கொள்ள விரும்புகிறாள். நீங்கள் ஒற்றுமைப்படுத்தினாலும் குடும்பம் மகிழ்ச்சியாக இராது” என்றார் கதிரேசன்.

இலட்சுமி எதுவும் பேசாது சிரித்தாள். அவளுக்குக் கதிரேசன் மீது கோபம் ஏற்பட்டது. நவராசா கதிரேசனைப் பெரிதாக மதிப்பது அவளுக்குத் தெரியும். அதனால் அவள் கதிரேசன் கூறியது விளங்காதது போலச் சிரித்தாள்

**836. பொய்படும் ஒன்றோ புனைபூணும் கையறியாப்**
**பேதை வினைமேல் கொளின்.**

ஒழுக்கமில்லாத பேதை ஒருவன் ஒரு செயலை மேற்கொண்டால் அச் செயல் நல்ல முறையில் முடிவு அடையாததோடு, அப்பேதை குற்றவாளியாகித் தண்டனை பெறுவான்.

## பேதையின் செல்வம்

“நவம் வாருங்கோ வீட்டை போவம். சின்னச் சின்ன விஷயங்களுக்கெல்லாம் கோவிக்காதைங்கோ. துர்க்காவுடன் ஏதாவது பிரச்சினையென்றால் நீங்கள் என்னுடைய வீட்டை

வாருங்கோ. அங்கே தங்கலாம்; சாப்பிடலாம்; எல்லாஞ் செய்யலாம். அதை விட்டு விட்டு யாரும் இல்லாதவர்கள் மாதிரிக்கடையில் சாப்பிட்டுக் கொண்டு வீடு வாசலில்லாமல் திரிகிறீர்கள். எழும்புங்கோ...'' என்றாள் இலட்சுமி.

''நீங்கள் போங்கோ. நான் வாறன்.'' என்றான் நவராசா.

''நான் காத்துக் கொண்டிருப்பன். துர்க்காவுடன் தான் உங்களுக்குக் கோவம். என்னுடனில்லையே'' சிரித்தாள் இலட்சுமி. அவளது அழகான பற்கள் ஒளிர்ந்து அவனை வசீகரித்தன.

''சரி நான் வாறன் நவம்'' என்று கூறிவிட்டுக் கதிரேசனின் பக்கம் திரும்பிய இலட்சுமி; ''நான் போயிட்டுவாறன் கதிரேசப்பா. நவத்திற்குப் புத்திமதிகள் கூறி அனுப்பி விடுங்கோ'' என்று கூறிவிட்டு நடந்தவள் படலையடிக்குச் சென்று நின்று நவராசாவைப் பார்த்தாள். அந்தப் பார்வை நவராசாவைத் தடுமாற வைத்தது.

''நவம், நீ வீட்டை போ. குடும்பத்தில் ஆயிரம் பிரச்சினைகள் வரும். அதற்காக வீட்டில் சாப்பிடாமலும் அங்கு தங்காமலும் விட்டால் பிரச்சினை தீர்ந்து விடாது. அவள் பணக்காரி; பணம் ஒரு பேய்; கொடிய மிருகம்; அது நல்லவர்களின் கையில் சென்றடைந்தால் தான் அது உரிய பயனைக் கொடுக்கும். தீயவர்களின் கையைச் சென்றடைந்தால் அது நல்லவர்களுக்குத் தீமையைத் தான் தரும். பேதையின் கையில் பணம் சென்றடைந்தால், அதனால் அவனுக்குத்

தொடர்பில்லாத அயலவர்கள் தான் பயனடைவார்கள். அது உண்மை. ஜெயபாலன் பெரிய பணக்காரன். அவன் ஊருக்கு வந்த பின் ஊர்பேர் தெரியாதவர்கள் எல்லோரும் அவனை அடைந்து அவனைப் புகழ்ந்து பெரும் பயனை அனுபவிக்கிறார்கள். ஜெயபாலனது தகப்பனின் சகோரியின் மகன் எவ்வளவு கஷ்டப்படுகிறான். அவனது மகன் கணபதி மத்திய மகா வித்தியாலயத்தில் படிக்கிறான். அவனுக்கு சிவானந்தன் தான் உதவி செய்கிறார். அவன் நாலைந்து முறை ஜெயபாலனைச் சந்தித்துத் தனது நிலைமையை எடுத்துக் கூறியும் எந்தப் பயனும் ஏற்படவில்லை என்று அவன் சொல்லி அழுதான். பணக்காரனாக உள்ளவன் முதலில் தனது சுற்றத்தார்களுக்குத் தான் உதவி செய்தல் வேண்டும்.'' என்று கூறிவிட்டு நிறுத்திய கதிரேசன் சிறிது நேரம் யோசித்து விட்டுச் சொன்னார்; ‘‘நவம் நான் துர்க்காவைப் பற்றிச் சில செய்திகள் அறிந்தனான்'' என்று கூறிவிட்டு நிறுத்தினார்.

நவராசா அவரது முகத்தைப் பார்த்தான்; ‘‘தம்பீ, துர்க்கா கந்தசாமியின் மகன் பாலரூபனுக்கு இருபத்தையாயிரம் ரூபா கொடுத்திருக்கிறாள். அவன் மிகவும் மோசமான குடிகாரன். முன்பு இடம்பெயர்ந்து இருக்கும் போது துர்க்காவின் வீட்டுக்கு அருகில் இருந்தவனாம். அப்போது இவர்களது வீட்டு வேலைகளை அவன் செய்து கொடுத் திருக்கிறான். அந்தப் பழக்கத்தில் துர்க்கா அவனுக்குப் பணம் கொடுத்திருக்கிறாள். இவன் அடிக்கடி சென்று பணம் கேட்டு வாங்குகிறான் போலத் தெரிகிறது.'' என்றார்.

“அவள் பாலரூபனுக்கு மட்டும் கொடுக்கவில்லை. ஊரில் உள்ளவர்கள் அவளிடஞ் சென்று அவளைப் புகழ்ந்து பேசினால் அவள் பணத்தைக் கொடுத்து விடுவாள். அவளுக்கு உழைப்பின் மகிமை தெரியாது; பணம் சம்பாதிப்பதில் உள்ள கஷ்டமும் தெரியாது; அதனால் தலைகால் புரியாது நடந்து கொள்கிறாள். அவளைத் திருத்த முடியாது” என்றான் நவராசா.

“சரி, நீ போ நவம். அவளை நீ திருமணம் செய்து விட்டாய். நல்லவளோ கெட்டவளோ ஏதோ ஒரு மாதிரி வாழத்தானே வேண்டும். நீதான் அவளை விரும்பிச் செய்தனீ. குறைகுற்றம் பார்த்தால் நிம்மதியாக வாழ முடியாது. நிம்மதிதான் வாழ்வு. வாழப்பிறந்த மனிதன் இன்பமாக வாழ வேண்டும். மறு உலகத்தில் இன்பத்தை அனுபவிக்க வேண்டும் என்பதற்காக இந்த உலக வாழ்க்கயில் நாம் தானதர்மஞ் செய்து நல்ல முறையில் வாழ வேண்டும் என்று எமது மதம் கூறுகிறது. இவ்வுலக வாழ்வு சிறந்தால் தான் அடுத்தடுத்த பிறவிகளும் சிறப்படையும். அதற்கு ஒழுங்கான ஒரு பெண் இல்லத்தரசியாய் அமைய வேண்டும். எனக்கு வாய்த்த பெண் குடும்பப் பாங்கில்லாதவள் என்று கவலைப்படாது அவளைக் குடும்பப்பாங்குள்ளவளாக மாற்ற முயற்சி செய். அதைவிட்டு விட்டு குடித்துக் கொண்டும் மனைவியுடன் பிரச்சினைப்பட்டுக் கொண்டு மிருந்தால் நீண்டநாள் நீ வாழமாட்டாய்” என்றார் கதிரேசன்.

**837. ஏதிலார் ஆரத் தமர்பசிப்பர் பேதை
பெரும்செல்வம் உற்றக் கடை.**

பேதை ஒருவன் பெருஞ்செல்வத்தைப் பெற்றால் அவனோடு தொடர்பில்லாதவர்கள் பெரும் பயனைப் பெறுவர். உறவினர் பசியால் துன்பப்படுவார்கள்.

## பித்தன் குடித்த கள்

ஜெயபாலனின் பிறந்த தினத்தன்று ஊரவர்கள் வந்து சென்ற பின்பு தனது நண்பர்களுக்குப் பிரத்தியேகமாக மது வகைகளை ஒழுங்கு செய்திருந்தான். பிறந் தினத்தன்று காலை பத்து மணிக்கே தனபாலன் சிறிதளவு குடித்து விட்டான். அவனுடைய நண்பர்களும் அவனுடன் சேர்ந்து குடித்து விட்டனர். அதனால் ஜெயபாலனது பிறந்ததினவிழாவுக்கு வந்த ஊரவர்கள் சிலருடன் தனபாலன் பிரச்சினைப்பட்டான்.

நான்கு மணிக்கு கஜேந்திரன் வந்தான். ஊர் மக்கள் பலர் பிறந்த தின விழாவுக்கு வந்திருந்தனர். பிறந்த தின விழாவுக்காகப் பிரத்தியேகமாகப் பெரியதொரு மண்டபம் அமைக்கப்பட்டு மிகவும் அழகாகச் சோடனை செய்யப்பட்டிருந்தது. அம்மண்டபம் முழுவதும் பல வர்ண மின்குமிழ்கள் பளீச்சிட்டன. வாசலில் பூரண கும்பம் வைக்கப்பட்டிருந்தது. வருவோரை பலர் நின்று வரவேற்றுக் கொண்டிருந்தனர். ஆண்கள் வந்தால் ஆண்கள் அவ்களுக்குச் சந்தணத் திலகமிட்டு வரவேற்றனர். பெண்கள் வந்தால்

பெண்கள் சந்தணத்திலகமிட்டு அவர்களை வரவேற்றனர்.

யோகநாதன் குழுவினர் மங்கள வாத்தியம் இசைத்துக் கொண்டிருந்தனர். கஜேந்திரனைக் கண்டதும், தனபலன் அவ்விடத்திற்கு வந்தான்; “கஜனை நான் தான் திலகமிட்டு வரவேற்க வேண்டும்” என்று கூறியவாறு அவனது நெற்றியில் திலகமிட்டான். பின் பன்னீா தெளித்தான். அதன்பின் அவனை அழைத்துச் சென்று ஜெயபாலனுக்கு அருகில் விட்டான். ஜெயபாலன் கஜேந்திரனைக் கட்டித் தழுவினான். பின் அவனை அழைத்துச் சென்று ஆசனத்தில் இருத்தினான். அழகான பெண்ணொருத்தி ஒரு தட்டில் சிற்றுண்டி வகைகளைக் கொண்டு வந்து கஜேந்திரனுக்குக் கொடுத்தாள்.

கஜேந்திரன் புறப்பட்ட போது தனபாலன் வந்து சொன்னான்; “அதிபர், வேலாயுதபிள்ளையண்ணை தணிகாசலமண்ணை ஆகியோருக்கு நானும் அண்ணாவும் வீடு தேடிப் போய்ச் சொன்னனாங்கள். அவை வரேல்லை. அது எனக்குக் கவலையாக இருக்கு” என்று விம்மி விம்மி அழுதான். பிறந்த தினவிாவுக்கு வந்தவர்கள் அழுகின்ற தனபாலனை ஆச்சரியத்துடன் பார்த்தனர்.

அன்று ஆறுமணிக்குத் தனபாலனின் நண்பர்கள் மதுமயக்கத்தில் இருந்தனர். ஒருவன் ஒலிபெருக்கியின் சத்தத்தைக் கூட்டினான். அடுத்தவன் ஒலிபெருக்கியை நிறுத்தினான். இரண்டுபேரும் தர்க்கப்பட்டு சண்டை செய்தனர்.

சிறு சச்சரவு பெரும் சண்டையானதால் அது கோஷ்டி மோதலாகி விட்டது. அதனால் இரு பகுதியினரும் மண்டபத்தில் இருந்த நாற்காலிகளை எடுத்து அதனால் ஒருவருக்கொருவர் அடித்தனர். பிறந்ததினத்திற்கு வந்தவர்கள் அச்சண்டையைக் கண்டு பயந்து வீட்டு வாசலிலேயே திரும்பி விட்டனர். அன்ற இரவு காவல்துறையினர் ஜெயபாலனின் வீட்டுக்கு விசாரணைக்காக வந்தனர். ஜெயபாலன் காவல் துறையினருக்குப் பணமும் மதுபான வகைகளும் கொடுத்து ஒரு மாதிரியாகச் சமாளித்து விட்டான்.

மறுநாட்காலை தனபாலசிங்கம் கஜேந்திரனைக் கண்டார்; “கஜன், நீ நேற்று மாலை ஜெயபாலனின் பிறந்த தின விழாவுக்குச் சென்றதாக அறிந்தேன். உன்னைத் தனபாலன் அமர்க்களமாக வரவேற்று உபசரித்தானாம். நாங்கள் யாரும் போகவில்லை. ஏனென்றால் அவர்கள் கெட்டவர்கள். அவர்களுக்கு நல்லது கெட்டது எதுவும் தெரியாது. அன்று குடித்துவிட்டுச் சண்டை பிடித்திருக்கிறார்கள். கீழ் மக்களின் வீடுக்களுக்குச் செல்வதும், அவர்கள் நடத்தும் விழாக்களிலும் கலந்து கொள்வதும் கூடாது. அறிவற்றவனின் கையில் செல்வம் கிடைப்பது, ஏற்கனவே பித்துப் பிடித்தவன் மேலும் கள்ளைக் குடித்து விட்டு அட்டகாசஞ் செய்வதைப் போன்றதாகும். அதனால் தான் நாம் செல்லவில்லை. பணம் வந்தால் அதை நல்ல வழியில் செலவு செய்ய வேண்டும். ஜெயபாலன் அப்படியா செலவு செய்கிறான்? ஒருவன் விழாக் கொண்டாடுவது மகிழ்ச்சிக்காக. தானும் மகிழ்ந்து வருபவர்களையும் மகிழ்விக்கவே விழாக்கள் கொண்டா டப்படுகின்றன. இதை விட்டு விட்டு தானும் பிரச்சினைப்பட்டு வருபவர்களையும் பிரச்சி

னைக்குள்ளாக்குவதென்றால்....... இன்று காலை மணியமும் தேவனும் இராத்திரிப் பிரச்சினையைக் கதைத்துச் சண்டை பிடித்தவர்களாம். காவல்துறையினர் அவர்களைக் கைது செய்ததாகக் கேள்விப்பட்டேன்'' என்றார் தனபாலசிங்கம்.

**838. மையல் ஒருவன் களித்தற்றால் பேதைதன்
கையொன்று உடைமை பெறின்.**

பேதையின் கையில் செல்வம் கிடைப்பது, பித்துப் பிடித்த ஒருவன் கள் குடித்துத தடுமாறுவதை ஒக்கும்.

## இனிய நட்பு

“நான் தனபாலன் மீதோ அல்லது ஜெயபாலன் மீதோ கொண்ட நட்பின் காரணமாகச் செல்லவில்லை. தனபாலனும், ஜெயபாலனும் பல தடவைகள் சொன்னதாலும், வீட்டுக்கு வந்ததாலும் தான் சென்றேன். நேற்றுத் தனபாலன் இரண்டு மணி போல எனது வீட்டுக்கு வந்து விட்டான். நான் கட்டாயம் வருகிறேன். நீ போ என்று சொல்லி அவனை எனது வீட்டிலிருந்து அனுப்பப்பட்டபாடு கொஞ்ச நஞ்சமல்ல. சுவாமியாரின் பிரசங்கத்தை நெடுகக் கேட்கிறீர்கள். அதன்படி நடக்கிறீர்களா? சுவாமியார் சென்ற வெள்ளிக்கிழமை என்ன சொன்னவர்?'' என்று கேட்டான் கஜேந்திரன்.

“தனபாலசிங்கம் சுவாமியார் என்ன பேசினவர் என்பதை மறந்து விட்டார். நீங்கள் அவர் பேசியதை மறந்திருப்பீர்கள். அவர் சொன்னார்;

“மற்றவர்களிடம் தீய தன்மை இருப்பதாக நீ ஒருபோதும் எண்ணாதே. தீய தன்மை அவனது அறியாமையால் தான் அவனுள் உருவாகிறது. அவனைத் தீயவனென்று ஒதுக்கி வைத்தால் அவன் என்றும் தீயவனாகவே வாழ்வான். அவன் திருந்த வேண்டும். அவன் திருந்தினால் தான் அவனைச் சூழவுள்ளவர்கள் பிரச்சினைகள் இன்றி வாழ்வார்கள். ஒருவனைத் திருத்த வேண்டுமென்று நினைப்பவன், அவனோடு நெருங்கிப் பழகினால்தான் அவனைத் திருத்த முடியும். அவன் கெட்டவன்; பாவஞ் செய்தவன் என்று நினைத்து அவனை ஒதுக்கி வைத்தால் அவன் திருந்த நீங்கள் இடமளிக்கவில்லை என்றே நான் சொல்வேன்” என்றவர். அதற்காகத்தான் நான் சென்றேனே தவிர அவன் மீதிருந்த அன்பால்செல்லவில்லை. அதே போல வேலாயுதபிள்ளை அண்ணை மிகவும் நல்லவர்; ஒழுக்கமானவர்; அன்பே உருவானவர்; மற்றவர்களுக்கு உதவுபவர். அப்படியானவர் தனபாலனைப் போலத் தாழ்ந்து விட்டார் என்றுதான் சொன்னேன். நேற்று மணியம் தேவனுக்கு அடித்ததைக் குறைகூறும் நீங்கள் அன்று வேலாயுதபிள்ளை அண்ணை தனபாலனுக்கு அடித்ததைச் சரி என்று ஏன் சொல்கிறீர்கள்? சண்டித்தனத்தாலும் அடாவடித்தனத்தாலும் தான் தவறு செய்பவர்களைத் திருத்த வேண்டு என்று சொல்கிறீர்களா? நான் அதைச் சொன்னதற்காகவும், நேற்று ஜெயபாலனின் பிறந்ததின நிகழ்விற்குச் சென்றதற்காகவும் என்னைக் குற்றவாளியாகக் கருதுகிறீர்கள். அதைப்பற்றி நான் கவலைப்படவில்லை. ஏனென்றால் நான் எனது மனச்சாட்சியின் படி தான் நடப்பவன்.” என்றான் கஜேந்திரன்.

“நீ சொன்னதெல்லாம் சரி. ஆனால்தனபாலனைக் கடைசிவரையும் திருத்த முடியாது. அவனை அன்பாலோ அல்லது பலாத்காரத்தாலோ திருத்தலாமென்று நினைப்பது பேதைமை.” என்றார் தனபாலசிங்கம்.

“உண்மைதான், தனபாலனைப் போன்ற பேதையிடம் கொள்ளும் நட்பு மிகவும் இனிமையானது ஏனென்றால் தேவையில்லையென்று கருதி அவனது நட்பைத் துண்டித்தால் அப்பிரிவால் துன்பம் உண்டாகாது” என்று சிரித்தான் கஜேந்திரன்.

முதல்நாள் இரவு தனபாலசிங்கத்தைச் சந்தித்த வேலாயுதபிள்ளை சொன்னார்; “இப்போ கஜேந்திரனின் போக்கு முற்றாக மாறிவிட்டது. அன்றைக்கு நான் தனபாலனுக்கு அடித்தது தவறு எனறு அடித்துச் சொல்கிறான். அது தவறென்றாலும் அதைப் படித்தவன் சொல்லக் கூடாது. அத்துடன் இன்னொருவனுக்கு நிட்சயிக்கப்பட்டவளுடன் சுற்றித் திரிகிறான். நேற்று ஜெயபாலனின் பிறந்த தின விழாவுக்குப் போயிருக்கிறான். இவனின் போக்குச் சரியில்லையென்று விக்னேஸ்வரமூர்த்தியும் சொல்லிக் கவலைப்பட்டவர்” வேலாயுதபிள்ளை கூறியது தனபாலசிங்கதகின் காதில் ஒலித்தது.

“அவர்கள் அப்படிச் சொல்கிறர்கள். “எதைப்பற்றியும் நான் கவலைப்படவில்லை. ஏனென்றால் நான் எனது மனச்சாட்சியின் படிதான் நடப்பன்” என்று கஜேந்திரன் சொல்கிறான்” என்று நினைத்தார் தனபாலசிங்கம்.

“தனபாலசிங்கண்ணை இங்குள்ள பலர் இப்போது கனவு காண்கிறார்கள் போலத் தோன்றுகிறது. நான் கற்றவன். நினைவில் கூடத் தவறான எண்ணம் எனது மனதில் உருவாக மாட்டாது. தீயவர்களுடன் கடைசி வரையும் நான் நட்பு வைக்க மாட்டேன். ஏனென்றால் தீயவர்கள் நல்லவர்களாக மாறினாலும் அதைச் சமூகம் ஏற்காது. அவனுடன் சேருபவனையும் குற்றங்காணும். படித்த நீங்களே நான் ஜெயபாலனின் பிறந்த தின விழாவுக்குச் சென்றதைத் தவறாக நினைக்கிறீர்கள்.” என்றான் கஜேந்திரன்.

தனபாலசிங்கத்தால் பேச முடியவில்லை.

**839. பெரிதுஇனிது பேதையார் கேண்மை; பிரிவின்கண்
பீழை தருவதுஒன்று இல்.**

பேதையரின் நட்பு மிகவும் இனிமையானது, ஏனென்றால் அவரை விட்டுப் பிரியும் போது சிறிதளவாவது துன்பம் ஏற்படுவதில்லை.

## அசுத்தம் மிதித்த கால்

“கஜேந்திரன் அடக்கமானவன்; ஒழுக்கம்மிக்கவன்; பெரியோரை மதித்துப் போற்றி நடப்பவன் என்றெல்லாம் எண்ணியிருந்தவர்கள் இன்று அவனைப் பற்றி தவறாக நினைக்கிறார்கள். அவன் அப்படியானவனல்ல என்று நான் நினைத்து

அன்று வேலாயுத பிள்ளையுடன் வாதாடியது பிழை.'' என்று நினைத்தார் தனபாலசிங்கம்.

அன்று வேலாயுதபிள்ளை சொன்னார்; ‘‘மனிதர்களுடைய நடத்தைகளைக் கணிப்பிடுவது மிகமிகக் கடினம். கஜேந்திரன் தனது தேவைகைளைப் பூர்த்தி செய்வதற் காகவும், தன்னை மிகவும் நலலவன் என்று காட்டிக் கொள்வதற்காகவும் தான் நடிக்கிறான். ஓடி ஓடி வேலைகளைச் செய்கிறான். தானில்லா விட்டால் இக்கிராமத்தில் பொது வேலைகள் செய்ய யாருமில்லை என்று நினைக்கிறான். அவன் அப்படி நினைத்தால் பரவாயில்லை. எம்மையும் அப்படி நினைக்க வைத்து விட்டான். ஊரில் யாரென்றாலும் எதைச் செய்வதானாலும் கஜேந்திரனைக் கேளுங்கள் என்று சொல்லு மளவிற்கு அவன் தன்னைத் தயார்படுத்தி வைத்து விட்டான். இப்போ அவன் தனது சுய ரூபத்தைக் காட்டி விட்டான்'' என்று வேலாயுதபிள்ளை சொன்னது அவரது காதுகளில் ஒலித்தது.

‘‘என்ன தனபாலசிங்கண்ணை யோசிக்கிறியள்? நான் அறிவற்ற பேதையான ஜெயபாலனை மேதையாக ஏற்று விட்டேன் என்று நினைக்கிறீர்களா...? நாம் உலக நடைக்கு ஏற்ப நடக்க வேண்டும். இப்பொழுது ஜெயபாலனின் பணத்திற்காக அவனை எல்லோரும் பெரியவனாகக் கணிக்கிறார்கள். சிலநாட்களுக்கு முன்பு சுவாமியார் மகா கணபதி ஆலயத்தில் அருளுரை நிகழ்த்தும் போது ஜெயபாலனைக் குறித்துச் சொன்னவர்; ‘‘ஒரு பொருளாக மதிக்கத் தகாதவரையும் மதிப்பு மிக்கவராகச் செய்வது செல்வம். எல்லா நன்மைகள்

உடையவர்களாக இருந்தாலும் பொருள் இல்லாதவரை எல்லாரும் இகழ்வார்கள். எந்த நன்மையும் அற்றவர்களாக இருந்தாலும் பொருள் உடையவர்களை எல்லாரும் புகழ்வார்கள். அதனால் சேர்க்கும் வழியறிந்து அறவழியில் செல்வத்தைத் தேடுங்கள். அச் செல்வம் தான் சுற்றத்தை வளர்க்கும். இன்பத்தை அள்ளிக் கொடுக்கும்'' என்றவர். ஒரு நாணயத்திற்கு இரண்டு பக்கங்கள் உள்ளதைப் போல மனிதனுக்கும் இரண்டு பக்கங்கள் உண்டு. சிலருக்கு இரண்டு பக்கமும் நல்லதாக இருக்கும். சிலருக்கு இரண்டு பக்கமும் கெட்டதாக இருக்கும். சிலருக்கு ஒரு பக்கம் கெட்டதாகவும மற்றப்பக்கம் நல்லதாகவும் இருக்கும். ஜெயபாலன் நான் கடைசியாகக் கூறிய இயல்புடையவன் ஒரு நேரம் அவன் நல்லதைச் செய்கிறான். இன்னொரு நேரம் ˙அறியாமையால் தீயவற்றைச் செய்கிறான். அவனது பிறந்த தினத்திலன்று அவன் குடிக்க வில்லை. அவனது தம்பியான தனபாலனும் நண்பர்களும் தான் குடித்து விட்டுக் கலாட்டா செய்தது. அதற்கு மூலகாரணமாக இருந்தது யார் தெரியுமா?'' என்று கேட்டு விட்டு நிறுத்தினான் கஜேந்திரன்.

தனபாலசிங்கம் தடுமாறியபடி கஜேந்திரனைப் பார்த்தார்.

``வேலாயுதபிள்ளை அண்ணை, நவராசாவிடஞ் சென்று புஸ்பநாதனையும் கூட்டிக் கொண்டு ஜெயபாலனின் பிறந் தினத்திற்குச் செல்லச் சொல்லியிருக்கிறார். அங்கு சென்று ஜெயபானோடு சேர்ந்து குடிக்கும் படியும் சொல்லியிருக்கிறார். ஜெயபாலன் புஷ்பநாதனின்

நண்பன். அதனால் இருவரும் குடித்திருக்கிறார்கள். பின் அவர்களுக்கு வெறி ஏறிய பின் அவர்கள் தான் வந்தவர்களுக்குச் சாராயம் கொடுத்தது. வேலாயுதபிள்ளை அண்ணை நன்கு திட்டமிட்டு ஜெயபாலனின் பிறந்த தினத்தைத் தனபாலனைக் கொண்டு குழப்பியிருக்கிறார். இதையெல்லாம் நான் அறிந்திட்டன். இவையெல்லாம் பெரிய மனிதர்களா....? அதைவிட ஜெயபாலனை இலக்கியப் பேரவையின் போசகராக நியமிக்கும் படி புஷ்பநாதன் வேலாயுதபிள்ளை அண்ணையைக் கேட்டிருக்கிறான். வேலாயுதபிள்ளை யண்ணை புஸ்பராசாவுக்கு சொன்னவராம்; ''அறிஞர் கூடியுள்ள சபையில் அறிவற்றவன் நுழைவது அசுத்தத்தை மிதித்த காலைக் கழுவாது படுக்கையறையில் சென்று படுப்பதைப் போன்றது. அதனால் அவனைத் தெரிய முடியாது. அறிவுள்ளவர் சபை அது என்றாராம்;'' அதைப் புஷ்பநாதன் ஜெயபாலனுக்குச் சொல்லியிருக்கிறான். அதனால் ஜெயபாலன் கோபங் கொண்டுள்ளான்.'' என்றான் கஜேந்திரன்.

தனபாலசிங்கம் கஜேந்திரனை வியப்புடன் பார்த்தார்; ''தானும் வேலாயுத பிள்ளையும் சேர்ந்து போட்ட திட்டம் இவனுக்கு எப்படித் தெரிய வந்தது'' என்று நினைக்க அவருக்குப் பயமாக இருந்தது. விக்னேஸ்வரமூர்த்திக்குத் தெரிந்தால் அவரின் முகத்தில் விழிக்க முடியாது.'' என்பதை நினைக்க அவருக்கு வியர்த்தது.

**840. கழாஅக்கால் பள்ளியுள் வைத்தற்றால் சான்றோர்**
**குழாஅத்துப் பேதை புகல்.**

அறிஞர் கூடியிருக்கும் சபையுள் பேதை ஒருவன் செல்வது, ஒருவன் அசுத்தத்தை மிதித்த காலைக் கழுவாது படுக்கை அறைக்குள் செல்வதைப் போன்றது.

## மிகப் பெரிய கொடுமை

அன்ற இலக்கியப் பேரவையில் பண்டிதர் கந்தையா உரையாற்றிக் கொண்டி ருந்தார். ஊரில் உள்ள பெரும் பெரும் பிரமுகர்களும் அறிஞர்களும் மேடையில் வீற்றிருந்தனர். பண்டிதர் கந்தையாவுக்குப் பல பிரமுகர்கள் மலர்மாலை அணிந்தனர். பலர் பொன்னாடை போர்த்தினர். அதைப் பார்த்த ஜெயபாலனுக்குத் தானும் அவருக்குப் பொன்னாடை போர்த்த வேண்டும் என்ற எண்ணம் உண்டானது. அருகில் இருந்த புஷ்பநாதனிடம் தனது மனதில் தோன்றியதைச் சொன்னான்.

‘‘பொன்னாடை போர்த்திக் கௌரவிப்பது, மலர்மாலை அணிந்து சிறப்பிப்ப தெல்லாம் அறிவுடையவர்கள் செய்யும் செயல்கள். சென்ற வாரம் நீ இலக்கியப் பேரவைக்கு இலட்சக் கணக்கில் பணம் கொடுத்து அதில் ஓர் உறுப்பினராக வேண்டும் என்று ஆசைப்பட்டாய். நான் அதை வேலாயுதபிள்ளையிடம் சொல்ல அவர் என்ன சொன்னவர்; ‘‘அவன் பெரிய பணக்காரன் தான். பணக்காரரை இலக்கியப் பேரவையிலை உறுப்பினர்களாக்குவதில்லை. அறிவுள்ளவரைத் தான் இலக்கியப் பேரவையில் உறுப்பினராகச் சேர்க்கிறது. அறிஞர்கள் கூடியுள்ள அவையில்

அறிவற்றவன் நுழைவது, அசுத்தத்தை மிதித்த காலைக் கழுவாது படுக்கை அறையில் நுழைந்து படுப்பதைப் போன்றது'' என்றவர். அதுக்குப் பிறகு உனக்கு உந்த ஆசை வரலாமே? கதிரேசன் சொல்வார்; ''இல்லாமைக் கொடுமைகள் பலவற்றுள்ளும் அறிவு இல்லை என்னும் பெருங் கொடுமையே மிகப் பெருங்கொடுமை என்று பெரியவர்கள் கூறுவார்கள். நான் அடுத்த நேரக்கஞ்சிக்கு வழியில்லாதவன் தான். ஆனால் ஊரில் உள்ள பெரும் பணக்காரர்களை விட அறிவுள்ளவன் நான்'' என்பார். அத்துடன் ஊரில் எத்தனையோ பணக்காரர்கள் இருக்கிறார்கள். அவர்களெல்லாம் இலக்கியப் பேரவையில் நடைபெறும் நிகழ்வுகளுக்கு வருவதில்லை. மணிவண்ணன் பெருங் கோடீஸ்வரன். அவனே இலக்கியப் பேரவையில் உறுப்பினனாய் இல்லை. உனக்கேன் இந்த ஆசை வந்தது'' என்றான்.

புஷ்பநாதன் அப்படிச் சொல்லியும் ஜெயபாலனுக்குப் பண்டிதருக்குப் பொன்னாடை போர்த்த வேண்டுமென்ற ஆசை போகவில்லை. அதனால் சொன்னான்; ''நீ போய் ஒரு பொன்னாடை வாங்கி வா. நான் கொண்டு சென்று போர்க்கிறேன்'' என்றான்.

''நான் இங்கு வருவதே இல்லை. நீ கேட்டதற்காக வந்தனான். நாங்கள் இருவரும இங்கு வந்ததைக் கண்ட சனம்; ''இவங்கள் ஏன் இஞ்சை வாறாங்கள். இஞ்சை பேசுறது இவர்களுக்கு விளங்குமா...? இவங்கள் குடித்து விட்டு வந்து நல்லதொரு நிகழ்வைக் கெடுக்கப் போறான்கள்'' என்றவர்கள். நான் போறன், நீ இருந்து பண்டிதரின்

பேச்சைக் கேட்டு விட்டு வா'' என்று சொல்லி விட்டு எழுந்தான் புஸ்பநாதன்.

''இரு... இரு... நான் பொன்னாடை போர்த்தவில்லை'' என்றான் ஜெயபாலன். அதைக் கேளாதவன் போலப் புஷ்பநாதன் எழுந்து சென்றான்.

''மனிதர்கள் மனிதத்தன்மையுடனும், உயர்ந்த நோக்கங்களுடனும், தெய்வீகத் தன்மையுடனும், நல்ல இலட்சியங்களுடனும் வாழ வேண்டும். மனித நேயம் இல்லாமல் போனால் ஒரு மனிதன் மிருகமாக மாறி விடுவான். மனித நேயத்தை மனிதனுள் வளர்த்து மிருகத் தன்மையை மனித இதயத்திலிருந்து அகற்றுவது கல்வியறிவு. இல்லாமைக் கொடுமைகள் பல உண்டு. பணம் இல்லை; உணவு இல்லை; உடை இல்லை; இப்படிப் பலவற்றைச் சொல்லிக் கொண்டே இருக்கலாம். இக்கொடுமைகள் எல்லாவற்றிலும் மிகப் பெருங்கொடுமை அறிவு இல்லாமையே ஆகும்.'' பண்டிதர் பேசிக் கொண்டிருந்தார். அதைப் பொறுமையாக இருந்து ஜெயபாலனால் கேட்க முடியவில்லை. அதனால் அவன் ஆசனத்தை விட்டு எழுந்தான். சபையில் கூடியிருந்தவர்கள் கரகோஷம் செய்து பண்டிதருக்கு உற்சாகமூட்டிக் கொண்டிருந்தனர். ஜெயபாலன் திரும்பி ஒவ்வொருவராகப் பார்த்தான். ஒவ்வொருவரினது முகத்திலும பரவசம் காணப்பட்டது. மெல்ல நடந்து மண்டபத்திற்கு வெளியே வந்தான். மண்டபத்தினுள் இருக்க இடம் போதாமையால் பலர் மண்டப வாசலில நின்றனர். அவன் சிரமப்பட்டு வெளியே வந்தான். அவனது

மோட்டார் வண்டிச் சாரதியைக் காணவில்லை. தேடிப் பார்த்தான். அவன் உலகை மறந்து மண்டப வாசலில் நின்று பண்டிதரின் பேச்சைக் கேட்டுக் கொண்டு நின்றான்.

**841. அறிவின்மை இன்மையுள் இன்மை பிறிதுஇன்மை
இன்மையா வையாது உலகு.**

இல்லாமையாகிய கொடுமைகள் பலவற்றிலும் அறிவு இல்லாமை என்னும் கொடுமையையே மிகப் பெரும் கொடுமையாக உலகம் கருதுகிறது.

## நல்வினையே

கணேசலிங்கம் புஷ்பநாதனின் சகோதரியின் கணவன். அவனது மகன் காண்டீபனுக்கு இருதயத்தில் ஒரு துவாரம் இருந்தது. கணேசலிங்கத்திற்கு அவன்தான் ஒரே ஒரு பிள்ளை. திருமணம் செய்து பத்து ஆண்டுகள் பிள்ளைகளில்லாததால் அவன் நாவலர் ஸ்ரீவித்தியா மகா கணபதி ஆலயத்திலிருந்தான்; விரதங்கள் யாவும் பிடித்தான்; தொண்டு துரவுகள் செய்தான். இருப்பினும் பிள்ளை பிறக்கவில்லை. அதனால் மனம் வருந்திய அவன் சுவாமியாரிடஞ் சென்று தனது குறையை முறையிட்டான்.

சுவாமியார் சொன்னார், "மகனே, எல்லாம் இறைவனால் தான் மனிதனுக்குக் கொடுக்கப்படுகின்றன. பிரார்த்தனையால் மட்டும்தான் நாம் எதையும் பெற முடியும். கடவுள் அன்பானவர்:

கருணைமிக்கவர்; பக்கதர்களின் வேண்டுகோளை நிறைவேற்றுவார். ஆகையால் உனக்குக் கட்டாயம் குழந்தை கிடைக்கும் நீ மகா கணபதி மேலுள்ள நம்பிக்கையை இழக்காதே. கடவுள் மீது உனக்குள்ள நம்பிக்கை உறுதியானதாக இருத்தல் வேண்டும். எந்தச் சந்தர்ப்பத்திலும் நம்பிக்கையீனம் ஏற்படக்கூடாது. நம்பிக்கையீனம் ஏற்பட்டால் எந்தக் கருமமும் நடைபெறமாட்டாது.'' என்றார்.

சுவாமியாரின் வார்த்தைகளில் நம்பிக்கை வைத்த கணேசலிங்கத்திற்கு ஓர் ஆண் குழந்தை பிறந்தது. அந்தக் குழந்தை பிறந்ததிலிருந்து நோயாளியாகவே இருந்தது. அதனால் கணேசலிங்கத்திற்குத் தினமும் பணம் செலவாகிக் கொண்டிருந்தது. "அக் குழந்தை பிறந்ததைவிடப் பிறக்காமல் விட்டிருக்கலாம்'' என்று மனம் வருந்தினான் கணேசலிங்கம்.

காண்டீபனுக்கு இருதய சத்திர சிகிட்சை செய்ய வேண்டுமென்று வைத்தியர்கள் கூறினர். அதற்கு இலட்சக் கணக்கில் பணம் தேவைப்பட்டது. அதனால் அவன் தனது மைத்துனனான புஷ்பநாதனிடஞ் சென்றான்.

"என்னுடைய நிலைமை உனக்குத் தெரியும். ஏதோ நான் கொஞ்சம் உதவி செய்கிறேன்'' என்ற புஷ்பநாதன் சிறிது நேரம் யோசித்த விட்டுச் சொன்னான் "நான் இன்று மாலை ஐந்து மணிக்கு ஜெயபாலனின் வீட்டுக்குச் செல்கிறேன். நீ அங்கு வா. நீ நான் கூறி வந்திருப்பதாகச் சொல்லாதே. அவனைக் கொஞ்சம் புகழ்ந்து சொல்லுதல் வேண்டும். சில சமயம் அவன்

மனமிசைந்தானானால் உனக்குப் பணம் தருவான். உனது அதிஷ்டத்தைப் பொறுத்துத்தான் யாவும் நடைபெறும். சென்ற வாரம் நல்லையா தன்னுடைய மகனின் படிப்புக்கு உதவி செய்யுமாறு ஜெயபாலனது காலைப் பிடித்துக் கெஞ்சியும் அவன் ஒரு சதம் கூடக் கொடுக்கவில்லை. ஆனால் கிருஷ்னன் மருந்துவாங்க வெனச் சும்மா கேட்டான். ஜெயபாலன் ஐயாயிரம் ரூபா கொடுத்தான். வருமுன் நாவலர் ஸ்ரீ வித்தியா மகா கணபதிக்குத் தேங்காய் உடைத்துக் கற்பூரம் கொழுத்தி நேர்த்திக்கடன் வைத்துவிட்டு வா. அவன் பணம் தந்தால் உனது மகனின் நல்வினை என்று தான் சொல்லுதல் வேண்டும்'' என்றான் புஷ்பநாதன்.

அன்று மாலை ஐந்து மணிக்குக் கணேசலிங்கம் நாவலர் ஸ்ரீ வித்தியாலய மகா கணபதி ஆலயத்திற்கு வந்து, கற்பூரம் கொழுத்தித் தேங்காய் உடைத்து வணங்கி விட்டு ஜெயபாலனது வீட்டுக்கு வந்தான்.

ஜெயபாலனும், புஷ்பநாதனும், நவராசாவும் அங்கிருந்தனர். கணேசலிங்கத்தைக் கண்ட ஜெயபாலன்; "நான் வந்து ஒருமாதமாச்சு இண்டைக்குத்தான் உமக்குத் தெரிந்ததோ?" என்றான்.

அவனது பேச்சைக் கேட்ட கணேசலிங்கம் சற்று மனம் தளர்ந்து: "மகா கணபதியே'' என்று மனதுள் நினைத்தான்: 'இவனின் பேச்சுப் பிழை'' என்று நினைத்தான் புஷ்பநாதன்.

‘என்னண்ணை செய்யிறது. பிள்ளை ஒன்றிருக்கு. அவன் பிறந்த நாளில் இருந்து வருத்தம். நெடுக மருந்து தான். அதனால் ஒரு இடமும் போய் வர முடியாமல் இருக்கு’’ என்றான் கணேசலிங்கம்.

‘‘பாவம் கணேஷ் தினமும் மருந்திற்குப் பணம் செலவு செய்து செய்து ஒட்டாண்டியாய்ப் போனான். இப்ப இருதய சத்திர சிகிட்சை செய்ய வேணும். காசு கணக்க வேணும்......’’ என்று நவராசா சொல்லிக் கொண்டிருக்கும் போது ஜெயபாலன் சொன்னான்: ‘‘கணேஷ் நீ ஒன்றுக்கும் யோசிக்காதை நான் இருக்கிறன். உன்ரை பிள்ளை இனி என்ரை பிள்ளை’’ என்றான்.

அதைக் கேட்ட கணேசலிங்கம் திகைத்துப் போனான். ‘‘மிகவும் நன்றி அண்ணை. உங்களைப் போல நான்கு பேர் இருப்பதால் தான் மழை பெய்கிறது. நீங்கள் நல்லாயிருப்பியள். மகா கணபதி உங்களுக்கு எந்தக் குறையும் வைக்க மாட்டார்’’ என்றான்.

ஜெயபாலன் பூரண மகிழ்வுடன் சிரித்தான். ‘‘பிள்ளைக்கு நல்ல பலன் இருக்கு’’ என்று நினைத்தான் புஷ்பநாதன்.

**842. அறிவிலான் நெஞ்சுஉவந்து ஈதல் பிறிதுயாதும்**
**இல்லை பெறுவான் தவம்.**

அறிவில்லாதவன் மனம் மகிழ்ந்து ஒருவனுக்கு ஒரு பொருளைக் கொடுத்தால், அது

பெறுபவனின் நல்வினையே தவிர வேறொன்றுமில்லை.

## பகைவர் செய்யாதது

ஜெயபாலன் நன்றாகக் குடித்துவிட்டுத் தனது மோட்டார் வண்டியை எடுத்தான். அப்போது அதன் சாரதியான தில்லையம்பலம் ஓடிவந்து சொன்னான்: ‘‘ஐயா, உங்களுக்கு மோட்டார் வண்டி ஓட்டத் தெரியாது. அத்துடன் மோட்டார் வண்டி செலுத்துவதற்கான அனுமதிப் பத்திரமும் இல்லை. அத்துடன் சற்று நிதானம் தவறி நிற்கிறீர்கள். அதனால் நானும் வருகிறேன்’’ என்றான்.

‘‘சரிவா, ஆனால் நான் தான் வாகனம் செலுத்த வேண்டும்’’ என்றான் ஜெயபாலன்.

‘‘வேண்டாம் ஐயா, நீங்கள் இன்று செலுத்த வேண்டாம்’’ என்றான் தில்லையம்பலம்.

‘‘நீ என்ன எனக்குச் சொல்வது? கணக்கக் கதைத்தாயேயானால் உன்னை வேலையால் நிப்பாட்டிப் போடுவன்’’ என்ற ஜெகநாதன் மோட்டார் வண்டியின் சாரதியின் ஆசனத்தில் அமர்ந்து, மோட்டார் வண்டியை இயக்கினான். வேறு வழியின்றித் தில்லையம்பலம், தானும் அம் மோட்டார் வண்டியில் ஏறி ஜெயபாலனுக்கு அருகில் அமர்ந்து கொண்டான்.

மோட்டார் வண்டி வேகமாகச் சென்று பிரதான வீதியில் ஏறியது. அப்பொழுது

எதிர்த்திசையில் மிகவும் வேகமாக வந்த இன்னொரு மோட்டார் வண்டி ஜெயபாலனின் வண்டியுடன் மோதியது. எதிர்பாராத விதமாக நடைபெற்ற அவ்விபத்தில் ஜெயபாலனின் மோட்டார் வண்டிக்குக் கடுஞ்சேதமேற்பட்டது. அத்துடன் ஜெயபாலனுக்கும் பெருங்காய மேற்பட்டது. அவனை உடனடியாக வைத்திய சாலைக்குக் கொண்டு சென்றனர். அவன் அதிதீவிரச் சிகிட்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டான்.

இரண்டு தினங்களுக்குப் பின்பு அதிதீவிர சிகிட்சைப் பிரிவில் இருந்து ஜெயபாலன் மாற்றப்பட்டான். அவனது தலையில் ஐந்து தையல்கள் போடப்பட்டிருந்தன. கால் எலும்பு முறிந்திருந்தது.

மோட்டார்வண்டி பலத்த சேதத்துக்குள்ளானது. அதைத் திருத்துவதற்கு இரண்டு இலட்ச ரூபா தேவைப்பட்டது. அத்துடன் ஜெயபாலனின் மோட்டார் வண்டியை மோதிய மோட்டார் வண்டியைத் திருத்துவதற்கு இரண்டு இலட்சம் ரூபாவை ஜெயபாலன் கொடுக்க வேண்டுமென்றும் சாரதி அனுமதிப்பத்திரமின்றி வாகனஞ் செலுத்தியமைக்காகக் குற்றப்பணம் கட்டப்படல் வேண்டுமென்றும் ஜெயபாலனுக்கு நீதி மன்றம் உத்தரவிட்டது.

வைத்திய சாலையால் வீட்டுக்கு வந்த ஜெயபாலன் வேதனை தாங்க முடியாது அவதிப்பட்டான். அவனால் எழுந்து நடக்க முடியவில்லை.

அவனைப் பலரும் வந்து வருத்தம் பார்த்து விட்டுச் சென்றனர். நவராசா அவனைப் பார்க்கத் துர்காவுடன் வந்தான். துர்க்கா நல்ல அழகி. அன்று அவள் நீளக் கால் சட்டையும், சிவப்பு நிறத்தில் வெள்ளைக் கோடுகள் போட்ட சட்டையும் அணிந்திருந்தாள். அந்தச் சட்டை அவளுக்கு மிகவும் எடுப்பாக இருந்தது. அவளது கவர்ச்சிமிக்க வாளிப்பான பகுதிகள் ஜெயபாலனின் கண்களைக் குத்தின.

புஷ்பநாதன் அப்போது அங்கே ஜெயபாலனைப் பார்க்க இலட்சுமியுடன் வந்தான்.

நவராசாவும் புஷ்பநாதனும் இலட்சுமியையும் துர்க்காவையும் ஜெயபாலனுடன் கதைக்கும் படி கூறிவிட்டு வெளியே வந்தனர்.

“இவருக்கு இது தேவையா......? சாரதி அனுமதிப்பத்திர முள்ளவனையே குடித்து விட்டு வாகனம் செலுத்தக் கூடாது என்று காவல்துறையினர் கூறுகின்றனர். இவர் வாகனத்தைச் செலுத்தப்பழகவில்லை. தில்லையம்பலம் இருக்க இவர் ஏன் செலுத்தினவர்?” என்றான் நவராசா.

“அவருக்கு எல்லாவற்றிற்கும் ஆசை. இலக்கியம் பேரவையிலும் உறுப்பினராக வேண்டுமாம்....” என்று சிரித்த புஷ்பநாதன் சொன்னான்: “துப்பரவாக இவனுக்கு அறிவில்லை. சொன்னாலும் விளங்காது. அறிவில்லாதவர்கள் தமக்குத் தாமே தீங்குசெய்து கொள்வார்கள். அவர்கள் தமது பகைவர்களுக்குத் தீங்கு

செய்வதாக நினைத்துச் செய்வார்கள், ஆனால் அச் செயல்களால் அவர்கள் தான் பாதிக்கப்படுவது. அறிவில்லாதவர்கள் தமக்குத் தாமே செய்து கொள்ளும் துன்பம், அவர்கள் தமது பகைவர்களுக்குக் கூடச் செய்ய முடியாததாகும். இவனோடு சேர்ந்து திரிந்தால் கரைச்சல் என்று விலகினாலும் விடுகிறான் இல்லை. காலையில் பத்துத்தரம் தன்னை வந்து சந்திக்குமாறு ஆள் அனுப்பிவிட்டான்'' என்றான் புஷ்பநாதன்.

''ம், என்ன செய்வது? முள்ளில் சேலையைப் போட்டால் அவதானமாகத் தான் அதை எடுக்க வேண்டும். இவனது நட்பால் பெரும் பிரச்சினைகள் வருகின்றன'' என்று பெருமூச்சுவிட்டான் நவராசா.

**843. அறிவிலார் தாம்தம்மைப் பீழிக்கும் பீழை**
**செறுவார்க்கும் செய்தல் அரிது.**

அறிவில்லாதவர்கள் அறியாமையால் செய்யும் செயல்களால்பெறும் துன்பம், அவர்கள் பகைவர்களுக்குக் கூடச் செய்ய முடியாததாகும்.

**புல்லறிவு**

''ஐயா, நீங்கள் கணபதி மத்திய மகா வித்தியாலயத்தில் அதிபராகப் பல ஆண்டுகள் கடமைபுரிந்து பெருஞ் சேவை செய்தீர்கள். எமது கிராமத்தில் பத்துப் பாடசாலைகள் உள்ளன. எமது கிராமத்திற்கு மிக அண்மையில் இப்பாடசாலை அமைந்ததால் எமது கிராம மக்கள் அனைவரும் தமது பிள்ளைகளை இப்பாடசாலையிலேயே

கற்பித்தனர். அதனால் எமது கிராமத்தில் உள்ள பல பாடசாலைகள் மூட வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டன. பெற்றோரிடம் அனுமதிக்கென பணம் வசூலியாது நீங்கள் பாடசாலையை மிகவும திறம்பட நடத்தினீர்கள். அதனால் எமது சனசமூக நிலைய ஆண்டு விழாவுக்கு உங்களைப் பிரதமவிருந்தினராக அழைக்க வந்திருக்கின்றோம். நீங்கள் கட்டாயம் வருகை தரவேண்டும்'' என்று பாரதி சனசமூக நிலையத் தலைர் மாணிக்கவாசகர் சொன்னார்.

அதைக் கேட்டுச் சில நிமிடங்கள் பேசாமல் இருந்த விக்ணேஸ்வர மூர்த்தி சொன்னார்: ‘‘உங்கள் அழைப்பிற்கு மிகவும் நன்றி. நான் கடமை செய்ததாக நீங்கள் நினைத்ததே எனக்கு மகிழ்ச்சியைத் தருகிறது. எமது பாடசாலைக்கு மிக அண்மையில் வடக்குத் திசையில் உள்ள சனசமூக நிலையங்களோ, விளையாட்டுக் கழகங்களோ ஆண்டு விழாக்களோ, விளையாட்டுப் போட்டிகளோ நடாத்தும் போது எனக்கு அழைப்பிதழ் கூட அனுப்புவதில்லை. வடக்கில் இரண்டு பாடசாலைகள் உண்டு, ஆனால் அங்குள்ள பிள்ளைகள் எல்லோரும் எமது பாடசாலையில் தான் கற்பார்கள். ஆனால் அவர்கள் மதிப்பதில்லை. நீங்கள் மதித்து வந்து என்னை அழைத்ததற்கு நன்றி'' என்றார் விக்னேஸ்வர மூர்த்தி.

‘‘நீங்கள் பெரிய மனிதர்; மிகப்பெரும் அறிவாளி; ஏராளமாக நூல்களைக் கற்றுப்பட்டம் பெற்றனீங்கள். தற்பொழுது கலாநிதிப்பட்டம் கிடைக்கப் போவதாக அறிகிறோம். உங்களைப் போன்ற ஒரு கல்விமான் தற்பொழுது எமது ஊரில்

யாருமில்லை. ஆகையால் உங்களை மதிக்காதவர்கள் தங்களைத் தாமே மதிக்காதவர்களாவர்’’ என்றார் தலைவர்.

“அப்படிச் சொல்லக் கூடாது. நான் பெரும் அறிவாளியல்ல. ஏதோ படித்திருக்கிறேன்....’’ என்று விக்னேஸ்வர மூர்த்தி சொல்லும் போது தலைவர் குறுக்கிட்டுச் சொன்னார்: “உங்களது வார்த்தைகள் உங்கள் பெருந்தன்மையைக் காட்டுகிறது. ஒருவன் தன்னைப் பற்றிப் புகழ்ந்து தானே சொல்லக் கூடாது. அறிவாளிகள், பெரியவர்கள் தாம் எப்போதும் கீழானவர்களென்றே கருதுவார்கள். ஆனால் அரை குறையாகக் கற்றவர்கள் தான்தான் பெரிய மேதாவி என்று சொல்வார்கள். உங்களுக்குத் தெரியும் என்று நினைக்கிறேன். சிவசுந்தரமூர்த்தி என்பவர்; “தான் தான் இக்கிராமத்தில் அறிவாளியாம். உங்களுக்கோ வித்துவசிரோன்மணிக்கோ பண்டிதருக்கோ தமிழைத் தவிர வேறு எதுவும் தெரியாது’’ என்கிறார். நிறைகுடம் தழும்பாது ஐயா. நீங்கள் பதவி உயர்வு பெற்றுச்சென்று விட்டீர்கள். நீங்கள் நடத்தியது போலப் பாடசாலையை யாராலும் நடத்த முடியாது. நீங்கள் பாடசாலையைக் கவனிக்க வேண்டும். எமது ஊரில் உள்ள பாடசாலையை அதிபர் கவனிப்பது இல்லை. ஊரார், பழைய மாணவர், பெற்றார் எவரும் கவனிப்பதில்லை வெளிநாட்டில் உள்ள ஒருவர் எமது பாடசாலைக்கு பத்துக் கணனிகள் தருவதாகக் கூறினார். அதிபர் பெற்றோரை அழைத்து கணனி வைப்பதற்கு ஒரு வகுப்பறை இருப்பதாகவும் அதைத் திருத்தி மின் இணைப்புச் செய்து தருமாறு கேட்டார். ஒருவர் கூடப் பணம் கொடுக்கவில்லை. அதனால் அதிபர் கணனிகளை

வேண்டாம் என்று கூறி விட்டார். இன்னொருவர் விளையாட்டு முற்றம் அமைக்க ஐம்பதினாயிரம் ரூபா கொடுக்கச் சம்மதித்தார். விளையாட்டு முற்றம் அமைக்க அறுபதினாயிரம் ரூபா தேவையென்றும் மிகுதிக்காசையும் அவரையே தரும்படி அதிபர் கேட்டார். அவர் மறுத்து விட்டார். அதனால் விளையாட்டு முற்றமும் அமைக்கப்படவில்லை" கவலைப்பட்டார் தலைவர்.

பாடசாலைகள், சனசமூக நிலையங்கள் கோயில்கள் போன்றவற்றிற்குச் சம்பந்தப்பட்டவர்கள் உதவாவிட்டால் அது அழிந்து விடும். உங்கள் பாடசாலைக்குக் கணனியும் விளையாட்டு முற்றமும் அமைக்கப் பெற்றோர் உதவியிருக்கலாம்…" என்றார் விக்னேஸ்வரமூர்த்தி.

தலைவர் சிரித்தார்; "எல்லோரும் தாம் தாம் அறிவாளியென்கிறார்கள். அதிபர்தான் தான் அறிவுடையவர் என்கிறார். இந்த நிலையில் எம்மால் எதுவும் செய்ய முடியவில்லை. நான் தான் அறிவுடையவன் என்று கூறுவது புல்லறிவு என்று அவர்களுக்குப் புரியவில்லை. நீங்கள் பெரியவர். நீங்கள் செய்த சேவையை நாம் மறந்தால், எமது பிள்ளைகள் ஒருபோதும் நல்ல நிலைக்கு வரமாட்டார்கள். பணம் கொடுக்கவும். உதவிகள் செய்யவும் பெற்றோர் தயங்கும் வேளைகளில் நீங்கள் பணம் பெறாமல் பாடசாலையை நல்ல முறையில் நடத்தினீர்கள்" கண் கலங்கினார் தலைவர்.

---

**844. வெண்மை எனப்படுவது யாதுஎனின் ஒண்மை**
**உடையம்யாம் என்னும் செருக்கு.**

---

புல்லறிவு என்று சொல்லப்படுவது எதுவென்றால், தான் அறிவுடையவன் என்று ஒருவன் தன்னைத் தானே மதித்துக் கொள்ளும் செருக்காகும்.

## சந்தேகம்

கற்குழி என்ற பட்டணத்தில் இருந்து மிகவும் பிரசித்தி பெற்ற பேச்சாளரும் அறிஞரும், பல நூல்களைக் கற்றறிந்த மேதையுமான விஸ்வநாதர் அன்று இலக்கியப் பேரவையில் உரையாற்ற வந்திருந்தார். அவரைப்பற்றி விக்னேஸ்வரமூர்த்தி போன்றவர்கள் கேள்விப் பட்டிருந்தனர். அவர் பேசும் போது சபை மிகவும் அமைதியாக இருக்கும். கேட்போரைக் கவரக்கூடியதாகவும் கேட்காதவருக்குக் கேட்க வேண்டுமென்ற ஆவலைத் தூண்டக் கூடியதாகவும் அவரது பேச்சு இருக்குமென்று கற்றுணர்ந்த பெரியவர்கள் கூறக் கேட்டிருக்கிறார் விக்னேஸ்வரமூர்த்தி; ‘‘கருத்துக்களை ஒழுங்குபடுத்திச் சொல்ல வேண்டிய முறைப்படி மிகவும் கவர்ச்சியாகவும் இனிமையாகவும் பேசவல்லவர் விஸ்வநாதர்’’ என்று பண்டிதர் அடிக்கடி இலக்கியப் பேரவையில் அவரை வியந்து கூறுவார். அதனால் இலக்கியப் பேரவையினர் அன்று விஸ்வநாதரின் சொற்பொழிவை ஏற்பாடு செய்திருந்தனர்.

அன்று விஸ்வநாதர் பட்டுப் பீதாம்பரங்கள் அணிந்து மிகவும் உற்சாகமாக இலக்கியப் பேரவைக்கு வந்திருந்தார். அவரைப் பற்றி அவ்வூர் அறிஞர்களும் மக்களும் கேள்விப்பட்டமையால்

அவரது சொற்பொழிவைக் கேட்க நேரத்துடன் கூடிவிட்டனர். மண்டபம் நிரம்பி வழிந்தமையால் வெளியே மக்கள் கூட்டம் கூட்டமாக நின்றனர்.

விக்னேஸ்வரமூர்த்தி விஸ்வநாதரைச் சபைக்கு அறிமுகஞ் செய்து வைத்தார்; “விஸ்வநாதர் அவர்கள் வேத உபதநிடதங்களைக் கரைத்துக் குடித்தவர்; மகாபாரதம், இராமாயணம், பதினெண் புராணங்கள், திருக்குறள், நாலடியார் போன்ற பல நூல்களைக் கற்றுத் தேர்ந்தவர். நிகண்டு. தொல்காப்பியம் போன்ற இலக்கண நூல்ககைக் கற்றுத் தெளிந்தவர். இன்று அவர் அதர்வண வேத உபநிடதங்களைப் பற்றி உரையாற்றுவார்” என்றார்.

சபையோர் கரகோஷம் செய்ய விஸ்வநாதர் மேடைக்கு வந்தார்; “இலக்கியப் பேரவையின் தலைவார் அவர்களே, மற்றும் பெரியவர்களே, அறிஞர்களே நான் இன்று உங்கள் முன் பேச எடுத்துக் கொண்ட விஷயம் அதர்வணவேத உபநிடதங்கள் பற்றியதாகும். அறிஞர்களும் பெரியவர்களும் ஒவ்வொரு மேடைகளிலும் இராமாயணத்தைப் பற்றியும் பாரதத்தைப் பற்றியும் புராணங்களைப் பற்றியும் தான் பேசுகிறார்கள். தெரிந்த வற்றைக் கேட்டுக் கேட்டு அவர்கள் சலிப்படைந்தமையால் தான், நான் அதர்வணவேத உபநிடதங்களைப் பற்றிப் பேச விரும்புகிறேன்.”

“வேதங்களுள் கடைசி வேதமான அதர்வண வேதம், மற்றைய மூன்று வேதங்களில் இருந்து முற்றாக வேறுபடுகிறது. வேதங்கள் மூன்றும் ஆன்ம விருத்தியைப் பற்றிப் பேச அதர்வண வேதப்

பாடல்கள் உடம்பை நோய்களில் இருந்தும் மற்றைய அபாயங்களில் இருந்தும் காப்பாற்றும்படி இறைவனிடம் கோரிக்கை விடுவனவாக அமைகின்றன.''

''இருக்கு வேதப் பாடல்கள் தெய்வங்களைப் பற்றியும், யசுர்வேதப்பாடல்கள் சடங்குகளைப் பற்றியும் கூற, சாமவேதப் பாடல்கள் சோமபானத்தைத் தயாரித்து, தெய்வங்களை உபசரிப்பதைப்பற்றி விளக்குகின்றன.''

''அதர்வ வேதத்தில் ஐயாயிரத்துத் தொளாயிரத்து எண்பத்தேழு பாடல்கள் உள்ளன. பொதுவாகக் கோரிக்கைகளாகவே இருக்கும் இவ்வேதப் பாடல்கள் குழந்தைப் பேற்றைப் பற்றியும், மலட்டுத் தன்மையைப் போக்குவதைப் பற்றியும், கருச் சிதைவைப் பற்றியும், கருச்சிதைவைத் தடுக்கும்படியும் கோரும் பாடல்களும் அதர்வணவேதத்தில் உண்டு''

''பொறாமையைப் போக்கும்படியும், கோபத்தை அடக்கும்படியும், வீடு கட்ட உதவும் படியும், பயிர்களுக்கு நோயுண்டாகாமல் காக்கும் படியும் கோரும் பாடல்களும், மந்திர தந்திரப் பாடல்களும் காணப்படுகின்றன. அதனால் இது மக்களுக்கான வேதம் என்று அறிஞர் பலர் குறிப்பிடுகின்றனர். முதல் மூன்று வேதங்களும் தான் வேதங்கள் என்று முன்னர் ஏற்றுக்கொள்ளப்பட்டது. உடம்பின் முக்கியத்துவத்தைப் புரிந்து கொண்ட அறிஞர்கள் உடம்பின் முக்கியத்துவத்தை உணர்ந்த பின்பே அதர்வண வேதத்தை ஒரு வேதமாக ஏற்றனர்.''

“மற்றய வேதங்களைப் போல இதற்கும் பிராமணமும் ஆரண்யகமும் உண்டு. பிரஸ்னா, முண்டகம், மாண்டுக்கியம் ஆகிய மூன்றும் அதர்வண வேத உபநிடதங்ளாகும். உபநிடதங்களை அறியுமுன் சம்கிதைகள் பற்றிப் பார்ப்போம். முக்கியமாக அக்கினி தேவன் மனிதனுக்குக் காய்ச்சல் நோயைக் கொடுப்பதாக நம்பி அவனைத் தொழும் பாடல்கள் பதின்நான்கு பகுதிகளாக உள்ளன. தெய்வங்களின் ஆற்றல்களையும் காய்ச்சலின் கொடுமைகளைப் பற்றியுமே இப்பாடல்கள் உருக்கமாக கூறுகின்றன. அரச மரத்தில் தான் தெய்வங்கள் வாழ்கின்றன என்றும், அம்மரம் சொர்க்கத்தில் உள்ளதென்றும் அவர்கள் அங்கிருந்து காய்ச்சலைப் போக்கும் “குடித்தா” என்றும் மருத்தைத் தயாரிக்கிறார்கள் என்றும் இப்பாடல்கள் கூறுகின்றன. தலைவலி, இருமல், மஞ்சட் காமாலை போன்ற நோய்களையும் குணப்படுத்துமாறு சில பாடல்கள் கூறுகின்றன. அத்துடன் மின்னலால் தான் மனிதன் நோய்வாய்ப்படுகிறான் என்றும் மக்கள் நம்பினர். பொதுவாகக் இளம் பெண்கள் அக்கினியைத் தமக்கு திருமணஞ் செய்து வைக்குமாறு கோரி வழிபட்டனர். அத்துடன் வேதகால மக்கள் ஆண்பிள்ளைகளையே மிகவும் விரும்பினார். மண்ணைப் பெண்ணின் கர்ப்பப்பையாக எண்ணினர். இப்படியாக அதர்வன வேதம் மற்றய மூன்று வேதங்களைக் காட்டிலும் மக்களின் நலனில் அக்கறை காட்டுகிறது. மனிதனது நோயைத் தீர்த்து, ஒரு பெண்ணுக்குச் சிறந்த கணவனையும், பலம்மிக்க குலத்தையும் உருவாக்க உதவுகிறது. பெண்ணுக்கும் கணவனுக்குமிடையே அன்பு உருவாக்க உதவுகிறது. இந்த அளவிற்கு வேறு

எந்த நூல்களும் மனித முன்னேற்றத்தில் கருத்துக் கொண்டதாகத் தெரியவில்லை.''

''அதர்ணவேத உபநிடதங்கள் மூன்று. பிரஸ்னா, முண்டகம், மாண்டுக்கியம் என்பவையே அவை. அவை பற்றி இன்னொரு நாள் பேசுகிறேன்'' என்றார் விஸ்வநாதர்.

பேச்சு முடிந்ததும் விஸ்வநாதர் சென்று விட்டார். மக்கள் தமது வீடுகளுக்குச் சென்று கொண்டிருந்தனர். பண்டிதர் சொன்னார்; ''அதர்வணவேதத்தைப் பற்றிச் சாதாரண மக்களுக்குத் தேவையான கருத்துக்களைச் சொன்னாரே தவிர ஆழமாகச் சிந்தித்துப் பேசவில்லை''

''வெள்ளாடு மேய்வதைப் போலத்தான் விஸ்வநாதர் பேசுவார். சொல்வளமில்லாத பேச்சு. தாளம் தப்பிய மேளம் போன்றது'' என்றார் வித்துவசிரோன்மணி.

''இவரின் பேச்சைப் பெரிதாகச் சொன்னார்கள். முக்கியமானவற்றை விட்டுவிட்டார்'' என்றார் விக்னேஸ்வரமூர்த்தி.

''குரல் வளமே தவிரச் சத்தில்லாத பேச்சு. இப்படித்தான் இவர் மற்றய விஷயங்களைப் பற்றியும் பேசுவார்'' என்றார் பண்டிதர்.

---

**845. கல்லாத மேற்கொண்டு ஒழுகல் கசடுஅற**

**வல்லதூஉம் ஐயம் தரும்.**

அறிவில்லாதவர்கள் தாம் கற்காத நூல்களையும் கற்றதைப் போலக் காட்டிக் கொள்வது, அவர்கள் குற்றமில்லாமல் கற்றறிந்த அறிவையும் சந்தேகப்பட வைக்கும்.

## அறிவற்ற தன்மை

இலக்கியப் பேரவையில் ஓர் உறுப்பினனாகச் சேரவேண்டும் என்ற எண்ணம் ஜெயபாலனின் மனதில் எந்த நேரமும் தோன்றி அரித்துக் கொண்டிருந்தது. அதைப் புஷ்பநாதனிடஞ் சொன்னான். அவனை, புஸ்பநாதன் கேலி செய்தான். நவராசாவிடஞ் சொன்னான். அதற்கு நவராசா சொன்னான்; "உனக்கு ஏனப்பா இந்த விபரீதமான ஆசை. பொன், பொருள், காணி, பூமியெல்லாம் வைத்திருக்கிறாய். அதைக் கொண்டு திருப்திப்படு. அத்துடன் பணத்தால் எவ்வளவு சந்தோஷங்களை அனுபவிக்கலாம். அதுகளையெல்லாம் அனுபவி. அதை விட்டு விட்டு மாலைக்கும் பொன்னாடைக்கும் ஏன் ஆசைப்படுகிறாய்? மாலையும் பொன்னாடையும் வறியவர்களுக்கும் மத்தியதர வர்க்கத்தினரக்கும்தான் பொருந்தும். சரி. அவர்கள் பொன் பொருள் காணி பூமிகளால் அனுபவிக்க முடியாததைப் பொன் ஆடை போர்த்தியும் மாலை சூடியும் அனுபவிக்கிறார்கள். இதில் என்ன இன்பம் இருக்கிறது? மதுவைக் குடித்தால் பேரின்பம் வரும்; நன்றாக உண்டால் அதைவிட இன்பம் உண்டாகும். பொன்னாடை என்று சொல்லி ஒரு பட்டுத்துண்டும், பூக்களால் கட்டிய மாலையும் போட

ஆசையென்றால் சொல்லு நான் கடையில் வாங்கி வந்து கழுத்து முட்ட போடுறன்''.

''காலமையே குடிச்சிட்டியா......?'' என்று கேட்டான் ஜெயபாலன்.

அன்று இரவு ஜெயபாலன் விக்னேஸ்வரமூர்த்தியின் வீட்டுக்குச் சென்றாான; ''ஊரில் உள்ள பிரமுகர்களில் விக்னேஸ்வரமூர்த்திதான் உயர்ந்தவர். அவர் சொன்னால் எல்லோரும் கேட்பார்கள். வேலாயுதபிள்ளை உனக்கு ஒரு கதையும் மற்றவர்களுக்கு இன்னொரு கதையும் சொல்லும். அதனால் நீ விக்னேஸ்வரமூர்த்தியிடம் நேரில் சென்று சொல்'' என்று ஜெயபாலனின் கரைச்சலைத் தாங்க முடியாத புஷ்பநாதன் சொன்னான்; ''தான் சொன்னாலும் விக்னேஸ்வரமூர்த்தியிடம் ஜெயபாலன் சென்று கேட்க மாட்டான்'' என்று புஷ்பநாதன் நினைத்தான். ஆனால் ஜெயபாலன் அவன் உண்மையாகத்தான் சொல்கிறான் என நினைத்து விக்னேஸ்வரமூர்த்தியின் வீட்டுக்குச் சென்றான்.

விக்னேஸ்வரமூர்த்தி வீட்டின் வெளி விறாந்தையில் வெறும் மேலுடன் சாய்வு நாற்காலியில் சாய்ந்து படுத்திருந்தார். ஜெயபாலனைக் கண்டதும் படுத்திருந்தபடியே; ''என்ன ஜெயபாலு'' என்று கேட்டார்.

ஜெயபாலன் அடக்க ஒடுக்கமாகக் கைகட்டியபடி நின்றான்; ''உட்கார்'' என்றார் விக்னேஸ்வரமூர்த்தி.

“இல்லை ஐயா, உங்களுக்குச் சமமாக நான் அமரவிரும்பவில்லை”.

“அப்ப போ...... வீட்டுக்கு யார் வந்தாலும் அவர்களை வரவேற்று உபசரிக்கிறது தான் பண்பு. அமர்ந்து வந்த விஷயத்தைச் சொல். இல்லாவிட்டால் போ” என்றார் விக்னேஸ்வரமூர்த்தி.

மெல்ல ஜெயபாலன் நாற்காலியில் ஓர் ஓரமாக அமர்நதிருந்து சொன்னான்; “ஐயா, எனக்க இலக்கியப் பேரவையில் ஓர் உறுப்பினராகச் சேர வேண்டும் என்று நெடுநாட்களாக ஆசை..”

விக்னேஸ்வரமூர்த்தி சிறிது நேரம் பேசாமலிருந்தார். பின்பு சொன்னார்; “இலக்கியப் பேரவையில் ஓர் உறுப்பினராகுதல் வேண்டுமென்றால் சில தகுதிகள் இருக்கு. உறுப்பினர் ஒவ்வொருவரும் சிறந்த கல்விமானாக இருத்தல் வேண்டும். பேச்சு வன்மை உள்ளவர்களாக இருத்தல் வேண்டும். குற்றச் செயல்களில் ஈடுபட்டிருத்தல் கூடாது.” என்றார்.

“இலக்கியப் பேரவைக்கு எவ்வளவு நிதி வேண்டுமானாலும் தருகிறேன்.” என்றான் ஜெயபாலன்.

“பணத்தால் எதையும் சாதிக்கலாமென்ற நோக்கில் தான் சமூகத்தில் பணமுள்ளோர் பல அடாவடித்தனங்களில் ஈடுபட்டு விட்டுத் தமது பணத்தால் அவற்றை யெல்லாம் மூடிமறைத்துத் தாம் எதுவும் செய்யாத நல்லவர்கள் என்று

எண்ணுகிறார்கள். ஆனால் அவர்கள் செய்தது கடவுளுக்கும் அறிவுள்ளவர்களுக்கும் தெரியும்; “தம்முடைய குற்றங்களை அறிந்து அவற்றைத் திருத்திக் கொள்ளாதவர்கள் உடம்பில் மறைக்க வேண்டியவற்றை மட்டும் மறைத்திருக்கும் புல்லறிவாளர்கள்” என்று பெரியவர்கள் கூறியுள்ளனர். அதே போல நீயும் உனது குற்றங்களை மறைக்கத்தான் இலக்கியப் பேரவையில் உறுப்பினராகச் சேர விரும்புகிறாய். அதற்காக உனது பணத்தைக் காட்டி எம்மை மதி மயங்க வைக்கலாமென்றும் நினைக்கிறாய். அது உனது அறியாமைக் காட்டுகிறது. புல்லறிவாளர் அறிஞர் சபையில் இருப்பது அசுத்தத்தை மிதித்தவர்கள் சபையில் இருப்பதை ஒக்கும்” என்றார் விக்னேஸ்வரமூர்த்தி.

ஜெயபாலன் திகைத்துப் போனான்.

**846. அற்றம் மறைத்தலோ புல்லறிவு தம்வயின்**
**குற்றம் மறையா வழி.**

தம்மிடமுள்ள குற்றங்களை அறிந்து அதை நீக்கி நல்லவழியில் நடக்காதவர், ஆடையை அணிந்து தனது உடம்பில் மறைப்பதற்குரிய பகுதிகளை மறைப்பது புல்லறிவாகும்.

## அறிவிலி

வீட்டுக்கு வந்த ஜெயபாலனுக்கு விக்னேஸ்வரமூர்த்தியை நினைக்க ஆத்திர மாத்திரமாக வந்தது; “இலக்கியப் பேரவையில் கண்டபடி உறுப்பினர்களைச் சேர்ப்பதில்லை.” என்று

சாதாரணமாகச் சொல்லியிருக்கலாம். அதை விட்டு விட்டு நான் படிக்காதன் என்பதையும் சுட்டிக்காட்டித் தான் முன்பு செய்த குற்றங்களையும் சொல்லிக் காட்டியது அவனுக்கு மிகுந்த மனவருத்தைக் கொடுத்தது. எதைச் சொன்னாலும் பரவாயில்லை. அடாவடித்தனங்களைச் செய்து விட்டுப் பணத்தால் மறைக்கிறாய் என்று சொன்னது அவனுக்குப் பிடிக்கவில்லை. அதனால் புஷ்பநாதனைத் தேடிச் சென்றான். புஷ்பநாதனும் நவராசாவும் புஸ்பநாதனது வீட்டில் இருந்தனர். ஜெயபாலனைக் கண்ட புஸ்பநாதன் எழுந்து வந்தான். ஜெயபாலனின் முகத்தில் என்றுமில்லாத கவலவரம் குடிகொண்டிருப்பதைக் கண்டான். அவனாகச் சொல்லட்டும் என்று காத்திருந்தான்.

“நீ சொன்னதால்தான் நான் வின்னேஸ்வரமூர்த்தியின் வீட்டுக்குச் சென்றேன். அவர் இலக்கியப் பேரவைக்கு உறுப்பினராகச் சேரவேண்டுமென்றால் அதற்குச் சில தகுதிகள் இருக்கிறது என்றும் அவர்கள் சிறந்த கல்விமான்களாக இருத்தல் வேண்டும்; பேச்சுவன்மை உள்ளவர்களாக இருத்தல் வேண்டும்; அத்துடன் அவர்கள் குற்றச்செயல்களில் ஈடுபடாமல் இருக்க வேண்டும்” என்றார். அது தானாம் இலக்கியப் பேரவையின் விதி. அதை மீற முடியாது என்றும் சொன்னார். அதைச் சொன்னால் பிரச்சினையில்லை நீ குற்றச் செயல்களில் ஈடுபட்டுவிட்டுப் பணத்தைத் தந்து இலக்கியப் பேரவையில் சேர்ந்து உனது குற்றங்களை மறைக்கப் பார்க்கிறாய். அது சரியவராது. அடாவடித்தனங்கள் செய்யும் பணக்காரன் பணத்தால் யாவற்றையும் மறைக்கலாமென்று நினைப்பது உடம்பில் மறைப்பதற்குரிய பகுதிகளை

மட்டும் ஆடையால் மறைப்பதைப் போன்றது'' என்றார். எனக்கு அந்த நேரம் சரியான கோபம் வந்தது. எழும்பி இரண்டு அடி அடிக்க வேண்டும் என்ற ஆத்திரம் கூட வந்தது. சிரமப்பட்டு அடக்கி விட்டேன்'' என்றான்.

"நல்லவேளை, அவருடன் சற்று அதட்டிக் கதைக்கவே இவ்வூரவர் பயப்படுவார்கள். நீ அடிக்க நினைத்தாயா...? உதை வெளியே ஒருவருக்கும் சொல்லிவிடாதே. சொன்னால் உன்னை அடித்து முறித்துப் போடுவார்கள். இவ்வூவர் அவரைத் தெய்வமாகப் போற்றுகின்றனர்......'' என்று நவராசா சொல்லும்போது ஆத்திரத்துடன் குறுக்கிட்டான் ஜெயபாலன்; "இங்குள்ளவர்கள் எல்லோரும் வெளியே அவர்மீது மதிப்புள்ளவர்கள் போல நடிக்கிறார்களே தவிர உள்ளூரப் பாசமில்லை. தனக்கு விசுவாசமானவர்; தன்ரை சொல்லை மதிப்பவர்; திறமைசாலியென்று தகுதியில்லாத ஒருவருக்கு அதிபர் பதவி கொடுத்து விட்டுச் சென்றார். இப்ப அவர் செருப்பால அடிக்காத குறை. வேறு யாருக்காவது கொடுத்திருந்தால் அவர் மதிக்கப்பட்டிருப்பர். அதை மாதிரித்தான் வேலாயுதபிள்ளையும்.'' என்றான் ஜெயபாலன்.

"ஜெயபாலு, உன்னில் ஊரவர்களுக்கு அவ்வளவு நல்ல எண்ணம் இல்லை. ஒவ்வொருவரும் அரிதான மறைபொருளை மனதில் வைத்துக் காக்க வேண்டும். தமக்குள் அவற்றைப் பேசிக் கொள்ளலாமே தவிரப் பகிரங்கமாகப் பேசக்கூடாது. அப்படிப் பேசினால் பேசியவன் தனக்குத் தானே பெருந்துன்பத்தைத் தேடிக் கொண்டவனாவான். விக்னேஸ்வரமூர்த்தியைப் பற்றிப் படிக்காதவர்கள் கூடப் பகிரங்கமாக அவரின்

குறைபாடுகளைக் கதைப்பதில்லை. குற்றஞ் சொல்பவர்களும் பயந்து கதைப்பதில்லை. கதைத்தால் உடனடியாக அது அவருக்கும் மக்களுக்கும் தெரிந்து விடும். உன்னுடன் கதைப்பவனே சென்று சொல்லிவிடுவான். அதனால் மக்கள் தமது நலத்துக்குக்காக விக்னேஸ்வர மூர்த்தியின் பக்கம்தான் கதைப்பார்கள். பின் சனசமூக நிலையம், மகாகணபதி ஆலயம் போன்றவற்றில் அது எதிரொலிக்கும். விக்னேஸ்வரமூர்த்தியைப் பற்றி விமர்சிக்கின்ற சிவசுந்தரமூர்த்தியை மக்கள் ஒதுக்கி வைத்து விட்டனர்'' என்றான் புஸ்பநாதன்.

“நீ கிராமத்தில் நல்ல இடத்தைப் பிடிக்க வேண்டுமென்றால் பேசாமலிரு. இரவு விக்னேஸ்வரமூர்த்தி சொன்னதை நாலு பேருக்குச் சொன்னாயானால் நட்டம் உனக்குத்தான் என்பதை மறந்து விடாதே'' என்றான் நவராசா.

ஜெயபாலனின் மனதில் பீறிட்ட ஆத்திரம் மெல்ல மெல்லத் தணிய ஆரம்பித்தது.

**847. அருமறை சோரும் அறிவுஇலான் செய்யும்**
**பெருமிறை தானே தனக்கு.**

வெளியிடக் கூடாத இரகசியத்தை மனதில் வைத்துக் காப்பாற்ற முடியாத அறிவில்லாதவன், தனக்குத் தானே பெருந் தீங்கைச் செய்து கொள்கிறான்.

**தீராத நோயுடையன்**

“இலக்கியப் பேரவைக்குக் கலாச்சார மண்டபம் அமைக்கப் போகிறார்களாம். அந்தக் மண்டபத்தை கட்டிக் கொடுத்தாயானால் அதற்கு உனது பெயரை வைக்கச் சொல்லிச் சொல்லலாம்....” என்று புஸ்பநாதன் சொல்லிக் கொண்டிருக்கும் போது ஜெயபாலன் குறுக்கிட்டான்; “அப்ப என்னைக் கட்டிடம் கட்டிக் குடுக்கச் சொல்லுறாய். பிறகு என்ரை பெயரை வைக்கச் சொல்லிச் சொல்லலாம் என்கிறாய். அவை என்ரை பெயரைக் கட்டிடத்திற்கு வைக்கமாட்டினை. அதுக்கும் கல்வியறிவுள்ள அறிஞற்ரை பெயரைத்தான் வைப்பினை. நீ “மணியகாரனும் எங்கடை அப்புவும்” என்ற கதை சொல்லுகிறாய்” ஆத்திரத்துடன் சொன்னான் ஜெயபாலன்.

“என்னடாப்பா புதுக்கதையாக இருக்கு. மணியகாரனும் அப்புவுமோ...” என்று கேட்டான் புஸ்பநாதன்.

“ஓ அந்தக் கதை உனக்குத் தெரியாதே. அப்பு... அதாவது என்ரை அம்மான்ரை தகப்பன், சிங்கப்பூருக்குப் போய் நல்லாய் உழைச்சுக் கொண்டு வந்தவர். ஏராளமான நகைகளும் கொண்டந்தவர். அவரை கோயிலுக்கு மண்பம் ஒன்று கட்டச் சொன்னவர் மணியகாரன். அப்பு மாட்டனெண்டுட்டார். அவரை ஒரு மாதிரிச் சமாளித்து மண்டபத்திற்கு அவற்ரை பெயரைப் போடுவதாகச் சொல்லிக் கட்டுவிச்சுப் போட்டு மண்டப வேலை முடிய கோயிலில் மனிதரின் பெயர் போடக்கூடாது. அப்படிப் போட்டால் அவருக்குக் கெடுதல் வரும் என்று சொல்லிப் போட்டாங்கள். மனிசன் அதை ஏற்றிடுது. சிங்கப்பூராலை கொண்டு

வந்த பணம் முழுவதும் மண்டபத்தோடை முடித்து விட்டது. கடைசிக் காலத்திலே அவர் சாப்பாடு இல்லாமல் தான் செய்தவர். அந்தப்பரம்பரையிலே வந்தவங்கள் தானே உவங்கள். நான் மண்டபம் கட்டி முடியப் படித்தவர்களின் பெயர்தான் போடவேண்டும் என்பார்கள்'' என்றான் ஜெயபாலன்.

''அறிஞர்கள் மிகவும் கஷ்டப்படுகிறார்களாம். அவர்களுக்கு மாதாமாதம் உதவுதொகையொன்று வழங்க விரும்புகிறார்களாம். அதற்காக வங்கியில் நிரந்தர நிதியொன்று வைப்பில் வைக்க யோசிக்கிறார்கள். நீ ஒரு பத்து இலட்ச ரூபா குடு'' என்றான் நவராசா.

''படிப்பறிவில்லாதவன், பேச்சு வன்மை இல்லாவன்ரை பணம் செல்லாதடாப்பா. அதோடை பெரிய பெரிய அறிஞர்கள் படிப்பறிவில்லாத சமூக விரோதீட்டைப் பணம் பெறுவினையே....'' என்று கேட்டான் ஜெயபாலன்.

''நவராசா அதற்குப் பதில் கூறவில்லை. புஷ்பநாதன் சொன்னான்; ''வெளிநாட்டிலை கோடிக்கணக்கிலை உழைத்துக் கொண்டு வந்திருக்கிறாய். அதில் கொஞ்சப் பணத்தை நல்ல விஷயங்களுக்குச் செலவு செய்யடாப்பா...''

''நான் மண்டபம் கட்டிக் கொடுக்கிறேன். என்னை இலக்கியப் பேரவையிலே உறுப்பினராகச் சேர்க்கச் சொல்லு. ஒன்று பெற வேண்டுமென்றால் இன்னொன்றை இழக்கத்தான் வேணும். இது வாழ்க்கையின் தத்துவம். நான் வெளிநாட்டில் ஓய்வொளிச்சல் இல்லாமல் உழைச்சனான். அங்கை நான் எந்த இன்பத்தையும் அனுபவிக்கவில்லை.

என்ரை பிறந்த ஊரிலை வந்து தான் அனுபவிக்க வேண்டுமென்று நினைத்தனான். அதற்குத் தான் வந்திருக்கிறன்'' என்றான் ஜெயபாலன்.

''நிரந்தரமான இன்பத்தை அனுபவிக்க வேண்டுமென்றால் நல்ல செயல்களைச் செய்ய வேண்டும். நல்ல காரியங்களுக்கு உதவ வேண்டும்'' என்றான் புஷ்பநாதன்.

''என்னைப் பழிவாங்குகிற சமூகத்தை நான் பழிவாங்க வேண்டும். எனக்கு நன்மை தராத எந்தச் செயலிலும் நான் ஈடுபடமாட்டன். அதைப்பற்றி நீங்கள் கதைக்கக் கூடாது'' என்று கூறி விட்டு வெளியே சென்றான் ஜெயபாலன்.

''அறிவில்லாதவன் நன்மையானவற்றைப் பிறர் எடுத்துச் சொன்னாலும் கேட்கமாட்டான், தானாகவும் எண்ணிச் செய்யமாட்டான். அத்தன்மை உயிர் போகும் வரையும் தீராத நோய்போல அவனுடன் இருக்கும். அத்துடன் அவனுக்கு ஊரில் கதைக்கவோ உதவி செய்யவோ யாரும் இல்லை. அதனால் தான் எம்மைப் பிடித்துள்ளானே தவிர எம்மீதுள்ள நட்பால் அல்ல'' என்றான் புஷ்பநாதன்.

''உண்மைதான். நான் இவனுடன் பழகுவது கதிரேசு அப்புவுக்குப் பிடிப்பதில்லை. அவர் நெடுக இவனது தொடாபினைத் துண்டித்து விடும்படி சொல்லிக் கொண்டே இருக்கிறார்'' என்றான் நவராசா.

---

**848. ஏவவும் செய்கலான்தான்தேறான் அவ்வுயிர்**

**போலும் அளவும்ஓர் நோய்.**

தனக்கு நன்மையானவற்றைப் பிறர் எடுத்துச் சொன்னாலும் செய்யமுடியாதவனாகவும், தானாக எண்ணிச் செய்ய முடியாதவனாகவும் இருப்பவனுக்கு, உயிர் போகும் வரையும் அது தீராத நோயாக அமையும்.

## அறிவில் அறிவுள்ளவன்

அன்று இலட்மியும் புஷ்பநாதனும் வந்து நவராசாவுக்குப் புத்திமதிகள் கூறிய பின் நவராசா முற்றாக மாறியிருந்தான். முன்பென்றால் நவராசாவினது வீடு தனது தகுதிக்கு ஒப்பான வீடு அல்லவென்று அங்கு வரவிரும்பாத துர்க்கா மிகவும் மகிழ்வுடன் நவராசாவின் வீட்டுக்கு வந்து சென்றாள்.

அன்று கதிரேசன் சொன்னது நவராசாவின் காதில் ஒலித்தது; ‘‘நவம் இப்பொழுது உனது முகத்தில் மகிழ்ச்சி தாண்டவமாடுகிறது. மகிழ்ச்சிதான் வாழ்வின் குறிக்கோளாக இருத்தல் வேண்டும். அதுதான் வாழ்வின் மூலதனம். ஏதோ கிரகப் பகையால் போலும் துர்க்கா உன்னுடன் மகிழ்ச்சியில்லாமல் வாழ்ந்தாள். இப்பொழுது அவள் கலகலப்பாக இருப்பதால் நீயும் மகிழ்ச்சியாக இருக்கிறாய். இந்த நிலை நீடிக்க வேண்டுமென்றுதான் நான் தினமும் நாவலர் ஸ்ரீ வித்தியா மகா கணபதியை வேண்டுகிறேன். இதே போல நீ இன்னுமொரு செயலைச் செய்தல் வேண்டும். நீ ஜெயபாலனுடன் கூடித் திரிவது எனக்கு விருப்பமில்லை. அவன் குடிகாரன்;

கெட்டவன்; திருடன். அவன் சென்ற நாட்டிலும் ஒழுங்காக வாழ்ந்திருக்க மாட்டான். களவெடுத்தும் ஏமாற்றியும்தான் பணம் சம்பாதித்திருப்பான். இங்குள்ள வர்த்தகர்கள் கலப்படம் செய்தும் நிறை குறைத்தும் பொருட்களை விற்றுத்தான் கோயில்களுக்குக் கட்டிடங்கள் கட்டுகிறார்கள்; அன்னதானஞ் செய்கிறார்கள். அந்தப் புண்ணியமெல்லாம் பொருள் வாங்கியவனைத்தான் சென்றடையும். அதே போல ஜெயபாலன் களவெடுத்து ஏமாற்றி உழைத்த பணத்தில் நீ சாப்பிட்டால் உனக்கும் அந்தப் பழி வந்து சேரும். அதனால் அவனுடன் சேராதே. அவன் பணக்காரனாக இருக்கலாம். இன்றும் அவனைக் கள்ளப்பாலன் என்று தான் மக்கள் அழைக்கினறார்கள். அவன் சென்றவாரம் கோயிலுக்கு ஒரு வாகனம் வாங்கிக் கொடுத்தான். அன்று பூசையும் நடைபெற்றது உனக்குத் தெரியும். மக்கள் என்ன சொன்னார்கள் “இன்று கள்ளப்பாலன் வாகனம் ஒன்று வாங்கிக் கொடுத்துக் கோயிலில் பூசை செய்கிறான். அதற்குத்தான் போறன்” என்று முத்துக்குமாரு எனக்குச் சொல்லிவிட்டுக் கோயிலுக்குச் சென்றான். செல்லமுத்து சொன்னான்; “கள்ளப்பாலன் செய்து கொடுத்த எலி வாகனம் அருமையாய் இருக்கு. இதற்கு முன்பும் பலர் செய்து கொடுத்தவர்கள் தான் ஆனால் கள்ளப்பாலன்ரை வாகனம் அருமையாய் அமைந்திருக்கு” என்றவன் தம்பீ....பஞ்சம் ஒரு காலம் போய்விடும். பஞ்சத்தில் பட்ட வடுப் போகாது. நீ ஏன் அவனுடன் திரிகிறாய். அத்துடன் அவன் யாரின் சொல்லையும் கேட்கமாட்டான். தான் செய்யும் அடாவடித்தனங்கள் தான் சரியானவை என்று நியாயப்படுத்துவான். நவம், யாரையும்

திருத்தலாம். ஆனால் எல்லாம் அறிந்தவனாய்த் தன்னை எண்ணிக் கொண்டிருப்பவனைத் திருத்த முடியாது. அப்படியானவனுக்குப் புத்திமதிகள் கூறுபவன் தான் அறிவில்லாதவன். அந்த அறிவில்லாதவன்தான் அறிந்த வகையால் அறிவுள்ளவனாக இருப்பான்'' என்று பெரியவர்கள் கூறுவார்கள். நீ ஜெயபாலனுக்குக் கூறும் அறிவுரைகளும் அப்படிப்பட்டவையே. அவனை இலக்கியப் பேரவையில் சேர்க்க முடியுமா...? அறிவில்லாதவனானாலும் ஒழுக்கமுள்ளவனாக இருந்தால் அவனிடம் பணத்தைப் பெற்று மண்டபத்தைக் கட்டிக் கொண்டு, அவனை உறுப்பினனாக்கலாம். இவனை உறுப்பினனாக்கிய பின் இவன் குடித்துவிட்டு வீதியில் கலாட்டாச் செய்தால் ஒழுக்கமானவர்களைப் பிறார் மதிப்பார்களா...?''

அப்போது கையில் ஒரு போத்தல் சாராயத்துடன் வந்த ஜெயபாலன்; ‘‘இந்தா இதைப்பிடி'' என்றான்.

அதைக் கண்ட புஷ்பநாதன் நடுங்கினான்; ‘‘ஜெயபாலு வீட்டில் வைத்துக் குடிப்பதை எனது மனைவி விரும்பமாட்டாள். தயவு செய்து அதை மறைத்து வை. அவள் கண்டால் எனக்கு நாலைந்து நாட்களுக்குச் சோறு தரமாட்டாள்''

‘‘பொம்பிளைகளுக்கு இஞ்சை எல்லாரும் பயப்படுறாங்கள். அன்றைக்கு வீட்டுக்கு வந்த நவராசா குடிக்க மாட்டான் என்றிட்டான். கேட்டால் மனிசி பேசுவாளாம்.. ‘‘என்னடா பொல்லாத மனிசி'' ஜெயபாலன் ஏசினான்.

“பலத்துக் கதையாதை. மனிசின்ரை காதிலை விழுந்தால் கரைச்சல்” நடுங்கினான் புஸ்பநாதன்.

“அப்ப வீட்டை வாருங்கோ போவம்” என்ற ஜெயபாலன் திரும்பி நடந்தான்.

**849. காணாதான் காட்டுவான் தான்காணான் காணாதான் கண்டான்ஆம் தான்கண்ட வாறு.**

எல்லாவற்றையும் அறிந்தவனாகத் தன்னை எண்ணிக் கொண்டிருப்பவனுக்கு அறிவிப்பவன் அறிவில்லாதவனாவான். அறியும் திறன் இல்லாத அவன் தான் அறிந்த வகையில் அறிவுள்ளவனாவான்.

**ஒரு பேய்**

அங்கிருந்து கதைத்தால் ஜெயபாலன் பலத்துக் கத்துவான். அதனால் அவனை மெதுவாக அழைத்துக் கொண்டு வெளியே வந்தான் புஷ்பநாதன். நவராசா அவனுடன் செல்ல விரும்பாது அங்கே தங்கி நின்றான்.

அதைக் கண்ட ஜெயபாலன் பலமாகக் கேட்டான்; “உனக்குத்தனியாக வெற்றிலை வைக்க வேண்டுமோ….? வாடா” என்றான்.

நவராசாவுக்கு அவனுடன் செல்லப் பயமாக இருந்தது. ஜெயபாலனை இலட்சுமிக்குக் கண்ணில் காட்டக் கூடாது. அவள் துர்க்காவுடன்

அவனை ஒற்றுமை யாக்கிய அன்று கூறினாள்; “நவம் நீங்கள் எவ்வளவு நல்லவர். நீங்கள் ஏன் ஜெயபாலனுடன் சேர்ந்து திரிகிறீர்கள்? அவனை ஊரில் யாரும் மதிப்பதில்லை. அன்று நீங்களும் எனது கணவரும் அவனது பிறந்த நாள் விழாவுக்குச் சென்றீர்கள். மற்றவர்களைப் போல் அங்கு சென்று விட்டு வந்திருக்கலாம். நீங்கள் இருவரும் அவனோடு சேர்ந்து குடித்து விட்டுச் சண்டையிட்டீர்கள். ஊர்ச் சனம் முழுக்க உங்களையும் சேர்த்துத் தான் கேவலமாகக் கதைத்தது. மனிதன் குடிப்பதே பாவம். குடிக்கும் தீய பழக்கத்தால் உங்கள் மதிப்பை இழந்து விடுவீர்கள். அத்துடன் நல்லவர்களின் உறவை விரும்பாதவர்கள் தான் மதுபான வகைகளைக் குடிப்பார்கள். நீங்கள் மறைவாக இருந்து மதுவை அருந்தினாலும் அதனால் சச்சரவுகள் வந்தால் ஊர் சிரிக்கும். அதை ஏன் உங்களால் புரிந்து கொள்ள முடியவில்லை. குடிக்கப் பழகிவிட்டீர்கள். அதை விடலாம். விட முடியாவிட்டால் இரகசியமாக வீட்டில் இருந்து குடித்துவிட்டு உணவை உண்டுவிட்டு வீட்டிலேயே இருக்கலாம். அதுக்காக ஏன்ஜெயபாலனுடன் சேர்ந்து தெருவில் கூத்தாடுகிறீர்கள்”

செல்லாமல் நின்றால் கத்தி மானத்தை வாங்குவான் என்பதற்காக நவராசாவும் வெளியே வந்தான். ஜெயபாலனின் வற்புறுத்தலால் இருவரும் ஜெயபாலனின் வீட்டுக்கு வந்தனர்.

“நான் கடைசிவரையும் குடிக்க மாட்டன். நீ வீட்டிலிருந்து கத்தினால் இலட்சுமி பேசுவாள் என்பதற்காக வந்தனான்...” என்றான் புஷ்பநாதன்.

“நானும்குடிக்கிறேல்லை” என்றான் நவராசா.

“மனிசிமார் நல்லாய் இனிச்சுப் போய்ச்சினை. பெம்பிளையளுக்கு இடங் கொடுத்தால் தாற சாப்பாட்டிலையும் கவனமெடுப்பினை. உப்புக்கூடாது; புளி கூடாது எண்ணை கூடாதென்பினை. டேய் ஔவையார் கூட; “தையல்சொல் கேளேல்” என்று தான் சொல்லியிருக்கிறார்” என்றான் ஜெயபாலன்.

“பெம்பிளையின் சொல்லை நான் கேட்கவில்லை. நான் ஒழுக்கமாக வாழ விரும்புறன். குடிகுடியைக் கெடுக்கும். அத்துடன் எனது பேரனார் குடிக்கக் கூடாது என்று என்னிடம் சத்தியம் வாங்கியிருக்கிறார்” என்றான் நவராசா.

“உனது பிறந்த நாள் விழாவன்று மானம் போய்விட்டது” என்றான் புஸ்பநாதன்.

“என்ன மானம்.... மானமென்றால் என்ன...? உங்கை யார் குடிக்காதவை... ஓராளைச் சொல்லு பார்ப்பம். எல்லாரும் கெட்டவங்கள். இரகசியமாக எல்லாவற்றையும் செய்யிறங்கள். மதிப்பாய் இருக்கிறவை செய்வதொன்றும் வெளியே வராது. ஏன் உங்கடை கடவுள் விக்னேஸ்வரமூர்த்தி திறமானவரே....? நான் பல பிரச்சினைகள் கேள்விப்பட்டனான்.” என்றான் ஜெயபாலன்.

“நீ தேவையில்லாமல் கதைக்காதை. அதோடு அடுத்தவையைப் பற்றிக் கதையாதை. எந்தக் கதை கதைக்கிறதானாலும் அவர்களுக்கு நேரைதான்கதைக்க வேண்டும். அவர்கள் இல்லாத இடத்தில் கதைக்கக் கூடாது” என்றான் நவராசா.

“குடிச்சுவெறிச்சவை எல்லாரும் தத்துவம் பேசீனை. சரிசரி குடிக்காவிட்டால் போங்கோ.... ஆனால் இரகசியமாகக் குடிக்காதைங்கோ. என்னைப் போல பரகசியமாகக் குடியுங்கோ” என்று ஜெயபாலன் சொல்லிக் கொண்டிருந்தான். நவராசாவும் புஷ்பநாதனும் வெளியே வந்தனர்.

“உலகில் எல்லாரும் கெட்டவை என்று சொல்பவற்றை இவன் நல்லதென்றும், மதிப்பு மிக்கதென்றும் சொல்கிறான். எல்லாரும் உண்டு என்று சொல்பவற்றை இவன் இல்லை என்று சொல்கிறான். அப்படியான இவனை உலகில் வாழும் ஒரு பேயாக் கருதி நாம் விலக்கி வைக்க வேண்டும். இல்லாவிட்டால் நாமும் மக்களால் பழிக்கப்படுவோம்” என்றான் நவராசா.

“இனிமேல் இவனோடு சேரக்கூடாது” என்றான் புஷ்பநாதன்.

**850. உலகத்தார் உண்டு என்பது இல்என்பான் வையத்து**
**அலகையா வைக்கப்படும்.**

உலகத்தவர் எல்லோரும் உண்டு என்று சொல்பவற்றை இல்லை என்று கூறுபவன், உலகத்தில் காணப்படும் ஒரு பேய் எனக் கருதப்படுவான்.

## மாறுபாடு

மறுநாள் ஜெயபாலன் புஷ்பநாதனைத் தேடி, புஷ்பநாதனது வீட்டுக்கு வந்தான். ஜெயபாலனின் மோட்டார் வண்டியின் சத்தம் தூரக் கேட்ட போது, அது ஜெயபாலனது மோட்டார் வண்டி என்பதைத் தெரிந்து கொண்ட புஷ்பநாதன் இலட்சுமியிடம் தான் பட்டணத்திற்குச் சென்று விட்டதாகக் கூறும்படி சொல்லிவிட்டு வீட்டுள் சென்று விட்டான்.

ஜெயபாலன் மோட்டார் வண்டியால் தட்டுத்தடுமாறிய வண்ணம் இறங்கினான். அவன் தடுமாறி இறங்குவதைக் கண்ட சாரதி தில்லையம்பலம்; ‘‘ஐயா, நீங்கள் வண்டியினுள் இருங்கோ. நான் சென்று புஷ்பண்ணையை அழைத்து வருகிறேன்’’ என்றான்.

ஜெயபாலன் அதைக் காதில் வாங்கிக் கொள்ளவில்லை. தடுமாறியபடி நடந்து சென்றான். புஷ்பநாதனது நாய் பயங்கரமாகக் குரைத்தபடி ஓடிவந்தது.

இலட்சுமி வெளியே வந்தாள். ஜெயபாலன் தடுமாறியபடி உள்ளே வந்து கொண்டிருந்தான். நாய் அவனை நகரவிடாது மறித்து வைத்திருந்தது. இலட்சுமி நாயை அதட்டி விட்டு; ‘‘அவர் வீட்டில் இல்லை’’ என்றாள்.

‘‘எங்கே போட்டான்.?’’

“காலையில் போனவர். இன்னும் வரவில்லை”

“எங்கே போனவன்?”

“நாவலடிக்குப் போறதெண்டவர்”

“இப்ப புஷ்பனுக்கு நீ உபதேசஞ் செய்து திருத்திப் போட்டாய். என்னோடு சேரக்கூடாது. குடிக்கக்கூடாதென்றெல்லாம் சொல்லியிருக்கிறாய். குடிகாரன் என்ன கெட்டவனே...?” என்று கேட்டான் தனபாலன்.

இலட்சுமிக்கு என்ன பேசுவதென்று தெரியவில்லை. அதனால்; “நீங்கள் போங்கோ. நான் அவர் வந்ததும் சொல்கிறேன்” என்றான்.

“நீ சொல்லமாட்டாய். சொன்னாலும் அவன் வரமாட்டான். அவனுக்கு என்னைக் காணவே பிடிப்பதில்லை. என்னைக் கண்டால் பேயைக் கண்ட மாதிரி அவன்ரை முகம் மாறிவிடுகிறது. அதை விட நவராசா மோசம். அவன் என்னைக் காணவே விரும்புறான் இல்லை. நீதான் எம்மைப் பிரித்திருக்கிறாய்” என்றான் ஜெயபாலன்.

“நான் பிரிக்கவில்லை. சொல்லுறன் என்று குறை நினைக்காதைங்கோ, நீங்கள் பணக்காரர் எவ்வளவு நன்றாக வாழலாம். ஆனால் நீங்கள் எல்லோருடனும் முரண்படுவதால் தான் உங்களைக் கண்டதும் அவர்கள் வெறுக்கிறார்கள்; மறைகிறார்கள். மற்றவர்களை அனுசரித்து

வாழ்ந்தால் அவர்கள் உங்களை மதிப்பார்கள்'' என்றாள் இலட்சுமி.

''நான் யாரையும் வெறுப்பதில்லை. யாருக்கு என்னென்ன உதவி தேவையோ அவர்களுக்கு அந்தந்த உதவிகளைச் செய்யத் தயாராக இருக்கிறன். ஆனால் என்னை அவர்கள் மதிக்கிறார்களில்லை. என்னைப் பொறுத்தவரை எல்லோரும் என்னை மதிக்க வேண்டும். பேச்சில் குத்தல் இல்லாமல் கதைக்க வேண்டும். பார்வை நல்லபடியாக இருத்தல் வேண்டும். என்னைக் கண்டதும்பலரின் முகம் மாறி விடுகிறது. ''இவன் ஏன் இங்கு வந்தான்?'' என்றுதான் நினைக்கிறார்கள். அதுதான் எனக்கு வேதனையாக இருக்கிறது'' அழுதான் ஜெயபாலன்.

இலட்சுமிக்குத் தர்மசங்கடமாக இருந்தது; ''வாசலில் வைத்துத் திருப்பி அவனை அனுப்பலாமென்றால் முடியாது போல் இருக்கிறது'' என்று நினைத்தாள் இலட்சுமி.

''வந்தவனை உள்ளே வா என்று அழைக்கின்ற பண்பு கூட இல்லாமல் போய்ச்சு'' கவலைப்பட்டான் ஜெயபாலன்.

''நீங்கள் போய்விட்டு பிறகு வாங்கோ. அவர் எப்போ வருவாரெனச் சொல்ல முடியாது'' என்றாள் இலட்சுமி.

''சரி நான் வாறன். புஷ்பன் வந்தவுடன் என்னை வந்து சந்திக்கச் சொல்'' என்று

கூறிவிட்டுத் தடுமாறியபடி சென்று மோட்டார் வண்டியில் ஏறிய ஜெயபாலன். “புஷ்பன் எங்கேயோ போட்டானாம். பிறகு வருவம்” என்றான்.

“புஷ்பண்ணை நாங்கள் வரும்போது முற்றத்தில் நின்றவர்.” என்றான் தில்லையம்பலம்.

“அப்பேன் அவள் இல்லை என்று சொன்னவள். நான் போய்ப் பார்த்துக் கொண்டு வாறன்.” என்று இறங்கினான் ஜெயபாலன்.

அப்போது தான் தில்லையம்பலத்திற்குத் தான் தவறு செய்து விட்டேன் என்று விளங்கியது; “ஐயா” என்றான். இறங்கிய ஜெயபாலன் திரும்பித் தில்லையம்பலத்தைப் பார்த்தான்; “ஐயா, நீங்கள் மிகவும் நல்லவர். புஷ்பநாதனும் நவராசாவும் கூடாதவர்கள். அத்துடன் நீங்கள் பெரிய பணக்காரன். இந்தப் பிச்சைக்காரரைத் தேடி வருவது உங்களுக்கு மதிப்பில்லை. நீங்கள் மற்றவர்களோடு சேர்ந்து வாழ ஆசைப்படுகிறீர்கள். அதை உணராத அவர்கள் உங்கள் மீது மாறுபாடு கொள்கின்றனர். அதனால் இனிமேல் அவர்களுடன் சேராதீர்கள். அவர்கள் தேவையேற்பட்டவுடன் உங்களைத் தேடி வருவார்கள்” என்றான்.

“சரி நாங்கள் போவம். நீ சொல்வது சரி. அவை வருவினை” என்று புலம்பினான் ஜெயபாலன்.

---

**851. இகல்என்ப எல்லா உயிர்க்கும் பகல்என்னும்**
**பண்பின்மை பாரிக்கும் நோய்.**

---

எல்லா உயிர்களும் மற்ற உயிர்களோடு ஒற்றுமையாகக் கூடி வாழாமை என்னும் தீய குணத்தை இகல் என்று அறிஞர்கள் கூறுவார்கள்.

## நல்லது

வீட்டுக்குச் சென்ற ஜெயபாலன் நன்றாகக் குடித்து விட்டு முற்றத்தில் பிரண்டு கிடந்தான். அதைப் பார்க்கத் தில்லையம்பலத்திற்குக் கவலையாக இருந்தது. மெதுவாக அவனைத் தூக்கி உள்ளே கொண்டு சென்று கிடத்தி விட்டுப் புஷ்பநாதனின் வீட்டுக்கு வந்தான். அவனைக் கண்ட புஷ்பநாதன் மீண்டும் மறைந்து விட்டான். இலட்சுமி வெளியே வந்தாள்.

“அவர் இல்லை”

தில்லையம்பலம் அவளை நிமிர்ந்து பார்த்தான். அவளது முகத்தில் தோன்றிய உணர்வுகள் அவன் தன்னை நம்பவில்லை என்பதைத் தெரிவித்தன. அதனால் அவள்சொன்னாள்; “ஏன் இங்கே வந்தாய்? ஜெயபாலனுடன் பேச அவருக்கு விருப்பமில்லை அதனால்தான் அவர் ஜெயபாலன் வந்த போது மறைந்திருந்தார். ஜெயபாலனுக்கு மற்றவர்களுடன் கூடி வாழத் தெரியாது. அதனால் தான் அவரும் நவராசாவும் அவரது உறவைத் துண்டிக்க நினைக்கின்றனர். அது ஜெயபாலனுக்கு நன்கு தெரியும். நன்கு தெரிந்த பின்பும் ஏன் அவருக்குக் கரைச்சல் கொடுக்கிறீர்கள். ஜெயபாலனுடன் சேர்ந்தால் ஊரில் உள்ள எவரும் எம்மை மதிக்க

மாட்டார்கள். ஜெயபாலன் பணக்காரன்தான். அதற்காக நாம் அவனுக்கு அடிமைப்பட முடியாது.ஜெயபாலன் குடித்து விட்டு மற்றவர்களை மதிக்காமல் அவர்களுடன் மாறுபாடு கொள்கிறான். அதனால் எல்லோரும் துன்பப்படுகின்றனர். அதனால் எனது கணவர் அவனோடு சேரப் பயப்படுகிறார். நீ போய் அவனிடம் இதைச் சொல்'' என்றாள் இலட்சுமி.

''நாம் வரும் போது புஷ்பநாதன் முற்றத்தில் நிற்பதை நான் கண்டேன். ஆனால் நான் அதைப் பற்றி ஜெயபாலனுக்குச் சொல்லவில்லை. ஜெயபாலன் புஷ்பநாதன் மீதும் நவராசா மீதும் பாசம் வைத்திருக்கிறார். அதனால் தான் சுற்றிச் சுற்றி வருகிறார். காலையில் வந்த போது அவர் அளவுக்கதிகமாகத் துன்பப்பட்டார். அதனால் நன்றாகக் குடித்து விட்டு முற்றத்தில் விழுந்து கிடக்கிறார். அவர் பாவம். அறிவில்லாதவர். அதை மற்றவர்கள் புரிந்து கொள்ளாமல் இருக்கிறார்கள்; ''ஒருவன் தன்னோடு பொருந்தாமல் வேறுபடுதலைக் கருதி அன்பில்லாத செயல்களைச் செய்தாலும், மற்றவர்கள் மாறுபாடு கொண்டு அவனுக்குத் துன்பஞ்செய்யக் கூடாது'' என்று பெரியவர்கள் சொல்லக் கேட்டிருக்கிறேன். பழகிய ஒருவர் காரணமில்லாமல் பிரிய நினைத்துத் துன்பங்களைச் செய்தாலும், நல்லவர்கள் மாறுபாடு கொண்டு அவனுக்குத் துன்பஞ் செய்யக் கூடாது என்பது தான் அதன் கருத்து. ஆனால் ஜெயபாலன் மற்றவர்களை வருத்துவதற்காகச் செயற்படவில்லை. தனது அறியாமை காரணமாக தான் செய்பவையெல்லாம் அன்பான செயல்கள் என்று

நினைத்துச் செய்கிறான். ஆனால் நவராசாவும் புஷ்பநாதனும் அவன் தம்மை விட்டுப் பிரிய வேண்டுமென்பதற்காக அவனுக்குத் துன்பத்தைத் தருகின்ற செயல்களைச் செய்கின்றனர். இது நல்லதல்ல என்று சொல்லி விட்டுப் போகத்தான் வந்தேன்'' என்றான் தில்லையம்பலம்.

இலட்சுமி எதுவும் பேசவில்லை; ''நீ போ நான் அவரை அனுப்புகிறேன்'' என்றாள்.

அன்றிரவு நவராசாவும் புஷ்பநாதனும் ஜெயபாலனின் வீட்டுக்கு வந்தனர். அப்போதும் ஜெயபாலன் மதுமயக்கத்தில் இருந்தான். அவர்களைக் கண்டதும் எழுந்தான். ''நீங்கள் என்னோடு சேர்ந்து குடிக்கமாட்டீர்கள் என்ன?'' என்றான்.

''எமக்குக் குடிக்க விருப்பமில்லை. அத்துடன் உன்னுடன் சேர்ந்து குடித்தால் எம்மை ஊரவர் இகழ்வர். அதனால் நாங்கள் உன்னுடன் சேரமாட்டோம். நீ எம்முடன் சேர்வதானால் குடியை விடு'' என்றான் நவராசா.

ஜெயபாலன் எதுவும் பேசவில்லை; ''ஏன் நீ அளவுக்கு மீறிக் குடிக்கிறாய்? அப்படிக் குடிப்பதால் தான் நீ மற்றவர்களுடன் சண்டைக்குப் போகிறாய். அதனால் அவர்கள் உன்னையும், உன்னோடு சேருபவர்களையும் மதிப்பதில்லை. அப்படி மக்கள்

மதிக்காமல் விடுவதை நான் அவமானமாகக் கருதுகிறேன்'' என்றான் புஷ்பநாதன்.

''நீங்கள் என்னோடு சேர்வது அவமானம் என்று நினைத்து என்னை ஒதுக்கி வைத்தாலும் நான் உங்களின் மீது கோபப்பட மாட்டேன்.'' என்றான் ஜெயபாலன்.

''நீ குடிப்பதை விடுவதாகச் சொன்னால் தான் நான் இங்கு வருவேன். நீ குடிப்பதை விட்டால் தான் எனது வீட்டுக்கு வரலாம்'' என்று கூறிவிட்டு எழுந்தான் புஷ்பநாதன்.

''எம்மில் பாசம் வைத்திருப்பதாகச் சொல்லும் நீ, எமக்காக ஏன் குடிப்பதை விடக் கூடாது'' என்று கேட்டு விட்டு எழுந்து சென்றான் நவராசா.

எழுந்து செல்லும் இருவரையும் பார்த்துக் கொண்டிருந்தான் ஜெயபாலன்.

---

**852. பகல்கருதிப் பற்றா செயினும் இகல்கருதி**
**இன்னாசெய் யாமை தலை.**

---

ஒருவன் தன்னோடு கூடி வாழாது தீமைகளைச் செய்தாலும், அவனோடு மாறுபடாமல் அவனுக்குத் துன்பஞ் செய்யாதிருத்தல் நல்லது.

## அழியாப்புகழ்

காலையில் எழுந்த நேரம் முதல் ஜெயபாலனுக்குத் தலை வலித்துக் கொண்டிருந்தது. முதல் நாள் அளவுக்கதிகமாகக் குடித்ததால் உண்டான தலைவலி அது என்று அவனுக்குப் புரிந்தது. அந்தத் தலைவலி சாராயம் குடித்தால் தான் நிற்கும். அதனால் போத்தலை எடுத்துத் திறந்தான்.

“ஐயா”

ஜெயபாலன் நிமிர்ந்து பார்த்தான். எதிரே தில்லையம்பலம் நின்றான். சாராயப் போத்தலை மேசையில் வைத்து விட்டு நிமிர்ந்து பார்த்தான். “ஐயா, நீங்கள் இந்த ஊரில் பெரும் பணக்காரர். எவ்வளவு வசதிகள் உங்களுக்கு இருக்கிறது. அப்படி இருந்தும் உங்களை யாரும் மதிக்கிறார்கள் இல்லை. இதைப்பற்றி நீங்கள் யோசித்துப் பார்த்தீர்களா?”

ஜெயபாலன் எதுவும் பேசவில்லை. தில்லையம்பலத்தைப் பார்த்துக் கொண்டு நின்றான்; “ஐயா, சந்தியில் அன்றன்று உணவுக்குப் பிச்சை எடுத்து உண்ணும் கதிரவேலன் கூட உங்களை மதிப்பதில்லை..”

“உண்மைதான்” அன்றொரு நாள் கதிரவேலன் ஜெயபாலனைக் கண்டு விட்டு; “ஐயா பிச்சை போடுங்கள் சாமி. நல்லாயிருப்பியள்”

என்றான் மது மயக்கத்தில் இருந்த ஜெயபாலன் கேட்டான்; ‘‘ஏன் பிச்சை எடுக்கிறாய்? இளம் வயதில் உழைத்துச் சம்பாதித்து வைத்திருந்தால் இயலாத காலத்தில் வீட்டிலிருந்து மரியாதையாகச் சாப்பிடலாம். இளமைக்காலத்தில் மனம்போனபடி வாழ்ந்துவிட்டு இப்போது பிச்சை எடுக்கிறாய்’’ என்றான்.

‘‘ஐயா, என்னுடைய காலைப் பாருங்கோ. விபத்தில் முடமாகி விட்டன’’ என்று அந்தப் பிச்சைக்காரன் காலைக் காட்டினான். ஆனால் ஜெயபாலன் அதைப் பார்க்காது சென்று விட்டான். அதன்பின் அவன் ஜெயபாலனைக் கண்டால் தான் வைத்திருக்கும் பிச்சை எடுக்கும் பாத்திரத்தை மறைத்து விட்டுப் பேசாமல் இருப்பான்.

‘‘ஒருவன் மாறுபாடு என்ற கொடிய துன்பந்தரும் நோயை நீக்கிவிட்டால், அது அவனுக்கு அழிவில்லாத நிலையான புகழைக் கொடுக்கும்’’ என்பார்கள். நீங்கள் தயவு செய்து மற்றவர்களை மதிக்கப்பழகுங்கள். அப்போது உங்களை எல்லோரும் மதிப்பார்கள். கொடிய மிருகங்களைக் கூட அன்பால் வசியப்படுத்தலாம்’’ என்றான் தில்லையம்பலம்.

ஜெயபாலன் சாராயப் போத்திலை எடுத்து ஒரு கரையில் வைத்து விட்டுத் தில்லையம்பலத்தின் அருகே வந்து சொன்னான்; ‘‘என்னில் யாரும் அக்கறைப் படுவதில்லை. ஊரில் உள்ளவர்கள் என்னிடம் பணம் பெற நினைக்கிறார்களே தவிர என்னை மதிக்க விரும்புவதில்லை. நீ அக்கறைப்பட்டுச் சொன்னமையால் உனது வார்த்தைகளை

மதிக்கிறேன். இனிமேல் நான் சாராயத்தைக் குடிக்காமல் விடவும் மற்றவர்களை அனுசரித்து நடக்கவும் முயற்சிக்கிறேன்'' என்றான்.

அன்று பகல் ஜெயபாலன் மோட்டார் வண்டியில் சென்று அந்தப் பிச்சைக்காரனின் அருகில் இறங்கினான்; ''ஐயா, தருமதுரையே விபத்தில் சிக்குண்டு கால்களை இழந்த எனக்கு உதவி செய்யுங்கள். உங்களுக்குப் புண்ணியம் கிடைக்கும்'' என்று சொல்லிக் கொண்டிருந்தவன் ஜெயபாலனைக் கண்டதும் கதைப்பதை நிறுத்தி விட்டுப் பாத்திரத்தை மறுபக்கம் வைத்தான்.

ஜெயபாலன் அவனின் அருகே சென்று அவன் வைத்திருந்த பாத்திரத்தைப் பார்த்தான். அதனுள் இரண்டு ரூபா நாணயங்கள் இரண்டும் ஒரு ரூபாய் நாணயங்கள் மூன்றும் இருந்தன. ஜெயபாலன் அவனுக்கருகில் சென்ற போதும் அவன் நிமிர்ந்து ஜெயபாலனைப் பார்க்கவில்லை.

ஜெயபாலன் தனது சட்டைப் பையில் இருந்து ஆயிரம் ரூபாத் தாள் ஒன்றை எடுத்து அவனதுப் பாத்திரத்தில் போட்டு விட்டு அவனது முகத்தைத் பார்த்தான். அவனது முகம் பிரகாசித்தது; ''ஐயா நீங்கள் நல்லாய் இருக்க வேண்டும். தர்மதுரையே நீங்கள் குடும்பத்தோடு குதூகலித்துது இருக்க வேண்டும்'' என்றான்.

வீட்டுக்கு வந்த ஜெயபாலன் அன்று மிகவும் சந்தோசமாக இருந்தான். ''ஐயா இன்று அந்தப் பிச்சைக்காரன் வாழ்த்தியதைப் பார்த்தீர்களா...? நாம் யாருக்கும் பொருட்களை

அள்ளிக் கொடுக்கா விட்டாலும் அவர்களுடன் மாறுபாடின்றியிருந்தால் அவர்கள் மதிப்பார்கள். ஐந்தறியுள்ள சீவன்களுக்குக் கூட அன்பின் மகத்தும் தெரியும்'' என்றான் தில்லையம்பலம்.

அன்று இரவு நவராசாவும் புஷ்பநாதனும் ஜெயபாலனின் வீட்டுக்கு வந்தனர். ''நீ, ஒருவாரகாலமாகக் குடிக்கவில்லை என்று கேள்விப்பட்டேன். குடித்தால் தான் பிரச்சினைகள் பலவும் உண்டாகும். ஒருவன் மறுபட்டு இருப்பது என்னும் கொடிய துன்பத்தைத் தரும் நோயை நீக்கிவிட்டால், அவனுக்கு அழியாத புகழ் உண்டாகும். இனி உன்னை எல்லோரும் மதிப்பார்கள்'' என்றான் புஷ்பநாதன்.

''இதைத் தொடாந்து கடைப்பிடி'' என்றான் நவராசா.

---

**853. இகல்என்னும் எவ்வநோய் நீக்கின் தவல்இல்லாத்**
**தாவில் விளக்கம் தரும்.**

---

ஒருவன் மாறுபட்டு இருப்பது என்று சொல்லப்படும் கொடிய நோயை மனதில் இருந்து நீக்கி விட்டால், அவனுக்கு அழியாத புகழ் உண்டாக்கும்.

## பெரும் இன்பம்

அன்று நாவலர் ஸ்ரீ வித்தியா மகா கணபதி ஆலய இரவுப் பூசைக்கு ஜெயபாலன் வந்த போது, விக்னேஸ்வரமூர்த்தி அவனைக்

கரங்குவித்து மகிழ்ச்சிப் பெருக்குடன் வரவேற்றார்; "நான் கனவு காண்கிறேனா?" என்று சந்தேகப்பட்ட ஜெயபாலன் "நவராசா, புஷ்பநாதன்" என்று அழைத்தான். அவனுக்கு அருகில் நின்ற அவர்கள் இருவரும்; "என்ன! என்ன....?" என்று கேட்டனர்.

"ஒன்றுமில்லை" என்று மகிழ்ச்சிப் பெருக்குடன் சிரித்தான் ஜெயபாலன்; "பணத்தால் எதையும் சாதிக்கலாம் என்ற நோக்கில்தான் பணமுள்ளோர் பல அடாவடித்தனங்களில் ஈடுபட்டுவிட்டுத் தமது பணப்பலத்தால் அவற்றையெல்லாம் மூடிமறைத்து விட்டுத் தாம் எதுவும் செய்யாத நல்லவர் என்று எண்ணுகிறார்கள்." என்று விக்னேஸ்வரமூர்த்தி சொன்ன வார்த்தைகள் ஜெயபாலனின் காதுகளில் எதிரொலித்தன; "அப்படிச் சொன்ன விக்னேஸ்வரமூர்த்தியா தன்னை மகிழ்வுடன் வரவேற்கிறார்" என்று எண்ணினான் ஜெயபாலன்.

நாவலர் ஸ்ரீ வித்தியா மகா கணபதிக்குப் பூசை செய்து விட்டுக் காளாஞ்சியுடன் வந்த குருக்கள் அதை ஜெயபாலனுக்குக் கொடுத்தார். ஜெயபாலன் அவரை வணங்கி விட்டு குருக்களிடம் காளாஞ்சியைப் பெற்றுக் கொண்டான். அவன் முதல்நாள் குருக்களைச் சந்தித்த போது அவர் சொன்னார்; "ஜெயபாலு துன்பங்களுள் பெருந் துன்பமான இகல் என்று சொல்லப்படுகின்ற மாறுபாடு ஒருவனை விட்டு நீக்கி விட்டால், அவனிடத்து இன்பங்களுட் பெரிய இன்பம் உண்டாகும் என்று பெரியவர்கள் சொல்வார்கள். இதுவரை காலமும் உனது அறியாமை காரணமாக நீ மற்றவர்களுடன் மாறுபாடு கொண்டு வாழ்ந்தாய்.

இப்பொழுது மாறுபாடு என்ற கொடிய நோய் உன்னை விட்டு நீக்கி விட்டது. இனி நீ பெரும் இன்பத்துடன் வாழ்வாய்''

அவனது கண்கள் கலங்கின. அவனும் பிரமுகர்களும் மக்களும் மேள வாத்தியத்துடன் உள் வீதியைச் சுற்றி, கோவிலில் தெற்கு வீதியில் அமைந்திருந்த கலாச்சார மண்டபத்திற்கு வந்தனர். மண்டப வாசல் மிகவும் அழகாகத் தோரணங்களாலும் வாழை மரங்களாலும் மாவிலைகளாலும் அலங்கரிக்கப்பட்டிருந்தது. மண்டப வாசலில் நிறைகுடம் வைக்கப்பட்டிருந்தது. ஆள் அளவு உயரத்தில் இரண்டு குத்து விளக்குகள் பளபளத்தன. விக்னேஸ்வரமூர்த்தி தீப்பெட்டியை எடுத்துக் கொடுக்க ஜெயபாலன் மங்கல விளக்கேற்றினான். பின் அறிஞர்களும் பிரமுகர்களும் மங்கள விளக்கேற்றினர்.

பிரமுகர்களும் அறிஞர்களும் ஜெயபாலனுக்கு மலர்மாலை அணிவித்தனர். பண்டிதர் கந்தையா அவனுக்குப் பொன்னாடை போர்த்தினர். ஜெயபாலன் கனவுலகில் மிதந்தான். அவனது நெடுநாளைய ஆசை தீர்ந்தது; ''உனக்குக் கடைசிவரையும் மாலை போட மாட்டார்கள்; பொன்னாடை போர்த்தமாட்டார்கள். அது கற்றவர்களுக்கும் உயர்ந்தவர்களுக்கும் கற்றவர்களால் செய்யப்படும் சிறப்பு'' என்றுஒருநாள் நவராசா அந்த மண்டபத்துள் வைத்துச் சொன்னது அவனுக்கு நினைவில் வந்தது.

''எமது பிரதேசத்தில் பதினைந்து கலைஞர்கள் எவ்வித வருமானமும் இன்றிக்

கஷ்டப்படுகிறார்கள். இவர்களது வறுமையைப் போக்க வேண்டுமென்று நாம் பல வருடங்களாக கனவு கண்டு கொண்டிருந்தோம். அந்தக் கனவு இன்று நிறைவேறுகிறது. எமது பிரதேசத்தைச் சேர்ந்த ஜெயபாலன் அவர்கள் வங்கியில் இருபத்தைந்து இலட்ச ரூபாவை நிரந்தர வைப்பிலிடுகிறார். அதன் மூலம் வரும் வட்டிப் பணத்தைக் கொண்டு மாதா மாதம் அக்கலைஞர்களுக்கு உதவ இருக்கிறோம். இவ்வுதவியைச் செய்த திரு. ஜெயபாலன் அவர்களை நான் பாராட்டுகிறேன். அவர் இன்னும் பல சமூக சேவைகளைச் செய்ய வெண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறேன்'' என்றார் விக்னேஸ்வரமூர்த்தி.

கூட்டம் முடிவடைந்ததும் ஜெயபாலன் தனது வீட்டிற்கு மேள தாளத்துடன் அழைத்துச் செல்லப்பட்டான். எல்லோரும் சென்ற பின்பு நவராசாவும் புஷ்பநாதனும் நின்றனர்.

''நவம், புஷ்பா உங்கள் இருவரினதும் ஆலோசனைப் படி நடந்ததால் தான் நான் கௌரவிக்கப்பட்டேன். இதை நான் மறக்க மாட்டன்'' கண் கலங்கினான் ஜெயபாலன்.

''நன்றி சொன்னால் போதாது. இப்படியே வாழ்நாள் பூராகவும் வாழ்ந்து காட்டு. அதைத்தான் நான் விரும்புகிறேன்'' என்றான் நவராசா.

''கடைசிவரையும் நான் மாறமாட்டன். முன்பு நான் வாழ்ந்த வாழ்க்கையில் பட்ட தன்பங்கள் போதும்' என்றான் ஜெயபாலன்.

**854. இன்பத்துள் இன்பம் பயக்கும் இகல் என்னும்
துன்பத்துள் துன்பம் கெடின்.**

மாறுபாடு என்ற துன்பங்களில் கொடிய துன்பத்தை நீக்கியவனுக்கு, அ.்.து இன்பங்களில் சிறந்த இன்பத்தைக் கொடுக்கும்.

## வெல்ல முடியாதவன்

நவராசா மிகவும் சந்தோஷமாக இருந்தான். என்றுமில்லாதவாறு அவனுக்கு வாழ்க்கை இனித்தது. திருமணம் புரிந்த நாள் முதல் துர்க்கா அவனுடன் மாறுபாடு கொண்டிருந்தாள். எதற்கும் அவள் குத்தலாகக் கதைப்பாள். நவராசா செய்யும் செயல்களில் குற்றங் காண்பாள். நவராசாவின் வீட்டார் தகுதியில்லாதவர்கள் என்று குறைகூறி அங்கு செல்ல மறுப்பாள். எந்த நேரமும் தன்னை அலங்கரித்துக் கொண்டிருப்பாள். நவராசாகமத்திற்குச் சென்று வந்தால் அவனுக்கு உணவு பரிமாற மாட்டாள். அவன் கமஞ் செய்வதை வெறுத்துப் பேசுவாள். அதனால் அவன் துர்க்காவுடன் வாழ முடியாதென்று நினைத்துத் துர்க்காவின் வீட்டை விட்டு வெளியேறிவிட்டான். அவன் சாப்பாட்டுக் கடைகளில் சாப்பிட்டு விட்டு நண்பர்களின் வீடுகளில் தங்கினான். அதனால் மிகவும் வருந்திய இலட்சுமியும் புஷ்பநாதனும் நவராசாவின் வீட்டுக்கு வந்து கதிரேசனுடனும் நவராசாவுடனும் கதைத்து விட்டுப் புஷ்பநாதன் தனது வீட்டுக்குச் செல்ல இலட்சுமி துர்க்காவிடம் சென்றாள்.

துர்க்கா, தன்னை நன்கு அலங்கரித்து விட்டு எந்தக் கவலைகளுமின்றி வானொலியில் சினிமாப்பாடலொன்றைக் கேட்டுக் கொண்டிருந்தாள். அவளின் அருகே சென்ற இலட்சுமி வானொலியை நிறுத்தினாள். துர்க்கா இலட்சுமியை நிமிர்ந்து பார்த்தாள்.

“துர்க்கா உன்னிடம் எப்போது பணம் வந்தது? உனது சகோதரர்கள் வெளிநாடுகளுக்குச் செல்லு முன் உனக்கு மாற்றிப் போடக் கூடச் சட்டை இருக்கவில்லை. அதை நினைத்துத்தான் உனது சகோதரர்கள் இலட்சம் இலட்சமாகப் பணத்தை அனுப்புகிறார்கள். பல இலட்ச ரூபா பணம் உன்னிடம் இருந்த போதும் உன்னைத் திருமணம் செய்து கொள்ள யாரும் விரும்பவில்லை. அது உனக்குத் தெரியும். பேசி வரும் திருமணங்களை உனது இனத்தவர்கள் குழப்பிக் கொண்டிருந்தனர். அதற்குக் காரணம் நீயும் உனது பெற்றோரும் தான். அயலவர்களுடனும் இனத்தவர்களுனும் மாறுபாடு கொண்டு நீங்கள் நடந்ததால் அவர்கள் உனக்குப் பேசி வந்த திருமணங்களைக் குழப்பிக் கொண்டு இருந்தனர். அதனால் அடிபாடுகள் பிரச்சினைகள் சிக்கல்கள் எல்லாம் வந்தன. எப்படித்தான் இரகசியமாக உனக்கு மாப்பிள்ளை தேடினாலும் உங்கள் எதிரிகள் அதை எப்படியோ அறிந்து அந்தந்த இடங்களுக்குச் சென்று குழப்பி வந்தனர். அதனால் இன்றைக்கும் உனது உறவினர்களோடு நீங்கள் மாறுபாட்டுடன் தான் இருக்கிறீர்கள்.”

திடீரென்று வீட்டுக்கு வந்த இலட்சுமி என்றுமில்லாதவாறு பழைய பிரச்சினைகளைப்

பற்றிக் கதைத்துக் கொண்டிருந்ததை வியப்புடன் கேட்டுக் கொண்டிருந்தாள் துர்க்கா.

“சொல்கிறேன் என்று குறை நினைத்துக் கொள்ளாதே. நீ இளமையில் ஒழுங்காக வாழவில்லை என்றுதான் பலரும் நினைக்கிறார்கள். யாரோ ஒருவருடன் நீ காதல் கொண்டதாகவும், அவனது பெற்றோர் அவனுக்குத் தமது இனத்தவரின் பெண்ணை நிட்சயித்து அவனைப் பலாத்காரமாக வெளிநாட்டுக்கு அனுப்பியதாகவும் ஊரில் பேசுகிறார்கள். இது உண்மை என்பது உனக்குத் தெரியும். அதனால் உனது திருமணம் நடக்க மாட்டாது என்று தான் உனது பெற்றோர் நினைத்தனர். நான் நவராசா எமது வீட்டுக்கு வந்த போது மிகவும் இனிமையாகப் பேசி அவனது மனதை மாற்றி மிகவும் இரகசியமாகத்தான் உனது திருமண நடவடிக்கைகளைக் கவனித்தேன். அப்படியிருந்தும் அது எப்படியோ வெளிவந்து விட்டது.எ னினும் நவராசாவைச் சமாளித்து ஒருமாதிரியாக அவனைச் சம்மதிக்க வைத்தேன். இப்போது நவராசா உன்னுடன் கோபித்துக் கொண்டு போய் விட்டான். உனது தாயார் எந்த நாளும் கண்ணீர் விட்டு அழுதபடி. இப்போது உள்ள நிலைமையில் நவராசா உன்னை விட்டுப் போனால் உனது நிலை என்ன…? யாராவது உனது இனத்தவர்கள் உன்னைப் பற்றி நவராசாவுக்குத் தறாகச் சொன்னால் உனது வாழ்க்கை பாழாகிவிடும். அத்துடன் மிகவும் நல்லவனான நவராசா தற்கொலை செய்தாலும் செய்து விடுவான். பெண் எப்பொழுதும் கணவனைத் தனது கைக்குள் வைத்திருக்க வேண்டும். அவனது விருப்பங்களைப் பூர்த்தி செய்தல் வேண்டும். விருப்பமில்லா விட்டாலும் அவனே கதியென்று

நடிக்கத் தெரிந்திருத்தல் வேண்டும். அத்துடன் கணவனது பெற்றோர் உறவினர்களுடன் நல்லுறவைப் பேணுதல் வேண்டும். கணவனது பெற்றோரையும் இனத்தவரையும் தன்வசமாக்கும் பெண்வாழ்க்கையில் மிகவும் உயர்ந்த நிலையில் இருப்பாள். அவளை அவர்கள் ஏத்தித் தொழுவார்கள். நான் அப்படித்தான் நடந்து கொள்கிறேன். எனது கணவரின் பெற்றோரும் இனத்தவரும் என்னைக் கேளாமல் எனது ஆலோசனைகளைப் பெறாமல் எதையுஞ் செய்ய மாட்டார்கள். உன்னால் அப்படி வாழ முடியாவிட்டால் நடி. அவர்கள் அதை நம்புவார்கள். எப்போதும் ஒவ்வொரு வருடனும் பிரச்சினைப்பட்டுக் கொண்டிருப்பதால் எதையும் சாதிக்க முடியாது. அவர்களுடன் ஒற்றுமையாக வாழ்ந்தால் உன்னை அவர்கள் போற்றிப் புகழ்வார்கள். அத்துடன் உன்னை வெல்ல யாராலும் முடியாது'' என்று கூறிவிட்டுச் சென்றாள்.

அன்று நவராசா வீட்டுக்கு வந்ததும் துர்க்கா விம்மி விம்மி அழுதாள்; ‘‘அத்தான், இனிமேல் நான் உங்களினதும் உங்கள் பெற்றோரினதும் மனம் நோக நடக்க மாட்டேன்'' என்றாள்.

நவராசா அவளைக் கட்டி அணைத்தான். அவனுக்குச் சொர்க்கம் தெரிந்தது.

---

**855. இகல்எதிர் சாய்ந்து ஒழுக வல்லாரை யாரே**
**மிகல்ஊக்கும் தன்மை யவர்.**

---

மாறுபாட்டை எதிர்த்து ஒற்றுமையின் உயர்ந்த சிறப்பை உணர்ந்து நடப்பவனை வெல்லும் வல்லமை எவருக்கும் இல்லை.

## விரைவில் நடப்பவை.

துர்க்கா தனது முன்னைய காதலனான குருபனை நினைத்துப் பார்த்தாள். அவன் நவராசாவை விட நூறு மடங்கு அழகானவன். நீளக்கால்சட்டையுடன் கண்ணாடியும் அணிந்து கொண்டு வீட்டுக்கு வந்தானேயானால் அவனின் அருகிலேயே அவள் எந்த நேரமும் இருப்பாள். அவனை விட்டுப் பிரிய வேண்டும் என்ற எண்ணம் அவளுக்கு வராது. அவனின் பெற்றோர் அவனைப் பலாத்காரமாக அழைத்துச் சென்று வெளிநாட்டுக்கு அனுப்பி விட்டனர். இருந்தும் அவள் அவனை மறக்கவில்லை. இரண்டு பிள்ளைகளுக்குத் தந்தையான பின்பும் அவன் அவளோடு கடிதத் தொடர்பு வைத்திருக்கிறான். அதனால் தான் அவளுக்கு நவராசா மீது வெறுப்பு ஏற்பட்டது. ஒருநாள் அவளது தாயார் சொன்னார்; ‘‘துர்க்கா, நீ பழையவற்றை எண்ணி உனது வாழ்க்கையைக் கெடுத்து விடாதே. எமது இனத்தவர்கள் நாம் இருக்கும் உயர்வான நிலையைக் கண்டு பொறாமையுற்று என்னென்ன செய்தார்களென்று உனக்குத் தெரியும். உனக்குப் பேசிவரும் திருமணங்களை யெல்லாம் குழப்பினவர்கள். கொப்பர் உனக்குப் பேசிவந்த திருமணத்தைத் தனது தங்கைதான் குழப்பியது என்று அடித்து மண்டை உடைத்தவர். கடைசியாக இலட்சுமியின் கெட்டித் தனத்தால் தான் இத்திருமணம் நடைபெற்றது. அதையும் குழப்புவதற்குப் பலர்

முயற்சித்தவை. ஏதோ கடவுள் அருளால் நடைபெற்றுவிட்டது. வாழ்க்கை நாம் விரும்பியபடி அமையமாட்டாது. கடவுள் அமைத்தபடி தான் நடைபெறும். நாம் விரும்பியது கிடைக்காவிட்டாலும் கிடைத்ததை மகிழ்வுடன் ஏற்று அதற்கேற்றபடி வாழப்பழகிக் கொள்ள வேண்டும். உலகில் வாழ்பவர்களில் தொண்ணூறு சதவீதமானவர்கள் துன்பப் படுவது தாம் தாம் நினைத்தபடி வாழ்க்கை அமையவில்லையே என்று தான். கிடைத்ததை எமது தேவைக்கேற்றவாறு பயன்படுத்தப் பழகி விட்டால் வாழ்க்கை சொர்க்கமாகிவிடும். நவராசா நல்லவன். அவனை உனக்கு ஏற்றவனாக மாற்றினாயேயானால் உனக்கு மட்டற்ற மகிழ்ச்சி கிடைக்கும்'' என்று அழுதாள்.

அவளது தந்தை கவலையுடன் சொன்னார்; ``எந்த ஒரு செயலையும் நாம் எதிர்த்து நின்று வெற்றிக் காண முடியாது. ஐந்தறிவுள்ள மிருகங்களைக் கூட எதிர்த்தால் எம்மைத் தாக்கவரும். அவற்றின் மீது அன்பு கொண்டால் எமக்கு அடங்கி வாழும்; எமக்குச் சேவகஞ் செய்யக் காத்திருக்கும். நீ உனது கணவனுடன் மாறுபாடு கொள்வதால் அவனை வெற்றி கொள்வது எளிது இனிது என்று நினைக்காதே. உனது அழகும் பணமும் உன்னை அவ்வாறு நினைக்க வைக்கிறது. ஒர் ஆணுக்கு மனைவியின் அன்பான வார்த்தைகளும் இறுக்கமான அணைப்புத்தான் தேவை. இல்வாழ்க்கையில் அன்புதான் முக்கியம். கணவனோடு மாறுபாடு கொண்டால் அவன் முதலில் உனது கையால் சாப்பிட விரும்ப மாட்டான். பின் மதுபான வகைகளைக் குடிப்பான். அதன் பின் வீட்டை விட்டு வெளியேறுவான். இவ்வளவும் நடைபெற்றுவிட்டன. இனி அவனுக்கு ஒரு பெண்

அகப்பட்டாளேயானால் அவன் அவளுடன் உறவுகொண்டு விடுவான். துன்பப்பட்ட மனத்திற்கு அதுதான் ஆறுதலைக் கொடுக்கும். அதன்பின் உன்னுடன் அவன் ஒற்றுமையானாலும் அந்தப் பெண்ணைத்தான் விரும்புவான். அவளைத்தான் மோகினியாக நினைப்பான். இது உலக வழமை. இன்றும் உனக்குஅந்த நிலை ஏற்படவில்லை. அந்த நிலை ஏற்படுமுன் நீ அவனுடன் ஒற்றுமையாக மகிழ்வுடன் வாழ முயற்சி செய்''

அவர்கள் கூறியதைக் கேட்டு மனம் மாறிய துர்க்கா நவராசாவின் மீது அன்பு கொண்டாள். அதனால் நவராசா அவளை விட்டுப் பிரியக் கஷ்டப் பட்டான். அவன் இப்போது கமத்திற்குச் செல்வதில்லை. கமத்திற்குச் செல்ல அவனுக்கு விருப்பமில்லை. அவளுடன் எந்த நேரமும் சல்லாபிக்க வேண்டும் என்றே விரும்பினான். தோட்டத்தில் கூலி வேலை செய்யும் சுப்பிரமணியனிடம் தோட்டப் பொறுப்பைக் கொடுத்து விட்டு அவன் துர்க்காவுடன் இருந்தான்.

அன்று இலட்சுமி துர்க்காவின் வீட்டுக்கு வந்தாள். அவளுக்குத் துர்க்காவைப் பார்க்கச் சந்தோஷமாக இருந்தது; ''மாறுபாடு கொள்வதால் வெற்றிபெறுவது இனியது, எளியது என்று எண்ணியமையால் தான் உனக்குப் பல துன்பங்கள் ஏற்பட்டன. இன்று நீ எவ்வளவு இன்பமாக இருக்கிறாய். இப்போது நீ நவராசாவைக் கமத்திற்கும் போ என்று கலைத்தாலும் அவன் போக மாட்டான். அந்தளவில் வசியப்பட்டு விட்டான்'' என்று கண் சிமிட்டினாள் இலட்சுமி.

**856. இகலின் மிகல்இனிது என்பவன் வாழ்க்கை**
**தவலும் கெடலும் நணித்து.**

மாறுபாடு கொள்வதால் பிறரை வெல்வது எளிது என்று நினைப்பவனது வாழ்க்கை தவறிப் போவதும் அழிதலும் விரைவில் ஏற்படும்.

## அறிய மாட்டாதவன்

காலையில் நவராசாவின் வீட்டுக்கு வந்த சுப்பிரமணியம் பலமுறை சத்தமிட்டு அழைத்தும் எந்தவிதமான பதிலும் வராமையால் நவராசாவும் மனைவியும் எங்கோ காலையில் சென்று விட்டனர் என்று நினைத்துத் திரும்பிச் சென்ற போது வாசலில் படுத்திருந்த நாய் அவனைக் கண்டு குரைத்தது. நவராசாவின் வீட்டு நாய் வீட்டுக்குச் செல்வோரைக் கடிக்கும் என்பதால் சுப்பிரமணியம் நவராசாவின் வீட்டுக்கு வரும் போது கையில் ஒரு கம்பு கொண்டு வருவான்.

கம்பால் நாயை அடிக்கத் ஓங்கினான் சுப்பிரமணியம். அப்போது நாய் முன்பைவிட மூர்க்கமாகக் குரைத்தது. நாய் குரைக்கும் சத்தம் கேட்டு நித்திரை விட்டெழுந்த நவராசா யாரென்று பார்க்க வெளியே வந்தான். வாசலில் சுப்பிரமணியம் நாயோடு போராடிக் கொண்டி நின்றான்; ‘‘தர்மா.. உள்ளே போ’’ என்று அதட்ட நாய் உள்ளே சென்றது.

‘‘இன்று களை பிடுங்க இருபது பெண்களுக்குச் சொன்னனான். வாழைக்கும்

வெங்காயத்திற்கும் இறைக்க வேண்டும். புகையிலைக் கன்றுக்குப் பாத்தி கட்ட வேண்டும். மிளகாய்த் தறை கொத்த வேண்டும்..'' சுப்பிரமணியம் அன்றைய வேலைகளைச் சொல்லிக் கொண்டிருந்தான்.

''வல்லிபுரத்திற்கும் பழனிவேலுக்கும் நாதனுக்கும் சொன்னனான். அவர்கள் வருவார்கள். அவர்களை வேலை செய்ய விட்டு விட்டு நீ அவர்களுக்கு உணவும் தேநீரும் கடையில் வாங்கிக் கொடு. இந்தா இதில் இரண்டாயிரம் ரூபா இருக்கு'' என்று நவராசா பணத்தை நீட்டினான்.

சுப்பிரமணியம் பணத்தைப் பெற்றுக் கொண்டு சென்றான். துர்க்கா நித்திரையால் எழுந்து கட்டிலில் இருந்தாள். பின் கட்டிலால் எழுந்து அவனைக் கட்டியணைத்தாள்; ''முதலில் உங்கள் முகத்தை மழியுங்கள். நேற்று மழிக்காததால் முகத்தைப் பார்க்க அசிங்கமாக இருக்கு'' என்றவாறு எழுந்து சென்றாள்.

நவராசா சினிமாப்பாடலொன்றை முணுமுணுத்தவாறு எழுந்து சென்றான். அவன் முகத்தை மழித்து விட்டு, பல்துலக்கி முகங்கழுவி விட்டு வந்தபோது துர்க்கா தேவதையைப்போல நின்றாள். இளஞ்சிவப்பு நிற இரவு உடை அணிந்திருந்தாள். அவளது கவர்ச்சி மிக்க அற்புதமான அங்கங்கள் பொலிந்திருந்தன. அவளின் கையிலிருந்த தேநீர்க் கோப்பையில் இருந்து ஆவி மேலே சென்று கொண்டிருந்தது. தேநீர்க் கோப்பையுடன் அவளது கையையும் சேர்த்துப் பிடித்தான். முன்பென்றால் அவன் வீட்டை விட்டுச்

செல்லும்வரை அவள் நித்திரை விட்டெழமாட்டாள். அத்துடன் தேநீர் கொண்டு வந்து கொடுக்கவும் மாட்டாள். காலைச் சாப்பாட்டையும் தேநீரையும் அவன் சந்தியில் உள்ள தேநீர்க் கடையிலேயே முடிப்பான்; “இப்போது எவ்வளவு இன்பமாக இருக்கிறது” என்று எண்ணியவாறு மெதுவாகத் தேநீரை உறுஞ்சினான்.

துர்க்கா அவனுக்கு அருகில் வந்து மிக நெருக்கமாக உட்கார்ந்திருந்தாள். “சுப்பிரமணியம் ஏன் வந்தவன்?”

“இன்று கமத்தில் பலர் வேலை செய்கின்றனர். அவர்களுக்குத் தேனீரும் உணவும் வாங்க வேண்டும்...” நவராசா வார்த்தையை முடிக்க முன்பு துர்க்கா சொன்னாள்; “நான் சமைக்கட்டா...” அவள் வார்த்தைகளை முடிக்கு முன் நவராசா சொன்னான்; “ஐயையோ நீர் சமைக்க வேண்டாம். சமைத்தால் உமது அழகு கெட்டு விடும். வீட்டு வேலைகளைச் செய்யவும் சமையலைக் கவனிக்கவும் நான் வேலுப்பிள்ளையின் மனைவி லிங்னேஸ்வரியை ஒழுங்கு செய்து விட்டேன். இன்று வருவாள்..” என்றான் நவராசா.

வியப்புடன் நவராசாவைப் பார்த்தாள் துர்க்கா; “உம்மைப் பூப்போல வைத்துக் காப்பாற்றுமாறு அம்மா சொன்னா. முன்பு காலம் பகைத்ததால் நீர் கண்டபடி நடந்ததாக அம்மா சொன்னா. இனி நான் உம்மை விட்டுப் பிரிய மாட்டன. வேலைகளைச் கூலிக்காரர் செய்யட்டும்”

இலட்சுமி சொன்னபடி மாறுபாடு இல்லாமல் நடந்து கொள்வதால் எவ்வளவு இன்பம் எனக்குக் கிடைக்கிறது. முன்பு நான் மாறுபாட்டை விரும்பித் தீய வழியில் நடந்ததால் மகிழ்ச்சியைக் காணவில்லை. தோல்விகளையும் விரக்தி களையுமே சந்தித்தேன். இப்பொழுது வெற்றியையும் மகிழ்ச்சியையும் சந்திக்கிறேன்'' என்று நினைத்தாள் துர்க்கா.

''உமது விரும்பம்தான் எனது விருப்பம். நான் இனிமேல் உமது மனதைப் புண்படுத்த மாட்டேன்'' என்றான் நவராசா துர்க்கா மனதுள் இலட்சுமியை வாழ்த்தினாள்.

**857. மிகல்மேவல் மெய்ப்பொருள் காணார் இகல்மேவல்**
**இன்னா அறிவி னவர்.**

மாறுபாட்டை விரும்புகின்ற தீய அறிவை உடையவர்கள் வெற்றிக்குக் காரணமான நல்ல அறிவை அறிய மாட்டார்கள்.

## தேடி வரும் கேடு

காலை பத்து மணிக்கு சுப்பிரமணியம் நவராசாவின் வீட்டுக்கு வந்தான். பல முறை அழைப்புமணியை அடித்த பின்பு தான் நவராசா வெளியே வந்தான். அவனது கன்னத்தில் குங்குமம் பூசப்பட்டிருந்தது. தலை கலைந்து முகம் பொலிவிழந்து இருந்தது. முகத்தை, இடுப்பில்

கட்டியிருந்த சாரத்தை அவிழ்த்துத் துடைத்தபடி வந்த நவராசா என்ன நிலையில் இருந்திருப்பானென அனுபவஸ்தனான சுப்பிரமணியத்திற்குப் புரிந்தது. முன்பென்றால் நவராசா துர்க்காவைப் பற்றி மிகவும் கேவலமாகத்தான் அவனுக்குச் சொல்வான்; “எனக்கு வாழ்க்கை வெறுத்து விட்டது. இலட்சுமி, துர்க்கா தனது நெருங்கிய இனத்தவள்; மிகவும் நல்ல பெண்; குணவதியென்று சொல்லி எனது தலையில் கட்டி வைத்து விட்டாள். அவள் ஒரு பேய்; இல்லை பிசாசு. பிசாசென்றும் சொல்ல முடியாது. அரக்கி.இப்படியான ஒரு ஈவிரக்கமில்லாத பெண்ணா நான் காணவே இல்லை. மிருகங்கள் கூடத் தன்னுடன் சேர்ந்து வாழும் தன்னினம் சாராத மிருகத்திற்கு மனமிரங்கிப் பால்கூடக் கொடுக்கும். ஆனால் இவள் என்னை மட்டுமல்ல, எனது இனத்தவர்களைக் கூட மதிப்பதில்லை. எனது பெற்றோரை நாயை விடக் கேவலமாக நினைக்கிறாள். எனது வீட்டில் தண்ணீர் கூட இவள் குடிப்பதில்லை. என்னுடைய வாழ்க்கை வீணாகி விட்டது. பகல் உணவை என்னால் கடையில் சாப்பிட முடியவில்லை. அதனால் பகல் உணவை உனது வீட்டில் சமைத்துத் தர முடியுமா…..? நான் உனக்கு வேண்டியளவு பணம் தருகிறேன்” என்று கெஞ்சிய நவராசா தனது மனையுடன் சல்லாபித்து விட்டு வருகிறானென்றால் அவன் ஒற்றுமையாகி விட்டான் போலத் தெரிகிறது; “அப்பனே, மகா கணபதியே நல்லவனான நவராசாவுக்குக் குறைவைக்காதே” என்று மனதார வேண்டினான்.

“என்ன மணி” என்று கேட்டான் நவராசா

“சாப்பாட்டுக் கடைக்காரனின் இனத்தவர் யாரோ இறந்து விட்டாராம். அவன் கடையை மத்தியானத்துடன் பூட்டி விட்டான். அதனால் மாலை நேரம் கொடுக்க வேண்டிய தேநீருக்கு என்ன செய்வது…?”

“நான் தயாரித்துத் தருகிறேன்” என்று உள்ளேயிருந்து சொன்னாள் துர்க்கா.

“உன்னுடைய வீட்டில் வைக்க முடியாதா…..?” என்று கேட்டான் நவராசா.

“எனது மனைவியும் உங்களின் கமத்தில் தான் வேலை செய்கிறாள்”

“அப்ப அவளை வீட்டை அனுப்பித் தேனீரைத் தயார் செய்” என்றதும் சுப்பிரமணியம் “சரி” என்று கூறிவிட்டு நடந்தான்.

“மணி” நவராசா அழைத்தான். சுப்பிரமணியம் நவராசா அழைத்த சத்தம் கேட்டு திரும்பி வந்தான்; “இனிமேல் வேலைகாரர்களுக்குக் கடையில் தேநீரும் உணவும் வாங்க வேண்டாம். பொருட்களை வாங்கி உனது மனைவியிடம் கொடு அவள் தயாரித்த் தருவாள்” என்றான் நவராசா.

சுப்பிரமணியம் சில கணங்கள் நவராசாவை உற்றுப் பார்த்து விட்டுச் “சரி” என்று தலையாட்டிவிட்டு சென்றான்.

உள்ளே வந்த நவராசாக்குச் துர்க்கா சொன்னாள்; " என்னால் தேநீர் வைக்க முடியாதா..?" சிணுங்கினாள்.

நவராசா சிரித்தான்; "எமக்கு திருமணம் முடிந்து ஆறுமாதம் கழிந்தாலும், நாம் பிரச்சினைப்பட்டு மனக்கசப்புடன் தானே வாழ்ந்து வந்தோம். இப்போது தான் வேற்றுமைகளை மறந்து ஒற்றுமையாக மிகவும் மகிழ்வுடன் வாழ்கிறோம். முன்பு நீர் வேற்றுமைப்பட்டமையால் எனக்கு எவ்வளவு கேடு வந்தது. இனிமேல் அப்படி நீர் நடக்கக்கூடாது" என்றான் நவராசா.

கூரையில் எலிகளும் அணில்களும் குதித்து விளையாடும் சத்தம் வீடு உடைப்பதைப் போலக் கேட்டது.; "இவ்வளவு பெரும் சத்தத்தை நான் இவ்வளவு நாட்களாகக் கேட்கவில்லை. நான் பகலில இருந்தால்தானே கேட்க.." என்றான் நவராசா.

துர்க்கா சிரித்தாள். அவளது சிவந்த உதடுகள் சற்று நகர்ந்து நவராசாவுக்குப் போதையை ஊட்டியது; "நான்தான் உங்களுக்கு விதம் விதமாகச் சமைத்துத் தரல் வேண்டும். அதனால் லிங்கேஸ்வரியை வரவேண்டாமென்று சொல்லுங்கோ…".

"சமையல் மட்டும்தானா இங்கிருக்கு. முற்றம் வீடு வாசல் எல்லாம் பெருக்க வேண்டும். உடைகள் துவைக்க வேண்டும். பாத்திரங்கள் கழுவ வேண்டும். பூங்கன்றுகளுக்கு நீர்ப்பாய்ச்ச வேண்டும். இவையெல்லாவற்றையும் செய்ய

உம்மால் முடியுமா....? நான் நிறையச் சம்பாதிக்கிறேன். நீர் அரசகுமாரி மாதிரி இருக்க வேண்டும். பூப்போன்ற உமது கை என்றும் பூப்போலவே இருத்தல் வேண்டும். நீர் வேலை செய்தால் அவை மரத்து விடும்'' என்றவாறு அவளது கையைப் பிடித்து அவளது விரலை வருடினான்.

துர்க்கா சொர்க்கத்தில் மிதந்தாள்.

**858. இகலிற்கு எதிர்சாய்தல் ஆக்கம் அதனை
மிகல்ஊக்கின் ஊக்குமாம் கேடு.**

வேற்றுமையை விரும்பாது ஒற்றுமையாக வாழ்வதே ஒருவனுக்குச் சிறப்பைத் தரும். வேற்றுமைப் பட்டு வாழ்ந்தால் கேடு அவனைத் தேடி வரும்.

**கேடுவரும் போது**

ஜெயபாலன் புஷ்பநாதனின் வீட்டுக்கு வந்தான். இலட்சுமி புன்னகையுடன் அவனை வரவேற்று உள்ளே அழைத்துச் சென்றாள். அவள் அழகான பச்சைக் கோடிட்ட சேலையொன்று கட்டியிருந்தாள். அதற்கேற்றவாறு பச்சை அரைக்கைச் சட்டை போட்டிருந்தாள். தோள் மூட்டிற்குச் சிறிது கீழே சட்டையின் கை இருந்தது. கைகளின் திரட்சியான தசை பளபளத்தது. முதுகுமுழுவதும் தெரிந்தது. அதைப் பார்க்க ஜெயபாலனுக்குக் கண்கள் கூசின. கல்யாணஞ்

செய்து இரண்டு பிள்ளைக்குத் தாய் அவள். மூத்த மகனுக்குப் பதினெட்டு வயது. இந்த வயதிலும் இவளுக்கு நாகரிகம் வேண்டுமா…? முதல் நாள் அவனை அவனது மனைவியின் ஊரில் உள்ள பாடசாலைக்கு நிதிக்காக விருந்தினராக அழைத்திருந்தனர். அப்பாடசாலையின் அதிபர் பெண். நாற்பது வயதிற்கு மேலிருக்கும். அவளும் இலட்சுமியைப் போலவே சட்டை அணிந்திருந்தாள். இவர்கள் இப்படி அணிந்தால்கன்னிப் பெண்கள் எப்படி அணிவார்கள்..? முன் மாதிரியாக நடக்க வேண்டியவர்கள் இப்படி நாகரிகம் என்ற போர்வையில் தலைகீழாக நடக்கலாமா…"

"என்ன ஜெபாலு வந்தநேரம் தொடக்கம் யோசிக்கிறாய்?" என்று கேட்டான் புஷ்பநாதன்.

"ஒன்றுமில்லை" என்றான் ஜெயபாலன். அவன் குடித்து விட்டு இருக்கும் வேளைகளில போது இப்படியான ஆடை அணிந்த பெண்களைக் கண்டால் ரசித்துப் பார்ப்பான். தனது நண்பர்களுக்குக் கண்களால் சைகை காட்டுவான். பெண்கள் சிரித்தால் மெல்ல அவர்களுக்குக் கிட்டச் சென்று மெல்ல இடிப்பான். ஆனால் இப்போது அவனுக்கு வயிற்றைப் புரட்டியது.

"இன்று உனது மனநிலை சரியில்லை. என்னென்று சொல்" என்றான் புஷ்பநாதன்.

"ஒண்டுமில்லையடாப்பா. உன்னுடைய சகோதரியின் மகனுக்கு இப்ப எப்படி…? சத்திர

சிகிச்சை முடிந்து விட்டதென்று கேள்விப்பட்டனான். இப்ப எப்படி?'' என்று கேட்டான் ஜெயபாலன்.

''நான் வந்து சொல்ல வேண்டுமென்று நினைத்தனான். இப்ப அவனுக்குப் பூரண சுகம்.'' என்றான் புஷ்நாதன்.

அப்போது கஜேந்திரனும் நவராசாவும் அங்கு வந்தனர். கஜேந்திரன் சொன்னான்; ''நான் உங்களது வீட்டிற்குச் சென்றேன். நீங்கள் இங்கிருப்பதாகச் சொன்னார்கள். நீங்கள் தந்த பணத்தை நாம் வங்கியில் வைப்பிலிட்டு விட்டோம். முதல் மாத வட்டிக்காக வந்திருக்கு. நிங்கள் வந்து அதைக் கலைஞர்களுக்குக் கொடுக்கச் சொல்லித் தலைவர் சொன்னார்''

''என்னை ஏன் அதற்கு? தலைவரையே கொடுக்கச் சொல்லு. நான் வங்கியில் வைப்பிலிடப்பட்ட பணத்தின் வட்டிப்பணம்தான் இன்று கலைஞர்களுக்குக் கொடுக்கப்படு கிறது என்று கலைஞர்களுக்கும் எல்லாக் கலைஞர்களுக்கும் தெரியும். பொது மக்களுக்கும் தெரியும். பிறகேன் என்னை...'' என்றான் ஜெயபாலன்.

நவராசாவும் கஜேந்திரனும் அப்படிச் சொன்ன ஜெயபாலனை ஆச்சரியத்துடன் பார்த்தனர். ''ஒருவனுக்கு உயர்வு வரும் போது மாறுபாடு பற்றி எண்ணிப் பார்க்க மாட்டான். தனக்குக் கேடு வந்த போது தான் மாறுபாட்டின் தன்மையை உணர்வான். அவ்வேளையில் அவன் மாறுபாட்டின் தன்மையை உணர்ந்து அதனை எதிர்த்து வெற்றி பெற

நினைப்பான். இலக்கியப் பேரவையிலும் கோயிலிலும் சனசமூக நிலையத்திலும் ஜெயபான் அவமானப்பட்ட போதும், அவன் அதை எதிர்த்து இன்று வெற்றியடைந்து விட்டான்' என்று நினைத்தான் கஜேந்திரன்.

"இப்படி மாறிவிட்டானா ஜெயபாலன்? அறிவற்றவன் மனம் மகிழ்ந்து ஒரு பொருளை பிறருக்குக் கொடுக்கிறானென்றால், அது பெறுகின்றவனின் நல்வினை" என்று கூறிய விக்னேஸ்வரமூர்த்தி இன்று அவனை அழைத்து, அவனைக் கொண்டு கலைஞர்களுக்குப் பணம் கொடுக்க நினைக்கிறார். ஆனால் ஜெயபாலன் தனத பணத்தை விக்னேஸ்வரமூர்த்தி மூலம் கலைஞர்களுக்குக் கொடுக்குமாறு சொல்கிறான். இப்போ யார் பெரியவர்?" என்று நினைத்தான் நவராசா.

அப்போது இலட்சுமி ஒரு தட்டில் பல கோப்பைகளை அடுக்கி வைத்து தேநீர் கொண்டு வந்தாள். அவள் முதலில் பழைய ஒரு கோப்பையில் இருந்த தேநீரை எடுத்து புஷ்பநாதனுக்குக் கொடுத்தாள். பின்பு தட்டை ஜெயபாலனுக்கும் கஜேந்திரனுக்கும் நீட்டினாள். பின்பு தட்டிலிருந்த கோப்பையை எடுத்து நவராசாவுக்குக் கொடுத்தாள். அதை ஜெயபாலன் பார்த்துக் கொண்டிருந்தான். அதன் அர்த்தம் என்ன....? புஷ்பநாதனும் நவராசாவும் அவளால் சமமாக மதிக்கப்படுபவர்களா...?" அவனுக்குப் புரியவில்லை. இதெல்லாம் புதுநாகரிகம் என்று நினைத்தான்.

“நான் போயிட்டு வாறன்.” என்று எழுந்தான் கஜேந்திரன்.

“தலைவரைப் பணத்தைக் கொடுக்கச் சொல்” என்றான் ஜெயபாலன்.

**859. இகல்காணான் ஆக்கம் வருங்கால் அதனை**
**மிகல்காணும் கேடு தரற்கு.**

ஒருவன் தனக்குப் பொருள் வரும் போது மாறுபாடுபற்றிச் சிந்திக்க மாட்டான். தனக்குக் கேடு வரும்போது தான் மாறுபட்டிருத்தலின் தன்மையை உணர்ந்து அக்கேட்டை எதிர்த்து வெற்றிபெற நினைப்பான்.

நீதி உடையவன்

இலக்கியப் பேரவைக்குச் சென்ற கஜேந்திரன் சொன்னான்; “ஜெயபாலன் கலைஞர்களுக்கான பணத்தை உங்களைக் கொடுக்கச் சொன்னார்”

“முதல் முதலாக நாம் கலைஞர்களுக்குப் பணம் கொடுக்கிறோம். ஜெபாலன் நிரந்தரமாக வங்கியில் வைப்பிலிட்ட பணத்தின் வட்டிப் பணம் அது, அதை ஆண்டாண்டு காலமாகக் கொடுக்கவுள்ளோம். நான் இல்லாமல் போனாலும் பணம் இருக்கும். அப்படியான பெருமை மிக்க செயலைச் செய்யதவன் இன்று இங்கு சமூகமளிக்க வேண்டும். நீ போய்க் கூட்டி வா” என்றார் விக்னேஸ்வரமூர்த்தி.

‘‘நான் சொல்லக் கேட்கிறாரில்லை. நீங்கள் கைத்தொலைபேசியில் தொடர்பு கொண்டு பேசுங்கள். என்னிடம் கைத்தொலைபேசி இருக்கிறது. இந்தாருங்கள். ஜெயபாலன் தொடர்பை ஏற்படுத்தியுள்ளான்’’ என்று கூறிக் கைத்தொலைபேசியை விக்னேஸ்வரமூர்த்தியிடம் கொடுத்தான் கஜேந்திரன்.

‘‘ஜெயபாலனா....நான் விக்னேஸ்வரமூர்த்தி பேசுகிறேன். நீ உடனடியாக இலக்கியப் பேரவைக்கு வா. மிகவும் முக்கியமானதொரு விஷயம் பேச வேண்டும்’’ என்றார் விக்னேஸ்வரமூர்த்தி.

‘‘முன்பு ஜெயபாலனைக் காணவே விரும்பாத விக்னேஸ்வரமூர்த்தி இப்போது அவனில்லாமல் இலக்கியப்பேரவையில் நிகழ்ச்சியை நடத்த விரும்புகிறார் இல்லை.’’ என்பதை நினைக்க அவனுக்குச் சிரிப்பு வந்தது; ‘‘எல்லாம் ஒவ்வொருவரும் நடக்கும் விதத்தில் இருந்து தான் நிர்ணயிக்கப்படுகின்றன. ஒருவனுக்கு மாறுபட்டால் பல்வேறு விதமான துன்பங்கள் உண்டாகின்றன. மாறுபாட்டிற்கு எதிரான நட்பால் நல்லவன், பெருமைக்குரியவன், நீதியுள்ளவன் என்ற பெயர் உண்டாகுமென்பதற்கு ஜெயபாலன் சிறந்த உதாணரமாவான்.’’ என்று நினைத்தான் கஜேந்திரன்.

‘‘தணிகாசலம் பண்டிதரை அழைத்து வா. அவர் ஜெயபாலனுக்கு ஒருமலர்மாலை அணிவிக்க வேண்டுமென்றவர். யோகநாதன்

மேளக்கோஷ்டியினரை வாசலுக்கு வரச்சொல்'' என்றார் விக்னேஸ்வரமூர்த்தி.

ஒலிபெருக்கியில் பக்திப்பாடல் ஒன்று ஒலிபெருக்காகிக் கொண்டு இருந்தது. கலாச்சார மண்டபம் மிகவும் அழகாக அலங்கரிக்கப்பட்டிருந்தது. ஏராளமான மக்கள் அங்கு குழுமியிருந்தனர்.

கணேசலிங்கம் ஒரு பொன்னாடை கொண்டு வந்திருந்தான். அவனது மகன் காண்டீபன் முன்பு வாடிச் சோர்ந்து எழும்பி நடக்க முடியாது பாயில் படுத்திருந்தான். சத்திர சிகிச்சை செய்யப்பட்ட பின்பு அவன் எழுந்து உற்சாகத்துடன் நடமாடினான். வைத்தியர் கணேசலிங்கத்தை அழைத்துச் சொன்னார்; ''கணேஷ் சத்திர சிகிச்சை செய்த பின் உனது மகனின் உடல்நிலை தேறி வருகிறது. படிப்படியாக அவன் குணமடைவான். இனி நீ பயப்படத் தேவையில்லை'' வைத்தியர் சொன்னதை நினைக்க கணேசலிங்கத்தின் கண்கள் கலங்கின; 'ஜெயபாலன் தான் எனது தெய்வம்'' என்று மனதில் நினைத்தான்.

அன்று ஐந்நூற்றுக்கும் அதிகமான மக்கள் ஜெயபாலனின் வரவுக்காகக் காத்திருந்தனர்.

மோட்டார் வண்டியில் ஜெயபாலனும் நவராசாவும் புஷ்பநாதனும் வந்திறங்க யோகநாதன் கோஷ்டியினர் மேளம் அடிக்கத் தொடங்கினர். தூரததில் வெடிகள் கோர்வையாகக் கொழுத்தப்பட்டன. ஜெயபாலன் மண்டபத்துள் வந்த போது பண்டிதர் மாலை சூடி அவனைக்

கௌரவித்தார். கணேசலிங்கம் பொன்னாடை போர்த்தி விட்டு அவனது கால்களைத் தொட்டுக் கும்பிட்டான்.

விக்னேஸ்வரமூர்த்தி, ஜெயபாலனை அழைத்துக் கொண்டு மேடைக்குச் சென்றார்; "ஐயா. என்னை விடப் பெரியவர் நீங்கள். எனக்காக நீங்கள் தான் கலைஞர்களுக்குக் காசு கொடுத்தல் வேண்டும். இதை நீங்கள் மறுக்கக்கூடாது" என்றான்.

ஜெயபாலனின் வற்புறுத்தலுக்காக விக்னேஸ்வரமூர்த்தி கலைஞர்களுக்குப் பணத்தைக் கொடுத்தார். பின்; "திரு. ஜெயபாலன் அவர்கள் வங்கியில் கலைஞர் களுக்காக வைப்புச் செய்த பணத்தின் வட்டிக் காசு ஒவ்வொரு மாதமும் மூன்றாம் திகதி கலாச்சார மண்டபத்தில் வைத்து வழங்கப்படும். அதனை சம்பந்தப்பட்ட கலைஞர்கள் வந்து பெற்றுக் கொள்ளும் படி கேட்டுக் கொள்கிறேன்" என்றார்.

எண்பது வயது நிரம்பிய சம்பந்தமூர்த்தி என்ற மூத்த கலைஞர் ஜெயபாலனுக்கு அருகில் வந்து சொன்னார்; "என்ரை வாழ்நாளில் இவ்வளவு பணத்தைக் காண்பது இது தான் முதல் தடவை. நீ நல்லாய் இருக்க வேண்டும். நாவலர் ஸ்ரீ வித்தியா கணபதியைப் போல நீ எனக்கு உதவியுள்ளாய்..." அதற்குமேல் அவரால் பேசமுடியவில்லை.

---

**860. இகலான்ஆம் இன்னாத எல்லாம் நகலான்ஆம்**
**நல்நயம் என்னும் செருக்கு.**

---

ஒருவன் மற்றவர்களுடன் மாறுபட்டிருந்தால் எல்லாத் துன்பங்களும் சேர்ந்து வரும். அதற்கு எதிரான நட்பால் நல்ல நீதியாகிய பெருமித நிலை உண்டாகும்.

## விடுதலும் மேற்கொள்ளலும்

வேலாயுதபிள்ளைக்கு ஜெயபாலனுக்கு இலக்கியப் பேரவையில் வரவேற் பளித்தது பிடிக்கவில்லை. அதற்கு மூல காரணமாக இருந்தவர் விக்னேஸ்வரமூர்த்தி என்று அவர் திடமாக நம்பினார். இலக்கியப் பேரவையின் தலைவரான விக்னேஸ்வரமூர்த்தி மறுத்திருந்தால் அப்படியான பெரும் வரவேற்பு நடைபெற்றிருக்காது என்று எண்ணினார். முன்பு இலக்கியப் பேரவையில் உறுப்பினராக ஜெயபாலனைச் சேர்த்துக் கொள்ள மறுத்த விக்னேஸ்வரமூர்த்தி கடைசி வரைக்கும் ஜெயபாலனிடமிருந்து பணம் பெற்றிருக்கக் கூடாது" என்று நினைத்தார். நாலைந்து தினங்களுக்கு முன்பு அவர் தணிகாசலத்தைச் சந்தித்துச் சொன்னார்; "ஜெயபாலனை எனக்குப் பிடிக்கவே இல்லை. அவன் இளம் வயதில் மட்டும் அடாவடித்தனங்களில் ஈடுபடவில்லை. வெளிநாட்டால் வந்தவுடனும் பெரும் அடாவடித் தனங்களில் ஈடுபட்டவன். கோயில் விஷயமென்றால் நான் கடைசி வரையும் சம்மதித்திருக்கமாட்டன். இது இலக்கியப் பேரவை விஷயம். இலக்கியப் பேரவையில் நாங்களிருவரும் உறுப்பினர்கள் இல்லைத்தானே. இப்போ ஜெயபாலனை இலக்கியப் பேரவையில் சேர்த்தால் எம்மையும் சேர்க்கலாம் தானே…"

“நீ வீண்கதைகள் எதையும் கதையாதை. உள்ள வேலைகளையே என்னால் செய் முடியவில்லை. அதற்கிடையில் இலக்கியப் பேரவையிலும் சேரவேண்டுமே....? அதைவிட இந்தச் சனங்களை நம்பக்கூடாது. அவர்களை நம்பினால் அதோ கதிதான். எம்மைக் கண்டால் எமக்காகக் கதைப்பார்கள். ஜெயபாலனைக் கண்டால் அவனுக்காகக் கதைப்பார்ககள். ஜெபாலன் ஊரில் பலருக்குப் பண உதவி செய்துள்ளான். கணேசலிங்கத்தின் மகனுக்குச் சத்திர சிகிச்சை செய்ய மூன்று இலட்ச ரூபா கொடுத்திருக்கிறான். அதை விடப்பலர் பண உதவி பெற்றிருக்கின்றனர். அதனால் தான் அவனது பிறந்த நாள் விழாவுக்கு எம்மில் சிலரைத் தவிர மற்றவர்கள் எல்லோஞ் சென்றனர். நாடகக் கலைஞரான சம்பந்தமூர்த்தி எந்தவிதமான வருமானமும் இல்லாமல் இருக்கிறார். பிள்ளைகள் கூடக் கவனிக்காததால் அவர் கோயில் மடத்தில் தான் சீவிக்கிறார். இதைப்போல இலக்கிய்ப பேரவையின் மூத்த உறுப்பினர்கள் பலர் மிகவும் கஷ்டப்படுகின்றனர். அவர்கள் ஜெயபாலனிடம் பணம் பெற்றுள்ளனர். அவர்களிடம் ஜெயபாலன் தான் மாதாமாதம் ஒவ்வொருவருக்கும் ஐயாயிரம் ரூபா தருவதாகக் கூறியிருக்கிறான். அதனால் அவர்கள் ஜெயபாலனிடம் பணத்தை வாங்கும்படி சபைக்கூட்டத்தில் வற்புறுத்திக் கூறித் தீர்மானத்தையும் நிறைவெற்றியுள்ளனர். அதனால் அதை விக்னேஸ்வரமூர்த்தி மறுத்தால் தலைவர் பதவியை விட்டு வெளியேற வேண்டிய நிலை ஏற்படும். இது அவருக்கு மானக்கேட்டை உண்டாகும். அதனால் வேறு வழியின்றி ஒப்புக் கொண்டார். ஆனால் அவர் தொடர்ந்து பதவியில் இருக்க மாட்டார். தனக்கு விருப்பமில்லா விட்டாலும் செய்ய வேண்டிய நிர்ப்பந்தம் அவருக்கு ஏற்பட்டு

விட்டது. இனித் தனக்கு வேலைப்பழு அதிகம் என்று சொல்லித் தனது பதவியை இராஜினாமாச் செய்யப் போகிறார். இப்போதைய நிலையில் எம்மை விட ஜெயபாலன் வலிமையுள்ளவனாகி விட்டான். அதனால் தம்மை விட வலிமை மிக்கவனோடு விரோதம் கொண்டு எதிர்த்தால் பல பிரச்சினைகள் உருவாகும்; மான்கேடு உண்டாகும்; மக்களில் அனேகர் ஜெயபாலனின் பக்கமே நிற்பார்கள். அதனால் புத்தி சாதுரியமாக விக்னேஸ்வரமூர்த்தி நடந்து கொண்டார். அத்துடன் தம்மை விட மெலியவரிடம் பகை கொள்வதை விடாமல் மேற்கொள்ளல் வேண்டும். அதற்காககத் தான் விக்னேஸ்வரமூர்த்தி இலக்கியப் பேரவைத் தலைவர் பதவியை விட்டு நீங்கப் போகிறார். விக்னேஸ்வரமூர்த்தி ஆழுமை மிகக்வர்; செயல் வீரர்; செல்வாக்குள்ளவர்; தன்னை அர்ப்பணித்துச் செயலாற்றுபவர். அவர் பதவியை இராஜினாமாச் செய்தால் யாப்பின்படி பண்டிதர் தான். தலைவராவார். அவர் நோயாளி இலக்கியம் கற்றவர்; நல்ல நாவன்மை உள்ளவர். ஆனால் நிர்வாகத் திறமை அவரிடம் இல்லை. அத்துடன் விக்னேஸ்வரமூர்த்தியின் ஆதரவாளர்களுக்கும் ஜெயபாலனை இலக்கியப் பேரவையில் சேர்த்தது பிடிக்கவில்லை. அதனால் இலக்கியப் பேரவை மூடப்படும்'' என்றார் தணிகாசலம்.

``மூட வேண்டும். சந்தர்ப்பங்களுக்கேற்ற மாதிரி வாழ்பவர்கள் கட்டாயம் தண்டிக்கப்படல் வேண்டும்'' என்றார் வேலாயுதபிள்ளை.

---

**861. வலியார்க்கு மாறுஏற்றல் ஓம்புக; ஓம்பா**
**மெலியார்மேல் மேக பகை.**

---

தம்மைவிட வலியவரோடு பகை கொண்டு எதிர்பதை விட வேண்டும். தம்மை விட மெலியவர் மேல் பகை கொள்வதை விடாமல் விரும்பிக் கொள்ளல் வேண்டும்.

## பகையை ஒழிக்க முடியாதவன்

நவராசாவுக்குத் திருமணமான பின் கதிரேசன் இரண்டு முறை நவராசாவினது வீட்டுக்கு வந்தார். அங்கு துர்க்கா நடந்து கொண்ட விதம் அவருக்குப் பிடிக்கவில்லை. அவள் உடைகள் உடுத்தும் முறைகளும் பிடிக்கவில்லை. அத்துடன் கதைக்கும் போது தேவையில்லாமல் சற்றுப் பலமாகச் சிரிப்பது. ஆண்களுடன் சற்று உரிமையுடன் கலகலப்பாகப் பழகுவது போன்றவற்றைக் கொண்டு அவளது நடத்தையைப் புரிந்து கொண்டார். அன்றே அவர் நவராசாவின் வாழ்க்கை சீரழிந்து விட்டதென்று உணர்ந்து கொண்டார். அதன் பின் அவர் அங்கு செல்வதை விரும்புவதில்லை. நவராசா துர்க்காவுடன் ஒற்றுமையாகி அவள் தனது குணங்களையெல்லாம் மாற்றி நவராசாவின் மீது எல்லையில்லாத அன்பை வைத்ததுமல்லாமல் அவனது வீட்டார், இனத்தவர்கள் மீதெல்லாம் பாசத்தைச் சொரிந்த போதும் அதை உண்மையென்று கதிரேசன் நம்பவில்லை. அவள் வரும் போது கதிரேசனுக்குப் புகையிலை வெற்றிலை பாக்கு ஆகியன கொண்டு வந்து கொடுப்பாள். பணமும் கொடுப்பாள். இருப்பினும் அவள் மனமொத்து மாறவில்லை, இலட்சுமியின் உபதேசத்தால் தான் மாறி இருக்கிறாள்'' என்ற நினைப்பு கதிரேசனின் மனதில்

இருந்ததால் கதிரேசன் துர்க்காவின் வீட்டுக்குச் செல்ல விரும்புவதில்லை.

நவராசா பலமுறை வற்புறுத்தியமையால் அன்று நவராசாவுடன் மோட்டார் வண்டியில் சென்றார். அவர் சென்ற போது அங்கே ஜெயபாலன் வந்தான். உள்ளே வரும்படி நவராசா ஜெயபாலனைக் கேட்ட போதும் அவன் உள்ளே வர விரும்பவில்லை. “உள்ளே உனது குரு இருக்கிறார்…” என்றான் நவராசா.

“யார்….? கதிரேசு அப்புவா….?” என்றவாறு உள்ளே வந்தான் ஜெயபாலன். உள்ளே நாற்காலியில் அமர்ந்திருந்த கதிரேசன், ஜெயபாலனை எழுந்து வரவேற்றார். முன்பென்றால் கதிரேசன் அவன் வந்தால் முகத்தை மறுபக்கம் திருப்பி விடுவார். அவனைக் கண்டால் அவருக்குப் பிடிக்காது.

ஒருநாள் கதிரேசனின் வீட்டுக்குச் சென்றான் ஜெயபாலன். கதிரேசன் தலையைக் குனிந்த படி இருந்தார். அப்போது நவராசா துர்க்காவுடன் கோபித்துக் கொண்டு வந்து தனது பெற்றோரின் வீட்டிலிருந்தான். அதனால் கதிரேசன், ஜெயபாலன் நவராசாவைத்தான் தேடி வந்திருக்கிறான்” என்று நினைத்தார். எனினும் “நவராசா இல்லையென்று” கூறக்கூட அவருக்கு மனம் வரவில்லை. அதனால் பேசாமல் இருந்தான்.

ஜெயபாலன் அவருக்கு அருகில் வந்து அவருக்குப் பக்கத்தில் நிலத்தில் அமர்ந்தான். “நவராசா வரவில்லை” என்றார் கதிரேசன்.

“நான் அவனிடம் வரவில்லை. உங்களிடம் தான் வந்தனான். நீங்கள் ஏழையாக இருந்தாலும் அறிவாளி. நல்ல நூல்களைப் படித்தனீங்கள். உங்களிடம் ஆலோசனை பெறத்தான் வந்தனான்” என்றான் ஜெயபாலன்.

ஆச்சரியத்துடன் அவனைப் பார்த்தார் கதிரேசன். “அப்பூ, நான் முன்பு கெட்டவன் தான். ஆனால்திருந்தி வாழ ஆசைப்படுகிறேன். ஆனால் கற்றவர்கள் என்னைத் திருத்தி வாழ விடுகிறார்கள் இல்லை” கலங்கினான் ஜெயபாலன்.

ஜெயபாலனைப் பற்றிய சகல விஷயங்களையும் அறிந்தவர் கதிரேசன். ஜெயபாலன் தற்பொழுது வந்திருக்கும் நிலையில் அவனைச் சமூகம் ஏற்காவிட்டால் பல புதிய தீமையான நிகழ்வுகள் தோற்றம் பெறும். அதனால் அவனைக் கட்டாயம் சமூகம் ஏற்க வேண்டும்” என்று நினைத்தார்.

“கதிரேசப்பூ, நான் படித்த பலரிடம் சென்ற போது அவர்கள் என்னை அளவுக்கதிகமாக அவமதித்தனர். அதனால் சில வேளைகளில் கோபம் கொண்டு அவர்களை நான் ஏசிவிட்டேன்.” என்றான் ஜெயபாலன்.

“நீ, உனது செயல்கள் நிறைவேற வேண்டுமானால் உன்னை முதலில் மாற்றிக் கொள்; நல்லவர்களாகப் பார்த்து நட்புக் கொள்; உன்னிடம் பழகுவோரிடம் அன்பு கொள்; தக்க துணைவர்களை எப்பாடு பட்டாவது தேடிக்கொள். அத்துடன் நீ நல்லொழுக்கத்துடன் வாழ்ந்து வலிமையைத்

தேடிக்கொள். தன்னைச் சேர்ந்தவர்களோடு அன்பாகப் பழகத் தெரியாதவன், தக்க துணையில்லாதவன், வலிமையில்லா தவனாக இருப்பவன் ஒருபோதும் நன்றாக வாழ முடியாது; அவனைப் பகைவர்கள் இலகுவாக வென்று விடுவர்'' என்று கதிரேசன் சொன்னது ஜெயபாலனது காதில் ஒலித்தது.

''நீங்கள் வயதிலும் அறிவிலும் என்னை விடப் பெரியவர். இருங்கோ இருங்கோ.... நீங்கள் கூறியபடி நடந்ததால் தான் நான் எனது பகையை வென்று இந்தப் பெரும் நிலைக்கு வந்தேன். இப்போது நான் மிக மிகக் கவனமாக வாழ்கிறேன். அதானல் தான் நவராசா அழைத்தும் நான் உள்ளே வரவிரும்பவில்லை. நீங்கள் இருந்தமையால் தான் வந்தேன்'' என்றான் ஜெயபாலன்.

---

**862.அன்புஇலன் ஆன்ற துணைஇலன் தான்துவ்வான்**
**என்பரியும் ஏதிலான் துப்பு?.**

---

ஒருவன் அன்பில்லாதவனாகவும், தகுந்த துணை இல்லாதவனாகவும், தானும் வலிமையில்லாதவனாகவும் இருந்தால், அவனால் பகைவனின் வலிமையை அடக்க முடியாது.

## எளிதாய் வெல்லலாம்.

ஜெயபாலன் கதிரேசனைப் பார்த்தான். முகமெல்லாம் முடிவளர்ந்து அசிங்கமாக இருந்தது. வெற்றிலைக் கறை படிந்த பற்கள். வெற்றிலைக் கறை அவரது தாடியிலும் படிந்திருந்தது. வயது சென்றாலும் உறுதியான உடற்கட்டு.

அழுக்கில்லாவிட்டாலும் மிகவும் கசங்கிய வேட்டி. அதே போன்ற நிலையில் உள்ள சால்வை அவரின் தோளில் இருந்தது. அதன் தலைப்பகுதியால் வெற்றிலை வாயைத் துடைத்தமையால் சால்வையில் வெற்றிலைக் கறை படிந்திருந்தது.

“உங்கள் முகத்தைச் சவரஞ் செய்யுங்கோ” என்றான் ஜெயபாலன்.

கதிரேசன் சிரித்தார்; “நவராசாவும் துர்க்காவும் நெடுக அதைத்தான் சொல்லுறவை.” மீண்டும் சிரித்தார் கதிரேசன்.

“நீங்கள் தான் என்னுடைய குரு. நீங்கள் கூறியபடி நான் நடந்ததால் தான் நான் இன்று இந்நிலையில் இருக்கிறேன். அதற்குப் பிரதியுபகாரமாக எவ்வளவோ செய்ய நினைக்கிறன். நீங்கள் கடைசி நான் தா்ற வேட்டியையாவது ஏற்க வேண்டும்” என்றான் ஜெயபாலன்.

அப்போது ஒரு தட்டில் தேநீரை வைத்துக் கொண்டு வந்து ஜெயபாலனுக்கு நீட்டினாள் துர்க்கா.

“என்னை நீங்கள் இன்னும் நம்பாததால் தான் என்னிடம் எதையும் பெற விரும்புகிறீர்கள் இல்லை.....” ஜெயபாலன் கதைத்துக் கொண்டிருக்கும் போது கதிரேசன் குறுக்கிட்டுச் சொன்னார்; “நீ அப்படி நினைக்கக் கூடாது. உன்னை இக்கிராமத்தில் உள்ள பெரிய அறிஞர்கள் ஏற்று விட்டனர். இலக்கியப் பேரவை உன்னை ஏற்று உனக்கு மாலை அணிவித்துப்

பொன்னாடை போர்த்திய போதே அந்த அங்கீகாரம் உனக்குக் கிடைத்து விட்டது. இந்தப் படிப்பறிவில்லாத ஏழைக் கிழவன் ஏற்காமல் எப்படி இருக்க முடியும்''

''எந்த அறிஞர்கள் என்னை ஏற்றாலும், எனது மனம் முழுமையாக மகிழ்ச்சியடையவிலலை. என்னை இந்நிலைக்கு உயர்த்திய நீங்கள் பெரும் தனவந்தாரக இருந்தால் எனது காணிக்கைகளை ஏற்காமல் விடலாம். ஆனால் நீங்கள் பணக்காரர் அல்ல. அதனால் நீங்கள் நான் தருவதை ஏற்றால் தான் நான் முழுமையாக மகிழ்வேன்'' என்றான் ஜெயபாலன். அவனது காதுகளில் கதிரேசன் கூறியது எதிரொலித்தது. அவனை விக்னேஸ்வரமூர்த்தி அவமானப்படுத்திய போது அவன் மன ஆறுதலுக்காகக் கதிரேசனிடம் வந்தான். அவர் சொன்னார்; ''தீயவன் என்று பெயரெடுத்த ஒருவன் விரைவில் நல்லவனென்ற பெயரை எடுக்க முடியாது. நீ நல்லவனாக மாற முயன்றதை யிட்டு நான் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன். சான்றோர்கள் ஒருவனை நன்கு ஆராயாமல் ஏற்றுக் கொள்ள மாட்டார்கள். அவனைப் பரீட்சித்துப் பார்ப்பதற்குப் பல கடுமையான முறைகளைக் கையாழுவார்கள். நீ கெட்டவன் என்று உலகத்தவரால் ஒதுக்கி வைக்கப்பட்டவன். அதனால் உன்னை நல்லவனென்று ஏற்கவே மாட்டார்கள். அதனால் தான் உன்னை அவர்கள் அவமதிக்கிறார்கள். இது சான்றோரின் இயல்பு. இதற்குப் பயந்தால் நீ உனது எண்ணத்தை நிறைவு செய்ய முடியாது. பொறுமையாக இரு. யார் எதைச் சொன்னாலும் அதைக் கேட்டுக் கலங்காது நல்லவர்கள் விரும்பும்

படியாக நடந்து கொள். இது மிகமிகச் சிரமான பணி. ஒருவன் அச்சம் உள்ளவனாகவும்; நெஞ்சுறுதி இல்லாதவனாகவும், பிறரோடு முரண்படுபவனாகவும், பொருட்களை ஈயாதவனாகவும் வாழ்ந்தால், அவனால் பகைவர்களை வெல்ல முடியாது. பகைவா் அவனை இலகுவாக வென்று விடுவார்கள். கிராமத்தில் உள்ள அறிஞர்கள், பெரியவர்கள் உன்னை உதாசீனம் செய்தாலும் அதைக் கவனத்தில் கொள்ளாதே. அதைப்பற்றி உனது நண்பர்களுடனும் கதைக்காதே. மற்றவர்களுடன் முரண்படாதே. நீ கொடுப்பது உனது தீய நண்பர்களுக்குத் தான். நல்ல விஷயங்களுக்கு நீ கொடுப்பது குறைவு. எனவே உனது தீய நண்பர்கள் தீய வழியில் செலவு செய்வதற்குப் பணம் கொடுப்பதை விட்டு விட்டு நல்ல விஷயங்களுக்குக் கொடு''

''ஜெயபாலு தேநீரைக் குடி'' என்றான் நவராசா.

ஜெயபாலன் திடுக்கிட்டுச் சுய நினைவடைந்து தேநீரைக் குடித்தான். கதிரேசன் அப்படிச் சொன்ன பின்பு தான் அவன் கணேசலிங்கசத்தின் மகன் காண்டீபனுக்கு பண உதவி செய்தான்.

தேநீரைக் குடித்து விட்டுக் கதிரேசனது கால்களைத் தொட்டு வணங்கினான் ஜெயபாலன். கதிரேசனின் கண்கள் கலங்கின. சுயநினைவடைய கதிரேசனுக்கு வெகுநேரம் எடுத்தது.

**863. அஞ்சும் அறியான்அமைவுஇலன் ஈகலான்**
**தஞ்சம் எளியன் பகைக்கு.**

ஒருவன் அச்சம் உள்ளவனாகவும், ஒத்து நடக்கும் பண்பில்லாதவனாகவும், யாருக்கும் ஈயாதவனாகவும் இருந்தால் அவனைப் பகைவர்கள் எளிதில் வென்று விடுவர்.

## யாரும் வெல்லலாம்

அன்று வெள்ளிக்கிழமை. ஜெயபாலன் அன்று விரதமிருந்தான். அதனால் நீராடி நெற்றியில் பட்டையாக நீறணிந்து சந்தணப் பொட்டிட்டு அதற்கு மேல் குங்கும மிட்டிருந்தான். நான்கு முழவேட்டி கட்டியிருந்தான். மேற்சட்டை அணியாது தோளில் சால்வை போட்டிருந்தான்.

நான்கு மணிக்கு அவன் நாவலர் ஸ்ரீ வித்தியா மகா கணபதி பாலர் பாடசாலையடிக்கு வந்தான். அங்கு அமைகக்ப்பட்டிருந்த பல்வேறு விதமான விளையாட்டு உபகரணங்களில் பல சிறுவர்கள் ஏறி விளையாடிக் கொண்டிருந்தனர். அவன் அண்மையில் அப்பாடசாலைக்கு இராட்டிணம் ஒன்று செய்து கொடுத்திருந்தான். அவ் இராட்டினத்தில் பல சிறுவர்கள் மிகவும் மகிழ்வுடன் ஏறிச் சுற்றிக் கொண்டிருந்தனர். அவ்விடத்தில் நின்று குதூகலமாக விளையாடும் சிறுவர்களைப் பார்த்துக் கொண்டு நின்றான் ஜெயபாலன். அவனது மனம் என்றுமில்லாதவாறு குதூகலித்தது. அந்த

இராட்டினத்தில் ஆடும் குழந்தைகள் அடைந்த மகிழ்ச்சியைக் காண அவனது மனம் லேசானது.

“ஜெயபாலு ஒருவன் பணத்தைத் சம்பாதிப்பதில் மகிழ்வில்லை. அதை நல்ல வழியில் செலவு செய்து விட்டு அதனால் மற்றவர்கள்படும் மகிழ்ச்சியைக் காணும் போது தான் அவன் மகிழ்வான். எப்பொருளும் மற்றவர்களுக்குப் பயன்படல் வேண்டும்.” என்று கதிரேசன் சொன்னது அவனது காதில் ஒலித்தது.

“உண்மைதான். இந்தச் சிறுவர்கள் விளையாடுவதைப் பார்க்க எவ்வளவு சந்தோசமாக இருக்கிறது. உண்மையில் கதிரேசன் அறிஞர்தான். பாடாசலைக்குச் சென்று படிக்காவிட்டாலும்பலஅரிய நூல்களைக் கற்றதால் தான் பெரிய அறிவாளியாக மாறியிருக்கிறார். இலக்கியப் பேரவையில் அவரை உறுப்பினராக்கி அவரை ஒருமுறை மேடையில் ஏற்றிப் பேச வைக்க வேண்டும்” என்று நினைத்தான் ஜெயபாலன்.

“டேய் ஜெயபாலு” பெரிய சத்தமாக யாரோ அதட்டி அழைக்கும் சத்தம் கேட்டது. ஜெயபாலன்திரும்பிப் பார்த்தான். எதிரே கிருஷ்னன் நின்றான்.

“என்ன கிருஷ்னா….? நன்றாகக் குடித்திருக்கிறாய் போலத் தெரிகிறது. இன்று வெள்ளிக்கிழமை. அத்துடன் சதுர்த்தி. அதுவும் ஆவணிச் சதுர்த்தி. அப்படியான ஒரு புனிதமான நாளில் குடித்திருக்கிறாய். அதுவும் அளவுக்கதிகமாகக் குடித்துள்ளாய். சரி

பரவாயில்லை. குடிச்சிட்டாய். வீதியில் நின்று குழப்பம் விளைவிக்காமல் வீட்டை போ…” என்றான் ஜெயபாலன்.

“டேய், நீ செய்யாத குழப்பங்களையே நான் செய்கிறேன். ஒரு காலத்திலை குடிகுடியென்று குடித்து விட்டு வீதிவீதியாய் விழுந்து கிடந்தனீ… நான் ஒரு நாளென்றாலும் குடிச்சுப் போட்டு விழுந்தனானே..”

“சரி நான் இப்ப இல்லையென்று சொன்னானே. அந்த நேரம் அறியாமையாலை நடந்திட்டன். இப்ப அதை நினைக்க வெட்கமாக இருக்கு. மனிதன் தவறு செய்வது இயற்கை. அதை உணர்ந்து திருந்த வேண்டும். நான் திருந்தி விட்டேன். அதை மாதிரி நீயும் திருந்து” என்றான் ஜெயபாலன்.

“எனக்கு உபதேசஞ் செய்யுறீரோ நீர். முந்தி ஊரைக் கொள்ளையடித்து வெளிநாட்டுக்குப் போய் அங்கே கொள்ளையடித்துக்கொண்டு வந்திருக்கிறாய். நீ உழைச்சுச் சம்பாதித்திருப்பாயென்று நான் நம்பமாட்டன்….”

அதைக்கேட்டதும் ஜெயபாலனுக்கு அளவுக்கதிகமான கோபம் வந்தது. கிருஷ்னனை அடித்து முறிக்க வேண்டும் என்ற உணர்வு இதயத்தை நிரப்பி, அதைச் செயற்படுத்தென்று மனம் ஏவியது. வேட்டியை மடித்துக் கட்டிக் கொண்டு ஜெயபாலன் கிருஷ்னனை நெருங்கினான்.

“ஜெயபாலு…..” யாரோ பலமாக அழைக்கும் சத்தம் கேட்டது.

“யாரது கதிரேசு அப்புவா….?” ஜெயபாலன் திரும்பிச் சுற்றி வரப் பார்த்தான். ஏராளமான மக்கள் கூடி நின்றனர். ஆனால் கதிரேசனைக் காணவில்லை; “ஜெயபாலு, ஒருவன் கோபத்தை நீக்காதவனாகவும் நெஞ்சில் உறுதியில்லாதவனாகவும் இருந்தால் அவனை யாரும் எப்போதும் எங்கேயும் எளிதாக வென்று விட முடியும். நெஞ்சில் உறுதியிலாதவன் எதற்கெடுத்தாலும் கோபப்படுவான்; துயரப்படுவான்; அச்சப்படுவான். நெஞ்சுறுதி உள்ளவன் எக்காரணங் கொண்டும் கோபப்படமாட்டான். ஆறுதலாக, அமைதியாக ஒருமுறைக்குப் பலமுறை சிந்தித்துத்தான் கருமமாற்றுவான். நீ இப்பொழுது சமூக அந்தஸ்தைப் பெற்றுவிட்டாய். அதைப் பேணிக்காப்பது இலகுவானதல்ல. பெற்ற மதிப்பைக் காப்பாற் வேண்டும். அதனால் நீ முன்பு செய்த எந்தச் செயல்களையும் மறந்தும் செய்து விடாதே” என்று கதிரேசன் கூறியது ஜெயபாலனது காதில் ஒலித்தது. மடித்துக் கட்டிய வேட்டியை அவிழ்த்து விட்டு விட்டுக் கோயிலை நோக்கி நடந்தான் ஜெயபாலன்.

**864. நீங்கான் வெகுளி நிறைஇலன் எஞ்ஞான்றும்
யாங்கணும் யார்க்கும் எளிது.**

ஒருவன் சினத்தை நீங்காதவனாகவும், மனத்தைக் கட்டுப்படுத்தி ஆளும் தன்மை இல்லாதவனாகவும் இருந்தால், அவன்

எக்காலத்திலும் எவ்விடத்திலும் எவருக்கும் எளியவனாக இருப்பான்.

## தோல்வியடைபவன்

ஜெயபாலன் நாவலர் ஸ்ரீ வித்தியா மகா கணபதி ஆலயத்திற்கு வந்தத போது ஐந்துமணி. அப்பொழுது சுவாமியார் அரசமரநிழலில் இருந்தார். ஜெயபாலன் சுவாமியாரின் அருகில் சென்று சில நிமிடங்கள் அவருக்குப் பக்கத்தில் இருந்தான். சுவாமியார் கண் திறக்கவில்லை. சுவாமியாரின் நாய் ஜெயபாலனின் அருகில் வந்து வாலாட்டியது. பின் ஜெயபாலனது மடியில் தலையை வைத்தபடி படுத்தது. ஜெயபாலன் கோயிலக்கு வரும் போது சுவையான தீன்பண்டம் ஏதாவது வாங்கி வருவான். யாரிடமும் உணவு பெற்று உண்ணாத சுவாமியாரின் நாய் ஜெயபாலனிடம் சென்று உணவு வாங்கித் தருமாறு கேட்டு வாங்கியுண்ணும். பலவியாபாரிகள் தாம் வியாபரத்தைத் தொடங்கு முன் சுவாமியாரின் நாய்க்குத் தாம் விற்கும் உணவுப் பண்டங்களை முதன் முதலாகக் கொடுக்கப் போட்டி போடுவார்கள். சுவாமியாரின் நாய் சாப்பிட்டால் சுவாமியார் சாப்பிட்டதாக அவர்கள் நினைப்பார்கள். ஆனால் அவர்கள் கொடுக்கும் போது உண்ணாத சுவாமியாரின் நாய், ஜெயபாலன் அவர்களிடம் விலைக்கு வாங்கிக் கொடுக்கும் பண்டங்களை உண்டு வந்தது. இது அவ்வூரவர்களுக்கு மிகுந்த ஆச்சரியத்தைக் கொடுத்தது விக்னேஸ் வரமூர்த்தி அவ்விஷயத்தைக் கேள்விப்பட்டு ஆச்சரியமடைந்தார். அதன்பின் ஜெயபாலனின் மீது அவருக்கு அன்பு பிறந்தது.

ஆறு மணியாகியும் சுவாமியாரது நாய் ஜெயபாலனின் மடியை விட்டு எழும்பவில்லை. ஜெயபாலன் அதன் தலையை எடுத்துக் கீழே வைத்தான். இரவுப் பூசைக்கு இன்னும் ஒரு மணித்தியாலமிருந்தது. வழியில் நடைபெற்ற சம்பவத்தால் மனஞ் சஞ்சலமுற்ற ஜெயபாலன் சுவாமியாரிடம் வந்து ஆறுதல் பெற விரும்பினான். எனினும் அவர் நிஷ்டையில் இருந்தமையால் அவன் அதைக் கலைக்க விரும்பவில்லை. அதனால் அவன் கதிரேசனைச் சந்தித்து ஆறுதல் பெற விரும்பினான். அவன் எழுந்த போது "ஜெயபாலன்!" மெல்ல அழைத்தார் சுவாமியார்.

ஜெயபாலன் திரும்பி வந்து சுவாமியாரின் அருகில் நின்றான். சுவாமியாரது கண்கள் தீயாக ஒளிர்ந்தன; "மகனே, பூமியில் எவரும் தீயவர்களாகப் பிறப்பதில்லை. அவர்கள் சேரும்சேர்க்கைதான் அவர்களது வாழ்க்கையைத் தீர்மானிக்கிறது. கிருஷ்னனும் உனது பகைவர்களும் ஆயுதங்களுடன் கதிரேசனின் வீட்டுப் படலையில் நிற்பதாகத் தகவல் அறிந்தேன். அதனால் தான் உன்னை நான் இங்கு தங்க வைத்தேன். ஒருவன் நல்ல வழியில் செல்லாதவனாகவும். பொருத்தமானவற்றைச் செய்யாதவனாகவும், பழிக்கு அஞ்சாதவனாகவும், நற்பண்புகள் இல்லாதவனாகவும் இருந்தால் தான் பகைவர்களுக்கு அஞ்சுவான். நீ முன்பு அப்படி வாழ்ந்தாய். அதனால் தான் அதன் பலனை அடிக்கடி அனுபவிக்கிறாய். இப்போது அப்படியல்ல. நல்ல வழியில் செல்கிறாய், எல்லோருக்கும் நன்மை செய்கிறாய், பழிக்கு அஞ்சுகிறாய், நற்பண்புகள் யாவும் உள்ளவனாக வாழ்கிறாய். அதனால் உன்னை எந்தப் பகைவர்களாலும் வெல்ல

முடியாது. கிருஷ்னனை இக்கிராம மக்கள் அச்சுறுத்தியுள்ளனர். அதனால் இனி அவன் உனக்குத் தீங்கு செய்ய மாட்டான்'' என்றார் சுவாமியார்.

ஜெயபாலன் சுவாமியாரை வணங்கி விட்டு மகா கணபதி ஆலயத்திற்கு வந்தான். மக்களும் பிரமுகர்களும் வந்து ஜெயபாலனைச் சுற்றி நின்று நடந்த சம்பவத்தைப் பற்றிக் கதைத்துக் கொண்டிருந்தனர்.

பூசை முடிந்த பின் ஜெயபாலன் மக்களுடன் வந்து கொண்டிருந்தான். அப்போது கிருஷ்னன் ஓடி வந்து ஜெயபாலனின் கால்களைக் கட்டிப் பிடித்தான்; ''அண்ணை தெரியாத்தனமாக நான் உங்களைப் பேசிவிட்டேன். அதை மனதில் வைத்துக் கொள்ளாதைங்கோ. வீட்டுக்குச் சென்ற பின்பு எனது மனைவி ஏசிய பின்பு தான் எனக்குத் தெரியும். நீங்கள் பகல் எனது வீட்டுக்கு வந்து எனது குடும்பம் கஷ்டப்படுவதாகக் கூறிப் பணம் கொடுத்தீர்களாம். அப்படியான உங்களின் மனதை நோகப் பண்ணி விட்டேன். என்னை மன்னித்துக் கொள்ளுங்கோ'' என்று அழுதான்.

''மதுபான வகைகளைக் குடித்தால் இப்படித்தான் நடக்கச்சொல்லும். நானும் முன்பு குடித்து விட்டு உன்னுடன் சேர்ந்து இப்படியான தீய செயல்களில் ஈடுபட்டனான் தானே. அதன் பாதிப்பு என்னவென்று இப்போது தான் தெரிகிறது. குடிதான் எல்லாவற்றிற்கும் காரணம். அதனால் இனிமேலாவது குடிக்காமல் வாழப்பழகு'' என்றான் ஜெயபாலன்.

கிருஷ்னன் பதில் கூறாது விக்கி விக்கி அழுது கொண்டிருந்தான்; "இன்னும் இவனுக்கு வெறி முறியவில்லை" என்று யாரோ சொன்னது ஜெயபாலனுக்குக் கேட்டது.

**865. வழிநோக்கான் வாய்ப்பன செய்யான் பழிநோக்கான்**
**பண்புஇலன் பற்றார்க்கு இனிது.**

ஒருவன் நல்வழியில் செல்லாமல், பொருத்தமான செயல்களைச் செய்யாமல், பழிக்கு அஞ்சாமல், நற்பண்புகளும் இல்லாதிருந்தால், அவன் பகைவர்க்கு எளியவனாவான்.

## பகைவர் விரும்புவர்

வீட்டுக்கு வந்த ஜெயபாலனுக்கு, கிருஷ்னன் பேசிய வார்த்தைகள் நினைவுக்கு வந்து கொண்டிருந்தமையால் இரவு முழுவதும் அவனுக்கு நித்திரை வரவில்லை. நேரம் கழிவது மிகவும் சிரமாக இருந்தது. மனைவியை எழுப்பி தேநீர் தயாரித்துத் தரும்படி கேட்டான். சில நாட்களாகத் தனது கணவன் பிரச்சினைப் பட்டு நிம்மதியிழந்து தவிப்பதைக் கண்ட சிவசக்தி சொன்னாள்; "நீங்கள் ஊருக்கு வந்த நாள் முதல் நிம்மதியில்லாமல் தவிக்கிறீர்கள். மாலையும், பொன்னாடையும், மதிப்பும், மரியாதையும் உங்களுக்குத் தேவைதானா…? நாம் திரும்பி வெளிநாட்டிற்குச் சென்று விடுவோம். எமது பிள்ளைகள் எம்மை வரும்படி தினமும் வற்புறுத்திக் கொண்டிருக்கிறார்கள். உங்களுக் கொண்டென்றால் இங்கு யார் பார்ப்பது?" என்றாள்.

அவள் சொல்வது அவனுக்கு நியாயமாகப்பட்டது. புஷ்பநநாதனின் மனைவி இலட்சுமியின் சகோதரனான வாமதேவன் ஜெயபாலனுடன் கூலி வேலை செய்தவன். அதனால் அவன் வாமதேவனது வீட்டுக்குச் செல்வான். அப்போது இலட்சுமியுடன் சிரித்துக் கதைப்பான். அதை அவள் தவறாகப் புரிந்து கொண்டாள். இலட்சுமி ஏழையானபடியால் அவளைத் திருமணம் செய்ய ஜெயபாலனுக்கு விருப்பமில்லை. ஆனால் காதலிப்பதைப் போல நடித்து அவளுடன் உறவு கொண்டான். பலமுறை வருடக்கணக்காக அவர்களது உறவு நீடித்தது. பின் ஜெயபாலன் வெளிநாட்டுக்குச் சென்று விட்டான். பல காலம் மறைந்திருந்த உணர்வுகள் இலட்சுமியைக் கண்டதும் வெளிபட ஆரம்பித்தன. அதை அவனால் கட்டுப்படுத்த முடியவில்லை.

சிவசக்தி கொடுத்த தேநீரை வாங்கிக் குடித்து விட்டுக் கட்டிலில் படுத்தான். அவனது அணைப்புக்குள் இலட்சுமி திமிறாள். திடுக்கிட்டு விழித்த ஜெயபாலன் விடியும் வரை உறக்கம் வராமல் தவித்தான். விடிந்ததும் விடியாததுமாக கதிரேசனைத் தேடிச் சென்றான்.

அதிகாலையில் வந்த ஜெயபாலனை ஆச்சரியத்துடன் பார்த்தார் கதிரேசன்; “அப்பூ, நேற்றிரவு கிருஷ்னன் என்னை மிகவும் கேவலமாகப் பேசிவிட்டான். நான் இளைஞனாக இருக்கும் போது பல குற்றச் செயல்களில் ஈடுபட்டனான் என்பது உங்களுக்குத் தெரியும். அப்போது நான் ஒரு பெண்ணுடன் தொடர்பு கொண்டிருந்தேன். அந்தத் தொடர்பு பற்றிக் கிருஷ்னனுக்குத் தெரியும். அதனால் எனக்குப் பயமாக உள்ளது. அதை

நினைத்து நான் இரவு முழுவதும் நித்திரை கொள்ளவில்லை'' என்றான்.

அவனைப் பார்க்கக் கதிரேசனுக்குப் பாவமாக இருந்தது; ''வாலிப வயதில் ஆராயாது செய்யும் தீய செயல்கள் யாவும் தற்பொழுது ஜெயபாலன் வசதியாக இருக்கும் காலத்தில் மனதில் தோன்றி அச்சுறுத்துகின்றன. அதனால் அவன் அளவுக் கதிகமாகப் பயப்படுகிறான்'' என்று நினைத்தார்.

''ஒருவன் கட்டுப்படுத்தமுடியாத கோபக்காரனாகவும், மிகுந்த காமத்தை உடையவானகவும் இருந்தால் அவனைப் பகைவர்கள் மிகவும் இலகுவாக வென்று விடுவார்கள். அத்துடன் அவனைப் பகைக்க எதிரிகள் விரும்புவார்கள். அதனால் நீ எந்த வேளையிலும் அவனோடு கோபப்படாதே. மிகுந்த காம உணர்வுள்ளவன் தனது மனைவிக்கே எதிரியாக இருப்பான். அதைவிட அவன் இன்னொரு பெண்ணின் மீது மோகங் கொண்டு, அவளோடு தொடர்பு கொண்டதை இன்னொருவன் அறிந்தால் அது இருவருக்கும் ஆபத்தாக முடியும். உன்னை மிரட்டி அவன் பணம் பெறப் பார்ப்பான். அவளை மிரட்டி தான் உறவு கொள்ளப் பார்ப்பான். இதனால் எவ்வளவு விபரீதம் ஏற்படுமென்று உனக்குத் தெரியாது. அந்தப் பெண்ணின் வாழ்வு சீரழிந்து விடும். இதற்காகத்தான் பெரியவர்கள் தீமையான செயல்களைச் செய்யக்கூடாதென்று சொல்லியிருக்கிறார்கள். இனி என்ன செய்ய முடியும்? கறந்தபால் முலை ஏறாது என்பார்கள். அதனால் நீ உன் மனைவியையும் அழைத்துக்

கொண்டு நீ வாழ்ந்த நாட்டிற்குச்சென்று விடு. அதுதான் உனக்கு நிம்மதியைத் தரும்.'' என்றார் கதிரேசன்.

"அப்படித்தான் எனது மனைவி சொல்கிறாள். பிள்ளைகளும் தினமும் தொலைபேசியில் தொடர்பு கொண்டு என்னையும் மனைவியையும் வரும்படி அழைக்கிறார்கள். நான் பிறந்த ஊரில் மிகவும் கஷ்டப்பட்டு வாழ்ந்தேன். இப்பொழுது நான் சகல வசதிகளையும் பெற்று விட்டேன். அதனால் பிறந்த இந்த ஊரில் வாழ ஆசைப்படுகிறேன். எனது மனைவிக்கு இந்த ஊர் பிடிக்கவில்லை. அத்துடன் பிள்ளைகளைப் பிரிந்தும் அவளால் வாழ முடியவில்லை. அதனால் அவள் வாழ்ந்த ஊருக்கே செல்ல விரும்புகிறாள். அது எனக்கு மிகுந்த கவலையை அளிக்கிறது'' என்றான் ஜெயபாலன். கதிரேசனால் எதுவும் பேசமுடியவில்லை.

---

**866. காணாச் சினத்தான் கழிபெருங் காமத்தான்**
**பேணாமை பேணப்படும்.**

---

ஒருவன் தேவையில்லாமல் கோவிப்பவனாகவும், பேராசை உடையவனாகவும் இருந்தால், அவனது பகையை எதிரிகள் மிகவும் விரும்புவார்கள்.

## பொருள் கொடுத்து அடை

"நீ சொல்வதைப் பார்த்தால் நீ தொடர்பு கொண்ட பெண் தற்பொழுது திருமணமாகிப்பிள்ளை குட்டிகளோடு இருப்பாளென நம்புகிறேன். அவள்

முன்பு உன்னுடன் தொடர்பு கொண்டிருந்த விஷயம் அவளின் கணவனுக்குத் தெரியக்கூடாது. அதில் நீ கவனமாக இருத்தல் வேண்டும். அந்தப் பெண்ணின் வீட்டிற்கு நீ எந்தக் காரணங் கொண்டும் செல்லக் கூடாது. அத்துடன் அவளது கணவனோடு நீ நட்புக் கொள்ளவோ அல்லது தொடர்பு கொள்ளவோ கூடாது. மறந்தும் அவளுக்கு நீ உதவி செய்யக் கூடாது. இதில் ஏதாவது ஒன்றை நீ செய்தாலும் அது இருவருக்கும் பெருங் கேடாகவே முடியும். நீ அப்பெண்ணுடன் தொடர்பு கொண்ட விடயம் கிருஷ்னனைப் போலப் பலருக்குத் தெரிந்திருக்கும். ஆகையால் நீ அவர்களின் வீட்டுக்குச் செல்லாதே. அவளைக் காண்பதை நீ தவிர்த்துக் கொள்ளல் வேண்டும். ஏனென்றால் பழைய காதல் சாம்பலுள் நெருப்புப் போல அவளது மனதில் மறைந்து கனன்று கொண்டிருக்கும். மெதுவாக ஊதினால் கூட அது பெரு நெருப்பாகி விடும். உனது நிலையும் அதுதான். அவளைக் கண்டு விட்டு நீ அனுதாபப்படுவாய். அந்த அனுதாபம் பழையதைப் புதுப்பிப்பதில் ஆர்வம் காட்டும். அந்த நிலை உனக்கு ஏற்பட்டு விட்டது. அது வளருமுன் இந்நாட்டிலிருந்து செல்வதுதான் நல்லது'' என்றார் கதிரேசன்.

``அவளின் கணவன் என்னுடைய நண்பன். அவன் தினமும் எனது வீட்டுக்கு வருவான். என்னைத் தனது வீட்டுக்கு வரும்படி ஓயாது கரைச்சல் கொடுத்துக் கொண்டே இருப்பான். எனக்கு விருந்து வைப்பதற்கு ஆயத்தப்படுத்துகிறான். அத்துடன் தனது மனைவியை அழைத்துக் கொண்டு எனது வீட்டுக்கு

வருகிறான். பெரும்பிரச்சினையாக இருக்கு'' என்றான் ஜெயபாலன்.

''தன் அருகில் இருந்து கொண்டு தனக்குப் பொருந்தாதவற்றைச் செய்பவனுடைய பகையை பொருள் கொடுத்தாவது அடைய வேண்டும்'' என்று பெரியவர்கள் சொல்வார்கள். அதனால் நீ அப்பெண்ணின் கணவனைப் பகைத்துக் கொள். அதற்காக நீ எவ்வளவு பணம் செலவு செய்தாலும் பரவாயில்லை. அதை விரைவாகச் செய்'' என்றார் கதிரேசன்.

''அவன் எனது நெடுங்கிய நண்பன். நான் குடிப்பதை விரும்பாதவன். எனது நலனில் அக்கறை உள்ளவன். நான் ஊரில் இருந்திருந்தால் கடைசி வரையும் அவளைத்திருமணம் செய்ய விட்டிருக்க மாட்டேன். இப்போது எனது நிலை மிகவும் மோசமாக உள்ளது'' என்றான் ஜெயபாலன்.

கதிரேசன் பேசாது இருந்தார். அவரால் பேசமுடியவில்லை. ''எவ்வளவு தீமைகளை ஜெயபாலன் செய்திருக்கிறான் என்று இப்போது தான் தெரிகிறது. இதைவிட இன்றும் எவ்வளவு தீமைகள் செய்திருப்பான் என்று சந்தர்ப்பம் வரும்போது தான் தெரிய வரும். தேவையில்லாமல் இவனுடன் தொடர்பு கொண்டு இவனது சுமையை குறைத்து அதை நான் ஏற்று விட்டேன். முன்பு எவ்வளவு மகிழச்சியாக இருந்தேன். இவனோடு சேர்ந்த பின்பு இவனது பாவங்களைச் சிந்தித்துச் சிந்தித்து எனக்குப் பைத்தியம் பிடித்து விடும் போல் உள்ளது'' என்று நினைத்தார் கதிரேசன்.

“என்னப்பு யோசிக்கிறியள்” என்று கேட்டான் ஜெயபாலன்.

“ஒன்றுமில்லை” என்று தலையாட்டினார் கதிரேசன். ஜெயபாலன் “நான் வாறன்” என்று எழுந்தான்.

ஜெயபாலன் தனது வீட்டிற்குச் சென்ற போது அங்கே புஷ்பநாதன் இருந்தான்; “இராத்திரி கிருஷ்னன் உன்னோடு பிரச்சினைப் பட்டதாக அறிந்தேன். குடித்து விட்டு ஊரில் கரைச்சல் கொடுப்பது சிலரது தொழிலாய்ப் போச்சு. நான் ஒருக்கால் அவனைக் கேட்கட்டா...” என்று கேட்டான் புஷ்பநாதன்.

“சீ சீ சீ வேண்டாம். அவன் குடிகாரன். அவன் எதையும் பேசட்டும். உனக்கென்ன?” என்றான் ஜெயபாலன்.

“அப்படி விட முடியுமே.....? கேட்க வேண்டும்” என்றான் புஷ்பநாதன் சற்றுக் கோபமாக.

“அவன் என்னுடைய நண்பன். அவன் எதையுஞ் சொல்லட்டும். நீ ஏன் அதைப் பற்றிக் கவலைப்படுகிறாய்?” என்றான் ஜெயபாலன்.

அது புஷ்பநாதனுக்குப் பிடிக்கவில்லை. எனினும் அதைக் காட்டிக் கொள்ளாது சொன்னான். “நீ இப்ப எல்லோருக்கும் பயப்படுகிறாய். அப்படிப் பயப்பட்டால் வாழ முடியாது. நாணெண்டால்

கிருஷ்னன்ரை மண்டையை உடைத்திருப்பன்’’ என்றான் புஷ்பநாதன்.

‘‘தேவையில்லாத கதைகள் கதைக்கிறதெண்டால் நீ என்ரை வீட்டை வரவேண்டாம்’’ என்றான் ஜெயபாலன் அதைக் கேட்டுத் திகைத்துப் போனான் புஷ்பநாதன்.

---

**867. கொடுத்தும் கொளல்வேண்டும்மன்ற அடுத்துஇருந்து மாணாத செய்வான் பகை.**

---

தன் அருகில் சேர்ந்திருந்து கொண்டு, பொருத்தமில்லாத செயல்களைச் செய்து தனக்குத் தானே தீங்கு செய்கின்றவனுடைய பகையை பொருள் பொடுத்தாவது அடைதல் வேண்டும்.

**வாய்ப்புக்கள்**

‘‘நீ இப்படிச் சொல்வாயென்று நான் சற்றும் எதிர்பார்க்கவில்லை. இப்ப உனக்கு மாலை மரியாதை பட்டம் பதவிகள் தான் தேவை. நட்பு உறவு ஒன்றும் தேவையில்லை. நான் வாறன்’’ என்று சொல்லிவிட்டுத் தயங்கினான் புஷ்பநாதன்; ‘‘அவன் தனது மனம் சமாதானமடைய ஆறுதல் வார்த்தைகள் கூற மாட்டானா?’’ எனப் புஷ்பநாதன் எண்ணினான்.

ஜெயபாலன் பதில் சொல்லாமல் வீட்டின் உள்ளே சென்று திரும்பிப் பார்த்தான். புஷ்பநாதன்

அந்த இடத்தில் சிறிது நேரம் நின்று விட்டுப் புறப்பட்டான். அவனது முகத்தில் கவலையின் ரேகைகள் அளவுக்கதிகமாகப் பரவிக் கிடந்தது ஜெய பாலனுக்குத் தெரிந்தது. அவனை அழைத்துச் சமாதானம் சொல்ல வேண்டும் என்று நினைத்தான் எனினும் கதிரேசன் அவனது மனத்திரையில் தோன்றினார்; “ஜெயபாலு, தன்னுடன் இருந்து கொண்டு தனக்குத்தானே தீங்கு செய்பவனின் பகையைப் பொருள் கொடுத்தாவது அடைய வேண்டும். நீ அப்பெண்ணின் கணவனோடு கதைக்காதே; உறவாடாதே; தெண்டித்துப் பகைவனாக்கிக்கொள்”

“அவன் போகட்டும். இனி எனது வீட்டுப் பக்கம் வராமல் விட்டால் நல்லது” என்று எண்ணினான் ஜெயபாலன். அப்பொழுது வெளியே யாரோ அழைக்கும் சத்தம் கேட்டது. ஜெயபாலன் வெளியே வந்தான். முற்றத்தில் கிருஷ்னன் நின்றான். முதல் நாள் நடைபெற்ற சம்பவத்தின் பின் கிருஷ்னனை நினைக்கவே ஜெயபாலனுக்குப் பயமாக இருந்தது; “இப்போது ஏன் இங்கே வந்தான்?. இங்கு ஏதாவது உழறினால் பெரும் சிக்கல்கள் வரும். ஜெயபாலன் பெரும் சண்டியனாக ஊரில் இருந்தாலும் சிவசக்திக்குப் பயந்தவன். ஒருமுறை அவளுடன் பிரச்சினைப்பட்டு அவளுக்கு அடித்து விட்டான். அதை அறிந்த அவளது ஒன்பது சகோதரர்களும் அங்கு வந்து விட்டனர். அவளது மூத்த சகோதரன் சொன்னான்; “அத்தான், குடும்பத்துள் பிரச்சினை வாருவது இயல்பு. அதற்காக ஒரு பெண்ணுக்கு அடிக்கக் கூடாது. எமது ஒன்பது பேருக்கும் அவள் செல்லப்பிள்ளை. பத்தாவது பிள்ளையாக அவள் பிறந்தமையால்

அவளை நாங்கள் பூவைப்போலத்தான் பாதுகாத்தோம். நடந்தது நடந்து விட்டது. இனிமேல் தயவு செய்து அவளுக்கு அடிக்காதைங்கோ. அடித்தால் மாமன் மச்சானென்ற உறவு பார்க்கமாட்டம்.'' அவன் முழு முரடன். அவனது வார்த்தைகள் ஜெயபாலனது காதில் ஒலித்தன. அதனால் கிருஷ்னன் ஏதாவது உழறினால் சிவசக்தியின் சகோதரர்கள் இங்கு வந்து குதித்து விடுவார்கள். பின்பு பல பிரச்சினைகள் உண்டாகும்'' அதை எண்ண ஜெயபாலனுக்குப் பயமாக இருந்தது.

''ஜெயபாலு, நீ அளவுக்கதிகமான தீமைகளைச் செய்துள்ளாய். ஒருவன் நல்ல குணமில்லாதவனாய்ப் பல குற்றங்களைச் செய்தால் அவனுக்குத் துணையாக யாரும் வரமாட்டார்கள். அந்த நிலைமையில் அவனை வெல்வது சுலபம்'' கதிரேசன் சொன்னது அவனுக்கு நினைவுக்கு வந்தது.

''என்னுடைய பிரச்சினை மனைவிக்குத் தெரிந்தால் உடனே அவள் தனது சகோதரர்களுக்கு அறிவித்து விடுவாள். அவர்கள் அறிந்தால் பெரும் பிரச்சினைகள் வரும்''

''என்னடாப்பா யோசிக்கிறாய்? நான் வெறியிலை கண்டபடி உழறிவிட்டன். இப்பநீ பெரிய மனிதன். முந்தி நாங்கள் செய்ததைச் சொன்னால் உனக்கு அவமானம் வரும். உனக்கு வாற அவமானத்தில் எனக்கும் பங்கிருக்குத்தானே. ஆகையால் நான் இனிமேல் உன்னைப் பற்றி

எதுவும் சொல்ல மாட்டன். என்னை மன்னித்துக் கொள்'' என்றான் கிருஷ்னன்.

''இப்ப நான் சாராயம் குடிப்பதில்லை. அதனால் காசு தரட்டே. போய் எங்கையாவது வாங்கிக் குடி. உன்னோடு சேர்ந்து குடிக்க ஆசைதான். ஆனால் நான் குடிக்கிறதை விட்டுட்டன். குறை நினைத்துக் கொள்ளாதே'' கவலைப்படுவது போலச் சொன்னான் ஜெயபாலன்.

''இதுக்கேன் நீ கவலைப்படுகிறாய். குடியை விட்ட உன்னைக் குடிக்கச் சொல்லுறது பாவம். நான் நேற்று அப்படிக் கதைத்திருக்கக் கூடாது'' கவலைப்பட்டான் கிருஷ்னன்.

''சரி, சரி இனி முடிந்ததைப் பற்றிக் கதைத்துப் பிரயோசனம் இல்லை. இனிமேலாவது நல்லபடி நட'' என்று கூறித் தனது சட்டைப் பைக்குள் இருந்து ஓர் ஆயிரம் ரூபாத் தாளை எடுத்துக் கொடுத்தான் ஜெயபாலன்.

கிருஷ்னன் கண் கலங்கினான். ''இந்தத் தாளை நான் கண்டு வருடக் கணக்காச்சு'' என்றான் கிருஷ்னன்.

**868. குணன்இலனாய்க் குற்றம் பலஆயின் மற்றார்க்கு**
**இனன்இலன் ஆம் ஏமாப்பு உடைத்து.**

ஒருவன் நற்குணமில்லாதவனாகவும், தீய செயல்களைச் செய்பவனாகவும் இருந்தால், அவன்

துணையில்லாதவனாவான். அவனின் அந் நிலை பகைவர்களுக்கு வாய்ப்பாக அமையும்.

## இன்பமானது

கிருஷ்னனை நினைக்க ஜெயபாலனுக்குப் பயமாக இருந்தது. உருட்டுப் புரட்டுக்கள் செய்து பணம் பறிப்பதில் அவன் வல்லவன். அதனால் தன்னிடம் தொடர்ந்து பணம் பறிக்க வருவானென அஞ்சினான். அதனால் வீட்டிலிருந்து புறப்பட்டு மகா கணபதி ஆலயத்திற்கு வந்தான். அங்கே கதிரேசன் இருந்தார். அவரைக் கண்டதும் ஜெயபாலனுக்குச் சற்று ஆறுதலாக இருந்தது. ஜெயபாலனைக் கண்டதும் கதிரேசனது முகம் வாடியது. ‘‘கோயிலடியில் கதைக்கக் கூடாத கதைகளைக் கதைத்துத் தன்னைக் கெடுக்கப் போகிறான்’’ என்று நினைத்தார்.

ஜெயபாலனின் முகம் என்றுமில்லாதவாறு குழமம்பியிருந்ததைக் கதிரேசன் கண்ட போதும் அவர் அதைப்பற்றி அவனைக் கேட்க விரும்பவில்லை. ஜெயபாலன் பெருமூச்சுவிட்டு விட்டுச் சொன்னான்; ‘‘இன்று காலை கிருஷ்னன் வீட்டுக்கு வந்தான். ஆயிரம் ரூபா கொடுத்தேன். அவனை நினைக்க எனக்குப் பயமாக இருக்கிறது’’ என்றான்.

கதிரேசன் பெருமூச்சு விட்டார்; ‘‘ஒருவன் அறிவில்லாதவனாகவும் எதிரிகளுக்கு அஞ்சுபவனாகவும் இருந்தால் அவனை எதிர்ப்பவர்களுக்கு மகிழ்ச்சியாக இருக்கும். நீ அறிவில்லாதவன். நல்ல நூல்களைக் கற்காதவன்;

அத்துடன் எதிரியைக் கண்டு பயந்து நடுங்கி உயிரை விடுகிறாய். இதைக் கிருஷ்னன் நன்றாக அறிந்து வைத்துள்ளான். அதனால் அடிக்கடி உன்னைத் தேடி வந்து பணம் கறக்கப் போகிறான். அது அவனுக்கு நீங்காத இன்பத்தைக் கொடுக்கப் போகிறது. அதனால் நீ விரைவாக உனது மனைவியையும் அழைத்துக் கொண்டு போ'' என்று கூறிவிட்டு அவனது பதிலுக்குக் காததிராமல் எழுந்து சென்று கால்களைக் கழுவி விட்டுக் கோயிலின் உள்ளே சென்றார்.

கதிரேசன் சென்ற சில நிமிடங்களில், கதிரேசனைத் தேடிக் கொண்டு நவராசா அங்கே வந்தான். அங்கு இருந்த ஜெயபாலனைக் கண்டதும் அவனுக்கு சற்று வெறுப்பாக இருந்தது.

``வா, நவராசா, என்னிடமா வந்தனீ?'' என்று கேட்டான் ஜெயபாலன்.

``நான் அப்புவைத் தேடி வந்தனான். உங்களை ஏன் எனக்கு? உங்களுக்காகக் கதைத்தாலும் உங்களுக்குப் பிடிக்காது. உங்களைக் கிருஷ்னன் கண்டபடி பேசினான். அதைக் கண்டித்த புஷ்பநாதனை நீங்கள் ஏசினீர்களாம். அதை விட நீங்கள் கிருஷ்னனுக்கு ஆயிரம் ரூபா கொடுத்திருக்கிறியள். அதை அவன் கொண்டு வந்து புஷ்பநாதனுக்குக் காட்டியுள்ளான். அத்துடன்; ``ஜெயபாலன் எனது நண்பன். நான் எதைச் சொன்னாலும் அவன் என்னைக் கோபிக்க மாட்டான். நான் கேட்கிற போது பணம் தருவான்'' என்றும் கூறினானாம். அதைப் புஷ்பநாதன் எனக்குச்

சொல்லிக் கவலைப்பட்டான். இப்படி ஏன் செய்கிறீர்கள்?'' என்று கேட்டான் நவராசா.

“அவன் குடிகாரன் குடித்துவிட்டுக் கண்டபடி அலம்புவன். அதை நாம் பெரிதாக எடுத்து அவனைக் கண்டித்தால் அவன் மீண்டும் மீண்டும் எம்மை அவமதிப்பான். அதனால் அவனைச் சமாளிக்க வேண்டுமே தவிர அவனோடு சண்டித்தனத்திற்குப் போகக் கூடாது. அப்படிப் போனால் அது ஆபத்தில் தான் முடியும்'' என்றான் ஜெயபாலன்.

“குடிகாரனுக்கு இடங்கொடுத்தால், குட்டி நாய்க்கும் குழந்தைப் பிள்ளைக்கும் இடங்கொடுத்த மாதிரித்தான் இருக்கும். நீங்கள் கிருஷ்னனுக்கு அளவுக்கதிகமாகப் பயப்படுகிறீர்கள் போலத் தெரிகிறது'' என்றான் நவராசா.

“எனக்கென்னடாப்பா பயம்....? முன்பென்றால் நான் எதற்கும் பயப்படமாட்டன். இப்ப அப்படியே? சமூகம் பல பொறுப்புக்களை எனது தலையில் சுமத்தி விட்டது. அதற்காகவாவது ஒழுங்காக நடக்கத் தானே வேண்டும்''

“அதற்காகக் கண்ட கண்டவங்களுக் கெல்லாம் மரியாதை கொடுக்க வேண்டுமா...? புஷ்பநாதன் உங்களது நண்பன். அவனை நீங்கள் ஒரு குடிகாரனுக்காக அவமதிப்பது எனக்குப் பிடிக்கவில்லை. உங்களோடு நட்பு வைக்க வேண்டாமென்று நான் புஷ்பநாதனுக்குச் சொல்லியுள்ளேன். அத்துடன் புஸ்பநாதனை நடத்துவது போலத்தானே என்னையும்

நடத்துவீர்கள். அதனால் உங்களோடு தொடர்பு வைக்க எனக்கும் விருப்பமில்லை'' என்றான் நவராசா.

அப்போது கதிரேசன் வந்தார்; ''உங்களைத்தேடித் தான் வந்தேன். வாருங்கள் வீட்டுக்குப் போவோம்'' என்றான் நவராசா.

''வீட்டில் இருக்கப் பொழுது போகாமையால் தான் இங்கு வந்தேன். கொஞ்ச நேரம் இருந்து விட்டு வருகிறேன்'' என்றார் கதிரேசன்.

''சரி, புகையிலை வெற்றிலை பாக்கு எல்லாம் கொண்டு வந்து வைத்துள்ளேன்'' என்ற நவராசா நூறு ரூபாத்தாள் ஒன்றைக் எடுத்துக் கொடுத்தான்; ''வெற்றிலை பொயிலை எல்லாம் தந்திட்டாய், எனக்கேன் காசு?'' என்றவாறு நவராசா கொடுத்த பணத்தை வாங்கினார் கதிரேசன்.

---

**869. செறுவார்க்குச் சேண்இகவா இன்பம் அறிவுஇலா**
**அஞ்சும் பகைவர்ப் பெறின்.**

---

அறிவு இல்லாத அஞ்சும் இயல்புடைய பகைவரை ஒருவன் பெற்றால், அவனுக்கு வெற்றியாகிய இன்பம் நெருங்கி வந்து விடும்.

**புகழ் இல்லாதவன்**

“தீமைகைளுக்கு மேல் தீமைகளைச் செய்து விட்டு இப்போ தானும் துயரப்பட்டு என்னையும் துயரத்துக்குள்ளாக்குகிறான்” என்று எண்ணியவாறு நிலத்தில் அமர்ந்தார் கதிரேசன். குளிர்மையான காற்று அவரின் உடலை மெதுவாக ஸ்பரித்தது. ஜெயபாலன் கதிரேசனின் முகத்தைப் பார்த்தான். அவனுக்கு அவருடன் கதைக்க ஒரு மாதிரியாக இருந்தது. அவர் இப்பொழுது தன்னுடன் கதைப்பதை விரும்புகிறாரில்லை என்று அவனுக்குப் புரிந்தது. அதனால் அவன் பேசாமல் இருந்தான். அவனைப் பார்க்கக் கதிரேசனுக்குத் துக்கமாக இருந்தது; “கோடிக்கணக்கில் பணத்தைச் சம்பாதித்து வைத்துக் கொண்டு கவலைப்படும் மடையன்.” என்று நினைத்தார்.

“முடிந்த விஷயத்தைப் பற்றிக் கவலைப்பட்டு என்னத்தைச் சாதிக்கப் போகிறாய். அதனால் எது வந்தாலும் வரட்டும் என்று தைரியமாக இரு. கிருஷ்னனுக்கு இப்போது நல்லகாலம். உன்னுடைய வாழ்வு இன்பமாக அமைய வேண்டுமானால் கிருஷ்னனை நீ அனுசரித்துத்தான் நடக்க வேண்டும். பொதுவாகக் கல்வி கற்காதவனை வெற்றி கொள்வதென்பது மிகமிக இலகுவானது. அதைக் கூடச் செய்ய முடியாது பயந்து நடுங்கும உனக்கு ஒருபோதும் மகிழ்சி கிடைக்காது. அதனால் நீ இந்த நாட்டை விட்டுச் செல்வது தான் புத்திசாலித்தனமானது. அதைச் செய்” என்றான் கதிரேசன்.

ஜெயபாலன் எதுவும் பேசாமல் எழுந்து சென்றான். அவனது மனம் என்றுமில்லாதவாறு குழம்பியிருந்தது. அதனால் அவன் கதிரேசன்

கூறியது போல நாட்டை விட்டுச் செல்லத் தீர்மானித்தான்.

ஜெயபாலன் வீட்டுக்கு வந்த போது அவனது மனைவி சிவசக்தி சொன்னாள்; ‘‘உங்களின் போக்கு எனக்குப் பிடிக்கவில்லை. உங்களது நண்பன் கிருஷ்னன் நீங்கள் சென்ற பின் நன்றாகக் குடித்து விட்டு இங்கு வந்து புலம்பிக் கொண்டிருந்தான். அவனது பேச்சைக் கேட்க எனக்குத்தலை சுற்றுகிறது’’ அதற்கு மேல் சிவசக்தி கூறியது எதுவும் அவனுக்கு விளங்கவில்லை.

‘‘கிருஷ்னன் இலட்சுமியின் விஷயத்தைச் சொல்லிவிட்டானோ….? அதை அவள் தனது சகோதரர்களுக்கும் பிள்ளைகளுக்கும் சொன்னால் என்ன நடக்கும்?’’ ஜெயபாலன் குழம்பிப் போனான். சிவசக்தியின் மூத்த சகோதரன் வந்து தன்னைத் தாக்குவதைப் போன்ற உணர்வு அவனுள் எழுந்தது.

‘‘நான் விசரி போலக் கதைத்துக் கொண்டிருக்கிறன். நீங்கள் ஏதோ கற்பனையில் இருக்கிறீர்கள்’’ என்றவாறு ஜெயபாலனின் தோளில் கையை வைத்து அவனை உலுப்பினாள் சிவசக்தி.

‘‘நட்பு வைப்பதற்குத் தகுதி வேண்டும். படிப்பறிவில்லாத ஒரு பிச்சைக்காரனோடு உங்களுக்கென்ன நட்பு? முன்பு அவனுடன் நட்பாக இருந்தால், இப்போது அவனுக்கு ஏதாவது பணத்தைப் பொருளைக் கொடுப்பதை விட்டு விட்டு அவனை வீட்டுக்கு வரவழைத்துள்ளீர்கள். எனக்கு அவமானமாக இருக்கு. அத்துடன் அவன் குடித்ததால் அவனில் இருந்து வீசும் துர்நாற்றம்

வயிற்றைப் புரட்டுகிறது. எனக்குக் கொஞ்சம் கூட பிடிக்கவில்லை. அவன் அடிக்கடி என்னைக் கூப்பிட்டு; “ஜெயபாலன் வந்துவிட்டானா..?” என்று கேட்கிறான். இனிமேல் தேவையில்லாதவர்களை வீட்டுக்கு அழைத்து வராதீர்கள். அழைத்து வந்தால் நான் பிள்ளைகளோடு சென்று விடுவேன்” என்றாள் சிவசக்தி.

அப்போது தள்ளாடியபடி கிருஷ்னன் வன்தான். அவனைக் கண்ட சிவசக்தி சொன்னாள்; “அவனை முதலில் துரத்துங்கள். கட்டிய உடுப்புக் கழன்று விழுகிறது”

“கிருஷ்னா, இப்போது ஏன் இங்கே வந்தாய்? போட்டுப் பிறகு வா..” அன்புடன் சொன்னான் ஜெயபாலன். அவன் ஏறுக்கு மாறாக எதுவும் உழறி விடுவானோ என்ற பயம் ஜெயபாலனின் நெஞ்சில் துளிர்த்தது.

“நீ பாவம். உன்ரை மனிசி என்னை மதிப்பில்லாமல் பேசிவிட்டாள். உனக்காக நான் அதைப் பொறுத்துக் கொண்டேன். இனி அப்படிப் பேச வேண்டாமென்று சொல்லி வை. உனக்கு மனைவியால் பெரும் கரைச்சல். அதனால் நான் போறன். ஒரு நூறு ரூபா தருவியா?” என்று கேட்டான் ஜெயபாலன். வேறு வழியின்றி நூறு ரூபாயைக் கொடுத்தான் ஜெயபாலன்.

அதைப் பெற்றுக் கொண்ட கிருஷ்னன் தள்ளாடியபடி நடந்து சென்றான். வீதிக்கு வந்ததும் ஜெயபாலன் சொன்னான்; “கிருஷ்னா சொல்லுறன் என்று குறை நினைக்காதே. இனிமேல் இஞ்சை

வராதை. எனது மனைவி பொல்லாதவள். எனக்குச் சாப்பாடும் தாராள்.''

''பார்த்தால் தெரியுது. சரியான அரக்கி. நீ பாவம்.... நான் இனிமேல் இங்கு வரவில்லை. நீ போ வீட்டை'' என்றான் கிருஷ்னன்.

ஜெயபாலனுக்கு வியர்த்துக் கொட்டியது. அவனால் எதையும் நினைக்க முடியவில்லை. அவனது மனம் விறைத்து மரக்கட்டை போல உடல் உணர்வற்று இருந்தது.

**870. கல்லான் வெகுளும் சிறுபொருள் எஞ்ஞான்றும்**
**ஒல்லானை ஒல்லாது ஒளி.**

கல்வி கற்காதவனை வெற்றி கொள்ளும் எளிய செயலைச் செய்ய முடியாதவர்களுக்கு எக் காலத்திலும் புகழ் வந்து சேராது.

## விரும்பக்கூடாது

பல நாட்களாகத் தணிகாசலத்தைச் சந்திக்காததால் கதிரேசன் தணிகாலசத்தின் வீட்டுக்கு வந்தார். முன்பு தணிகாசலம் அவரின் வீட்டுக்கு அண்மையில் இருந்தார். தற்போது புதிய வீடொன்றை வாங்கி அதில் அவர் குடியேறி விட்டார். அவ்வீடு கதிரேசனது வீட்டிலிருந்து வெகு தூரத்தில் இருந்தது. நடந்து வந்தமையால் அவர் களைத்துப் போனார். அவர் தணிகாசலத்தின் வீட்டு முற்றத்தில் நின்ற வேப்ப மர நிழலில் இருந்த நாற்காலி ஒன்றில் அமர்ந்து கொண்டார். ஏற்கனவே வந்து தணிகாசலத்துடன் கதைத்துக் கொண்டிருந்த

வேலாயுதபிள்ளை, கதிரேசனைக் கண்டுவிட்டு எழுந்து வந்து கதிரேசனுக்கு அருகே அமர்ந்து கொண்டார்.

“சொல்லியனுப்பியிருந்தால் நான் வந்து சந்தித்திருப்பன். நீ ஏன் வந்தனி? சரியாய்க் களைத்துப் போனாய்” என்றார் தணிகாசலம்.

“பார்க்க ஆசையாக இருந்தது” சிரித்தார் கதிரேசன்.

“உனக்கென்ன இப்ப ஜெயபாலனின் துணையிருக்கு” என்றார் வேலாயுதபிள்ளை.

கதிரேசனுக்கு அவ்வார்த்தைகள் கோபத்தை வரவளைத்தது. எனினும் சாந்தமாகச் சொன்னார்; “என்னைப் பற்றி உனக்குத் தெரியாது. தணிகாலசத்தைக் கேட்டுப் பார். அவன் நவராசாவிடம் வாறவன். ஏதாவது கதைப்பான். மற்றும் படி எந்த உறவும் இல்லை”

“நீயும் அவனை இலக்கியப் பேரவையில் சேர்க்க வேண்டுமென்று கூறினாயாம்” என்றார் வேலாயுதபிள்ளை.

“ஓம், அதற்கென்ன? இலக்கியப்பேரவை என்ன தனிப்பட்டவர்களின் சொத்தா..? பொதுச் சொத்து. வரலாற்று ரீதியாகப் பார்த்தால் எமது நாயன்மார்கள், சிவனடியார்கள், பலர் பல தீய செயல்களிலீடுபட்டுத் திருந்திச் சிவத்தொண்டர்களான வரலாறு உண்டு. அசுரர்கள்

எல்லோரும் கடவுள்களிடம் வரத்தைப் பெற்றுவிட்டு அவர்களுக்கெதிராக அவற்றைப் பயன்படுத்தியவர்கள். அப்படி இருந்தும் எல்லாக் கடவுளும் அவர்களை மன்னித்து ஆசீர்வதித்துத் தம்மடியில் சேர்த்துக் கொண்ட வரலாற்றை நீ படிக்கவில்லையா? ஒரு மனிதன் சேரும் இடத்தைக் கொண்டு தான் அவன் பேசப்படுவான். ஜெயபாலன் தீயவர்களோடு நட்பு வைத்திருந்த காலத்தில் இகழப்பட்டான். தற்பொழுது நல்லவர்களுடன் நட்புக் கொண்ட போது போற்றப்படுகிறான்; புழகப்படுகிறான். அத்துடன் ஓர் அழிவில்தான் ஆக்கமேற்படும். இதற்கு இதிகாசபுராணங்கள் சாட்சியாக இருக்கின்றன. அதே போல ஜெயபாலனின் தீமைகளை அழிந்ததால் ஊர் நன்மை பெறுகிறது. கற்றறிந்த அறிஞர்கள் பலர் இவ்வூரில் இருந்து இலக்கியப் பேரவை அமைத்து தம் வித்துவத்தைக் காட்டினர்களே தவிரப் பசித்த ஒருவனுக்கு ஒரு பிடி சோறு வழங்கினார்களா…? ‘‘பசி வந்தால் பத்தும் பறந்து விடும்’’ என்பார்கள். பேச்சைக் கேட்பவர்கள் கூட சாப்பாட்டு வேளை வந்தால் எழுந்து விடுவார்கள். உணவுக்குத் திண்டாடிய பல கலைஞர்களுக்கு இப்போ பணம் கிடைத்திருக்கு. அறிஞர்களைப் போன்றுகிறீர்கள் பொன்னாடை போர்த்து கிறீர்கள். இது தவிர அவர்களுக்கு இதுவரை பண உதவி ஏதாவது செய்தீர்களா…?’’ என்று கேட்டார் கதிரேசன்.

வேலாயுதபிள்ளையால் அதற்குப் பதில்கூற முடியவில்லை. அதனால் அவர் பேசாமலிருந்தார். ‘‘கணேசலிங்கத்தின் மகன் காண்டீபன் எத்தனை வருடங்களாக நோயால் அவதிப்பட்டான். இது எந்த அறிஞனுக்கும் தெரியவில்லை. அறிவில்லாத

பணக்காரன் ஒருவனுக்குத்தான் தெரிந்தது. அறிஞர்கள் பசியால் வாடுவது யாருக்கும் தெரிவதில்லை. ஜெயபாலனுக்கு மட்டும் தான் தெரிந்தது. உனக்கும் இரண்டு பிள்ளைகள் வெளிநாட்டில் இருக்கிறார்கள். பண்டிதரோடு சிநேகிதமாக இருக்கிறாய். அவரது மூத்த மகள் கணவனை இழந்து மூன்று பிள்ளைகளோடு கஷ்டப்பட்டாள். பண்டிதர் மாற்றிக் கட்ட வேட்டி இல்லாமல் ஒரே ஒரு பட்டு வேட்டியைக் கட்டிக் கொண்டுதான் இலக்கியப் பேரவைக்கு வருவார். இதைப்பற்றி நீ யோசித்தாயா…? இல்லை இங்குள்ள அறிஞர்கள் யோசித்தார்களா..? இல்லையே, ஜெயபாலன்தானே யோசித்தான். அதை ஏன் குறை சொல்கிறீர்கள்..?''

''பகை என்று சொல்லப்படுகின்ற பண்பில்லாத தீய செயலை, ஒருவன் சிரித்துப் பொழுது போக்கும் விளையாட்டாகக் கூடச் செய்யக்கூடாது'' என்று பெரியவர்கள் கூறுவார்கள். அப்படிச் செய்தால் அது நாளுக்கு நாள் வளரும் தன்மை வாய்ந்தது. சிறு பொறி பெரு நெருப்பாவதைப் போல விளையாட்டுப் பேச்சுக்களும் பெருந்தீமையை உண்டாகும். நீ விளையாட்டாகப் பல கதைகளைக் கதைத்துள்ளாய். விக்னேஸ்வரமூர்த்தி ஒரு போதும் ஜெயபாலனை மதித்ததில்லை. அவர் தலைமைப் பதவியில் இருப்பதால் பல செயல்களை செய்ய வேண்டியுள்ளது. அவை சிலருக்கும் பிடிக்கும் பலருக்குப் பிடிக்காது. அதற்காக நாம் வாயில் வந்தபடி விளையாட்டாகக் கூட எதையும் கதைக்கக்கூடாது'' என்றார் கதிரேசன்.

**871. பகைஎன்னும் பண்பு இலதனை ஒருவன்
நகையேயும் வேண்டற்பாற்று அன்று.**

பகை என்று சொல்லப்படுகின்ற பண்பற்ற தீய செயலை ஒருவன் சிரித்துப் பொழுது போக்கும் விளையாட்டாகக் கூட விரும்பக் கூடாது.

## பகை கொள்ளக் கூடாதவர்கள்

“நீ எப்படிச் சொன்னாலும் நான் அதை ஏற்க மாட்டன். விக்னேஸ்வரமூர்த்தி இப்போ முன்பு போல இல்லை. அவர் ஏதோ ஒரு காரணத்துக்காக ஜெயபாலனுக்குப் பயப்படுகிறார். இல்லாவிட்டால் அவனது பணத்திற்கு மதிப்பளிக்கிறார்” என்றார் வேலாயுதபிள்ளை.

வேலாயுதபிள்ளையின் பேச்சு பல இடங்களில் நியாயமானதல்ல என்று ஊரில் உள்ளவர்கள் பேசிக் கொள்வதைக் கதிரேசன் கேட்டுள்ளார். “இப்போது அதை அவர் நிரூபித்துள்ளார்” என்று கதிரேசன் நினைத்தார். அதனால் அவர் எதுவும் பேசவில்லை.

தணிகாசலத்திற்கு வேலாயுதபிள்ளையின் பேச்சு கதிரேசனுக்குப் பிடிக்கவில்லை என்று தெரிந்தது. அதனால் பேச்சைமாற்றுவதற்காக; “நவராசா, துர்க்காவோடு ஒற்றுமையாகி விட்டதாக அறிந்தேன். இப்பொழுது துர்க்கா உங்களது வீட்டுக்கு வருவதாகவும் கேள்விப்பட்டேன்” என்றார் தணிகாசலம்.

“குடும்பத்துள் முரண்பாடுகள் வருவது இயற்கை தானே. அவள் கொஞ்சம் வசதியானவள். சொகுசாக வாழ்ந்து பழக்கப்பட்டவள். அதனால் ஆரம்பத்தில் சிரமப்பட்டாள். இப்ப சரி. யாரும் உண்மை நிலையை உணர்ந்து செயற்பட வேண்டும். பொய்த் தோற்றத்தை நம்பினால் தோல்வியும் அவமானமும் தான் மிஞ்சும்” என்றார் கதிரேசன்.

“உண்மைதான். தன்ரை தன்ரை தகுதிகளை அறிந்து நடத்தல் வேண்டும். விக்னேஸ்வரமூர்த்தி பெரியவர்; உயர்ந்தவர்; கற்றறிந்தவர்; உயர்ந்த பதவியில் இருப்பவர். அதனால் மக்களும் அறிஞர்களும் அவருக்கு எதிராகக் கதைக்கப் பயப்படுகின்றனர்...” என்று தணிகாசலம் கூறிக் கொண்டிருக்கையில் கதிரேசன் குறுக்கிட்டார்; “நீ என்ன தணிகாசலம் சொல்கிறாய்? விக்னேஸ்வரமூர்த்தியைப் பற்றி கதைக்க என்ன இருக்கிறது. அவரின் இடத்தில் இருந்தால் தான் அந்த நிலை உனக்குப் புரியும். விக்னேஸ்வரமூர்த்தி அதிபராக இருந்த காலத்தில் எப்படி நடந்து கொண்டாரோ அப்படித்தான் இன்றும் நடந்து கொள்கிறார். ஜெயபாலனிடம் பணம் பெற அவர் விரும்பினாரா...? இலக்கியப் பேரவையில் உள்ள தொண்ணூறு சதவீதமான உறுப்பினர்கள்; “ஜெயபாலனிடம் பணம் பெறலாம்” என்று கூறிய பின் அவர் ‘பணம் வேண்டாம்’ என்று எப்படிச் சொல்வது. அத்துடன் நீ தனபாலனுக்கு அடித்தது பிழை. கள்ளுக் குடித்தவன் விசரனை விட மோசமானவன். அவன் குடித்து விட்டுப் பேசும் கதையை நாம் எப்படி ஏற்பது. அதைவிட அவனோடு பகை கொண்டால் அவன் ஊர்

முழுவதிலும் உன்னைப் பற்றிக் கேவலமாகவே சொல்லித் திரிவான். தினமும் குடித்து விட்டு உன்னைப் பற்றித்தான் கதைப்பான். அதில் ஆயிரம் பொய்கள் இருக்கும். ஒன்றிரண்டு தான் உண்மையாக இருக்கும். ஆனால் ஊரவர்கள் பொய்களைத் தான் நம்புவர்.”

வேலாயுதபிள்ளை கதிரேசன் அப்படிக் கூறுவார் என எதிர்பாராததால் சற்றுக் குழம்பிவிட்டார். கஜேந்திரன், விக்னேஸ்வரமூர்ததி, பண்டிதர், வித்துவசிரோன்மணி போன்றவர்கள் சொன்னதைக் கதிரேசனும் ஆதரிக்கிறார் என்பதை நினைக்க வேலாயுத பிள்ளைக்கு கவலையாக இருந்தது.

“எதையும் ஒருவன் மனதுள் நினைக்கலாமே தவிர, வெளியே சொல்லக் கூடாது. சொல்வதானால் என்னைப் போலச் சம்பந்தப்பட்டவர்களை நேரில் சந்தித்துச் சொல்ல வேண்டும். பலருக்குச் சொன்னால் அவர்கள் தாம் தாம் விளங்கிக் கொண்டபடி தான் கதைப்பார்கள். நீ இந்த விஷயத்தை விக்னேஸ்வரமூர்த்தியோடு கதைத்திருக்கலாம். அதைவிட்டு விட்டு ஏன் மற்றவர்களுடன் கதைத்தாய்? அதனால் விக்னேஸ்வரமூர்த்திக்கு மன உழைச்சல் இருக்கிறது. “ஒருவன் வில்லை ஏராகக் கொண்ட வீரர்களுடன் பகை கொண்டாலும், சொல்லை ஏராகக் கொண்ட அறிஞர்களுடன் பகை கொள்ளுதல் ஆகாது” என்று பெரியவர்கள் சொல்லக் கேட்டுள்ளேன். தனபாலன் சந்திகளிலும் வீதிகளிலும் புலம்புவான். அதை அதிகமானவர்கள் கேட்கிறார்களோ தெரியாது. ஆனால் அறிஞர்

சொல்வதை அறிஞர்கள் மட்டுமல்ல பாமரரும் கேட்பர். இன்று விக்னேஸ்வரமூர்த்தியை ஊரில் உள்ள அனைவருக்கும் தேவை. அதனால் அவர் கூறுவது தேவவாக்காக இருக்கும்'' என்றார் கதிரேசன்.

``உண்மைதான் இந்த விஷயத்தில் வேலாயுதம் அவசரப்பட்டுட்டான். சரிசரி... அதை விடுவம்'' என்றார் தணிகாசலம்.

``எல்லாரும் அதைவிட்டு விட்டார்கள். ஆனால் வேலாயுதபிள்ளை மட்டும் விடவில்லை'' என்றார் கதிரேசன்.

``அதை மறக்கச் சொல்லி உனக்குப் பலமுறை கூறிவிட்டேன். நீதேவையில்லாமல் கதைப்பதால் பலரின் பகையைச் சம்பாதிக்க வேண்டியிருக்கு'' என்று கவலைப்பட்டார் தணிகாசலம்.

**872. வில்லேர் உழவர் பகைகொளினும் கொள்ளற்க
சொல்ஏர் உருழவர் பகை.**

வில்உழவரான வீரர்களுடன் பகை கொண்டாலும், சொல் உழவரான அறிஞர்களுடன் பகை கொள்ளக் கூடாது.

## பித்தனை விடக் கீழானவன்

``ஒருத்தரையும் பகைக்கக்கூடாது. விளையாட்டாகக் கூடத் தீமையான சொற்களைப்

பேசினால் பகைதான் உண்டாகும். சிறுபகை தோன்றினாலும் அதைப் போக்காவிட்டால் தீப்பொறி தீயாக மாறுவதைப் போலப் பகை உக்கிரமடைந்து விடும். பகையானது சத்தியம், தர்மம், சாந்தி, அன்பு, அகிம்சை நட்புப் போன்றவற்றைச் சிதைத்துவிடும். முன்பு நீ நல்ல முறையில் வாழ்ந்தாய். யார் எதைச் சொன்னாலும் அதை ஆராய்ந்து முடிவெடுத்தாய். இப்போ அப்படியில்லை. அவசரமாக முடிவெடுக்கிறாய். உன்னை நீ மாற்றிக் கொண்டு மற்றவர்கள் மாறிவிட்டதாகக் கூறுகிறாய். நிறக் கண்ணாடி அணிந்தவனின் பார்வையில் தான் மாற்றம் இருக்குமே தவிர உலகத்தில் மாற்றமிராது. நீ தற்பொழுது நிறக்கண்ணாடியூடாக உலகத்தைப் பார்க்கிறாய். மனதை ஒரு நிலைப்படுத்தி விட்டு மனிதனைப் பார். வித்தியாசமிராது. ஒருவன் தனது மனநிலை மாற்றத்தைப் புரிந்து கொள்ளாது அடுத்தவனின் செயல்கள் மாறிவிட்டதாக நினைப்பது அறியாமை'' என்றார் கதிரேசன்.

முதல் முறையாகத் தணிகாசலம் யோசித்தார்; ''கதிரேசன் சொல்வது உண்மை; தர்மவாக்கு. இவ்வளவு காலமும் தனபாலன் குடித்து விட்டு ஊரில் கலாட்டா பண்ணிய போது வேலாயுதத்திற்கு ஏன் கோபம் வரவில்லை...? தனபாலன் கோயில் குரங்குகளைப் பிடித்து வெட்டிப் பங்கு போட்ட போது ஏன் அவன் மீது கோபங் கொண்டு அடிக்கவில்லை. சாதாரணமாகத் தனபாலன் எல்லோரையும் ஏசுவான். ஆனால் அவர்கள் அவ்விடத்தில் நின்றால் குழைவான்; அவர்களைப் போற்றுவான். அவர் சிரித்துப் பேசினால் ஒரு போத்தல் கள்ளுக்குப் பணம் கேட்பான். அப்படி வேலாயுதபிள்ளை பலமுறை

தனபாலனது கரைச்சல் தாங்க முடியாது பணம் கொடுத்திருக்கிறார். அதனால் அவனைக் கண்டதும் அவ்விடத்தை விட்டு மறைவோரே அதிகம். அப்படி இருக்க அன்று ஏன் வேலாயுதபிள்ளை ஒரு நாளுமில்லாதவாறு கோபங் கொண்டு அவனைத் தாக்கினார். கதிரேசு சொல்வது போல வேலாயுதம் தான் மாறியிருக்கு. அவர்தான் நிறக் கண்ணாடி அணிந்திருக்கிறார். அதனால் இப்பொழுது பலர் வேலாயுதத்துடன் முரண்பட்டுள்ளனர்.'' என்று நினைத்தார் தணிகாசலம்.

''என்ன தணிகாசலம் யோசிக்கிறாய். நான் ஏதாவது தவறாகச் சொல்லி விட்டேனா..? ஒருவன் தேவையில்லாமல் பலரையும் பகைத்துக் கொள்ளுதல் கூடாது. அப்படிப் பகைத்தால் அவன் தனிமைப்பட்டு விடுவான். தனிமைப்பட்டுப் பலரையும் பகைத்துக் கொள்பவன் பித்துப் பிடித்தவனை விடக் கீழானவனாவன்'' என்று பெரியவர்கள் கூறக் கேட்டிருக்கிறேன். இப்போது வேலாயுதத்திற்கு முன்பிருந்த செல்வாக்கில்லை. அதனால் அவர் தனது போக்கை மாற்றிக் கொள்ள வேண்டும்'' என்றார் கதிரேசன்.

''தணியண்ணை, வேலாயுதபிள்ளை அண்ணை கலந்து கொள்ளும் இடங்களுக்கு நான் வரமாட்டன்'' என்று கஜேந்திரன் கூறினான்.

''வேலாயுதத்தின் போக்கு இப்ப சரியில்லை. கதைக்கக் கூடாத கதைகளைக் கதைக்கக் கூடாதவர்களுடன் கதைக்கிறார்'' என்று விக்னேஸ்வரமூர்த்தி சொன்னார்.

“பாவம் செய்யாதவன் உலகத்தில் யாரும் இல்லை. யேசு, “பாவம் செய்யாத ஒருவன் குற்றஞ் சுமத்தப்பட்ட பெண்ணிற்கு முதல் கல்லை எடுத்து எறியட்டும்” என்று கூறியது போலப் பாவஞ் செய்யாதவர்கள் யார்…? ஏதோ வறியவர்கள் பயன் பெறட்டும் என்று இலக்கியப் பேரவை பெருமனம் கொண்டு ஜெயபாலனிடம் பணத்தை வாங்கியது. அது பிழையென்றால் ஒரு முறை கண்டிக்கலாம். தெருக்கள், வீதிகள், கோயில்கள் சனசமூக நிலையங்களிலெல்லாம் சொல்ல வேண்டுமா…?” என்று பண்டிதர் சொன்னார்.

“யோசித்துப் பார்த்தால் வேலாயுதம் செய்தது பிழைதான். அன்று ஆராயாமல் நானும் அவசரப்பட்டுக் கதைத்து விட்டேன்.” என்று நினைத்தார் தணிகாசலம். அவருக்குக் கவலையாக இருந்தது; “பகையை வளர்த்தால் தனிமைப்படல் வேண்டும். தனிமைப்பட்டவன் பித்துப் பிடித்தவனிலும் கீழாவன் என்று கதிரேசன் கூறியது சரி. இப்போது வேலாயுத்தின் கதையில் வித்தியாசம் தெரிகிறது. அவர் எந்த நேரமும் மற்றவர்களைக் குறை கூறிக் கொண்டே இருக்கிறார்.” என்று நினைத்தார் தணிகாசலம்.

“திரைந்த பாலும், வழிந்த நீரும் பாவனைக்கு உதவுவதில்லை. அதே போன்று தான் சொன்ன சொல்லை மீளப் பெற முடியாது. ஆனால் இனியாவது திருந்தி நடக்கலாம் தானே. கடந்த கால வாழ்க்கையில் ஒருவன் செய்த தவறுகளை மீண்டும் செய்யாது வாழ வேண்டும். அப்படி வாழ்ந்தால் கடந்த காலத் தவறுகள் காலப்

போக்கில் மறைந்து விடும். தவறுகள் சில சமயம் நன்மையையும் தரும். ஜெயபாலனிடம் பணம் பெற்றது தவறுதான். ஆனால் அப்பணம் பதினைந்து உயிர்களைக் காப்பாற்றுகிறது. அது நன்மை இல்லை என்று உன்னால் மறுக்க முடியுமா..?'' என்று கேட்டார் கதிரேசன். வேலாயுதபிள்ளை சிலைபோல இருந்தார்

---

**873. ஏமுற் றவரினும் ஏழை தமியனாய்ப்**
**பல்லார் பகைகொள் பவன்.**

---

தான் தனியாக இருந்து கொண்டு பலரையும் பகைத்துக் கொள்பவன் பித்துப் பிடித்தவனை விடக் கேவலமானவனாகக் கருதப்படுவான்.

## பெருந்தன்மை

தணிகாசலம் கதிரேசனைப் பார்த்தார். சவரஞ் செய்யப் பட்டிருந்த அவரது முகத்தில் ஓர் அறிவுச் சுடர் பிரகாசித்துக் கொண்டிருப்பதைப் போல இருந்தது.

"நீங்கள் சொன்னது அனைத்தும் உண்மை. நான்தான் ஆராயாது வேலாதபிள்ளை தனபாலனுக்கு அடித்தது சரியென்று கூறிவிட்டேன். அதனால் தான் வேலாயுதம் அதைப் பற்றி விமர்சனம் செய்து பகையைச் சம்பாதித்தது. அதற்கான முழுப் பொறுப்பையும் நான் ஏற்கிறேன்'' என்றார் தணிகாசலம்.

வேலாயுதபிள்ளை திகைத்துப் போனார். அவர் தணிகாசலம் தனக்காதரவாகக் கதைத்ததால்

தான் உற்சாகப்பட்டு விக்னேஸ்வரமூர்த்தியுடனும் கஜேந்திரனுடனும் மாறுபாடு கொண்டார். இப்போ தணிகாசலம் அப்படிச் சொன்னதும் அவருக்குக் கவலையாக இருந்தது.

“இவ்வுலகில் வேற்றுமைகள், முரண்பாடுகள் இருக்கத்தான் செய்கின்றன. இந்த பூமி மேடுபள்ளங்களால் ஆனது. ஓர் இடத்தில் உள்ள செழிப்பு இன்னோர் இடத்தில் இல்லை. அது இறைவனின் படைப்பு. ஆனால் மனிதன் அப்படியானவனல்ல. ஒரே மாதிரித்தான் எல்லோரும் படைக்கப்படுகின்றனர். பின் ஏன் அவர்கள் மாற்றமடைகிறார்கள்? சுயநலம் வந்து மனதுள்ப் புகுந்து விடுகிறது. இந்த உடல் சுயநலத்திற்காகப் படைக்கப்பட்டதல்ல. சேவை செய்வதற்காக, பிறருக்கு உதவுவதற்காகப் படைக்கப்பட்டது. அப்படி உதவி செய்ய முடியாவிட்டால் எண்ணங்களாலாவது புனிதர்களாக வாழப்பழகிக் கொள்ளலாம் தானே. அதற்கு ஏன் அஞ்ச வேண்டும்? பகைவனை நண்பனாகக் கொண்டு நடக்கும் பண்புள்ளவனது பெருந்தன்மையால் தான் உலகம் வாழ்கிறது. விக்னேஸ்வரமூர்த்தியை ஆரம்பத்தில் ஜெயபாலன் தனது பகைவனாகத்தான் கருதினான். விக்னேஸ்வரமூர்த்தி அவனைப் பகைவனாகக் கருதாவிட்டாலும் நண்பனாகக் கருதவில்லை. ஒரு தீயவனாகக் கருதினார். ஆனால் அவனை இன்று அவர் நண்பனாகக் கொள்ளாவிட்டாலும் மனிதனாகக் கணித்தமையால்தான் இன்று ஜெயபாலன் பெரும் பெரும் செயல்களைச் செய்கிறான். இதை உங்களால் மறுக்க முடியுமா…?” என்று கேட்டார் கதிரேசன்.

வேலாயுதபிள்ளை எழுந்தார்; ‘‘நான் பிறகு சந்திக்கிறேன்’’ என்று கூறி விட்டு நடந்தார். அவரின் செயல் தணிகாசலத்திற்குத் துக்கத்தை வரவழைத்தது.

அப்போது பாக்கியலட்சுமி மூவருக்கும் தேநீர் கொண்டு வந்தாள். வேலாயுதபிள்ளை சென்று கொண்டிருந்தார். அதனால் அவள் அவரை அழைத்தாள்; ‘‘வேலாயுதண்ணை.... வேலாயுதண்ணை தேநீர் கொண்டு வந்து விட்டேன் குடித்து விட்டுப் போங்கோ’’ என்றாள்.

வேலாயுதபிள்ளை திரும்பி வந்து நாற்காலியில் அமர்ந்து தேநீரை வாங்கிக் குடித்தார்.

அப்போது நவராசா அங்கு கதிரேசனைத் தேடிக் கொண்டு வந்தான்; ‘‘நான் பின்நேரம் தானே வாறதென்று சொன்னனான்’’ என்றார் கதிரேசன்.

‘‘அங்கே ஏன் பின்னேரம்? மத்தியானம் சமைத்தாயிற்று. வீட்டை சொல்லி விட்டுத்தான் வந்தேன். இப்படியே போகலாம்’’ என்றான் நவராசா.

வேலாயுதபிள்ளை சிரித்தார்; ‘‘கதிரேசுவிற்கு என்ன....? தேடி வந்து அழைத்துச் சென்று சாப்பாடு கொடுப்பவர்கள் இருக்கிறார்கள்’’ என்றார்.

‘‘பகைவனைக் கூட நண்பனாகக் கருதினால், அவனால் ஏராளமான நன்மைகள் உண்டாகும். நான் எல்லோருடனும் மிகவும் அன்பாகப் பழகுகிறேன். அதனால் அவர்களும்

என்னுடன் அன்பாகப் பழகுகிறார்கள். நவராசா எனது பேரன். குழந்தையில் இருந்து தூக்கி வளர்த்தனான்'' என்றார் கதிரேசன்.

"அப்பு சொல்வது போலத்தான் நானும் நடந்து வருகிறேன். அவர் ஒருபோதும் தீயவற்றைக் கூறியதில்லை. தீய செயல்கள் தீமையைத் தருமே தவிர நன்மையைத் தராது. விளையாட்டாகக் கூட மற்றவர்களின் மனம் நோக நடக்கக் கூடாது. நீங்கள் வயதில் மூத்தவர். நான் சொல்வது சரியோ தெரியாது….'' என்று நவராசா கூறிக் கொண்டிருக்கும் போது வேலாயுதபிள்ளை சொன்னார்: "நான் தனபாலனுக்கு அடித்தது பிழை என்றுதானே சொல்லப் போகிறாய். சரியென்று சொன்ன ஒரே ஒரு ஆளான தணிகாசலமும் இன்று 'அது பிழை' என்று சொல்லி விட்டார். அதனால் நீ சொல்வதால் எதுவும் ஆகாது. நீ சொல்'' என்றார் வேலாயுதபிள்ளை.

நவராசாவுக்கு அவரது வார்த்தைகள் வேதனையைக் கொடுத்தது. அதனால் அவன் எதுவும் சொல்லவில்லை; வேலாயுதபிள்ளை சொன்னார்; "யார் எதைச் சொன்னாலும்நான் செய்தது சரியென்று தான் நான் கூறுவேன்'' என்று கூறிவிட்டு யாரின் வார்த்தைகளையும் எதிர்பாராது எழுந்து நடந்தார் வேலாயுதபிள்ளை.

---

**874. பகைநட்பாக் கொண்டுஒழுகும் பண்புடையாளன்
தகைமைக்கண் தங்கிற்று உலகு.**

---

பகைவனையும் நண்பனாக்கிக் கொண்டு வாழும் பண்புடையவனது பெருந்தன்மையில் உலகம் தங்கியிருக்கிறது.

## இனிய துணை

துவிச்சக்கர வண்டியில் சென்று கொண்டிருந்த வேலாயுதபிள்ளையின் மனம் போராடிக் கொண்டிருந்தது; “ஜெயபாலன் ஊருக்கு வநத பின்பு ஊரே தலைகீழாக மாறி விட்டது. அன்பு, பணிவு, பொறுமை என்பன இல்லாமல் போய் விட்டன. ஜெயபாலனிடம் உள்ள பணத்திற்காகத் தனபாலனுக்கு சமூக அந்தஸ்துக் கொடுக்கப் பார்க்கிறார்கள். இவ்வளவு நாளும் தணிகாசலம் தனக்குத் துணையாக இருப்பார் என்று நினைத்த வேலாயுதபிள்ளைக்கு இன்று தணிகாசலமும் தான் செய்வது பிழை என்று கூறி விட்டார். இனி அவரோடு தொடர்பு வைப்பதால் எந்தப் பயனும் வராது. விக்னேஸ்வர மூர்த்தி அன்று சொன்னதைக் கேட்டுக் பொறுக்காமையால் தான் அவர் சொன்னது பிழை என்று பலருக்குச் சொன்னேன். அவர்கள் அதை விக்னேஸ்வரமூர்த்திக்குச் சொல்ல வேண்டுமென்பதற்காகத் தான் அவர்களுக்குச் சொன்னேன். அவர்கள் நான் சொல்லாதவற்றையும் சேர்த்துச் சொல்லி என்னையும் விக்னேஸ்வரமூர்த்திரையயும் பிரித்து விட்டார்கள். விக்னேஸ்வரமூர்த்தி பெருந் தன்மையானவர். அதனால் அவர் என்னோடு கலகலப்பாகப் பழகுகிறார். உண்மையில் அவர் பெரிய மனிதர் தான். அதனால் தான் அவர் குறைகளை நேரிற் சொல்கிறார். தணிகாசலம் அன்று தொடக்கம் நான் செய்தது சரியென்று கூறிவிட்டு இன்று அது பிழை

என்கிறார். அதற்குக் காரணம் ஜெயபாலனது பணம் தான். அதற்காகத்தான் கதிரேசன் அவரைத் தேடி வந்திருக்கிறாார். இன்றைய நிலையில் எனக்கு ஆதரவாகக் கதைக்க யாரும் இல்லை. தணிகாசலமும் ஜெயபாலனின் பக்கம் சார்ந்து விட்டார். அதனால் நான் விக்னேஸ்வரமூர்த்தியை ஏன் பகைப்பான்? அவருடன் நான் சேர்ந்தால் எல்லோரும் என்னை மதிப்பார்கள்.'' என்று நினைத்தார் வேலாயுதபிள்ளை.

துவிச்சக்கரவண்டியில் சென்று கொண்டிருந்த வேலாயுதபிள்ளைக்குச் சுவாமியார் சொன்ன வார்த்தைகள் ஞாபகத்தில் வந்தன; ''எதிரிகளிடமும் பண்பாக நடந்து கொள்ளல் வேண்டும். அவர்கள் ஒரு போதும் நீ கூறுபவற்றை ஏற்றுக் கொள்ள மாட்டார்கள். அதற்காக நீ உனது அபிப்பிராயத்தைச் சொல்லாமல் விடக் கூடாது. அவர்களுக்கு உனது அபிப்பிராயம் பிடிக்காவிட்டால், அவர்களைக் கண்டிக்காதே. அதனை மறுத்து வாதாடவும் கூடாது கண்டிப்பும் பிடிவாதமும் பலாத்காரமும் அன்பைத் துரத்துமே தவிரச் சேர்க்காது. எல்லாவற்றுக்கும் மேலாக நாம் மனிதப் பண்புடன் நடந்து கொள்ளப் பழகுதல் வேண்டும். ஒவ்வொருவனுடைய நடத்தை தான் அவனை உயர்த்துவதும் தாழ்த்துவதும். உனது நல்ல குணங்கள் தான் உனக்கு மதிப்பைத் தருகின்றன. மற்றவனின் தேவைகள். மற்றவனின் இலட்சியம், மற்றவனின் நலம் இவற்றை நாம் மதித்தல் வேண்டும். அப்படி மதித்தால் தான் அவன் உனது தேவைகளையும், உனது இலட்.சியங்களையும் உனது நலன்களையும் மதிப்பான். தவறுகள் செய்யலாம். தவறுகள் செய்யப்படல் வேண்டும். ஏனென்றால் அவை

செய்யப்பட்டால் தான் அவற்றின் தாக்கம் உனக்கும் மற்றவர்களுக்கும் புரியும். எப்பொழுது நீ தவறு செய்து விட்டேன் என்று நினைக்கிறாயோ அப்போது தேவனாகிவிடுவாய்''

வேலாயுதபிள்ளை துவிச்சக்கரவண்டியை விக்னேஸ்வரமூர்த்தியின் வீட்டு வாசலில் நிறுத்திப் பூட்டி விட்டு நிமிர்ந்தார்.

‘‘வா வேலாயுதம். கனகாலம் உன்னைக் காணவில்லை. இன்று உனது வீட்டுக்கு வர நினைத்தேன். ஆனால் நீ வந்து விட்டாய். அன்பு என்பது அதுதான். இருவருக்கும் ஒரே உணர்வு ஒரே நேரத்தில் வருவதானால் உயரிய புனிதமான நட்பு இருத்தல் வேண்டும் வா.... வா...'' என்று மகிழ்வுடன் வரவேற்றார் விக்னேஸ்வரமூர்த்தி.

வேலாயுதபிள்ளை உருகிப் போனார்; ‘‘நான் நினைத்தபடி விக்னேஸ்வரமூர்த்தி என்மீது கோபங் கொள்ளவில்லை'' என்று நினைத்தார். கனக்கப் பேசவேண்டும். தான் அந்த நேர உணர்வில் அப்படி நடந்து விட்டேன் என்று கூற வேண்டுமென்றெல்லாம்'' நினைத்து வந்த வேலாயுதபிள்ளை எல்லாவற்றையும் மறந்து விட்டார்.

‘‘ஊர்முழுவதும் முன்பு உங்களைப் பற்றிக் கதைத்தார்கள். தேடுவாரற்றிருந்த எமது பாடசாலையை உச்ச நிலைக்குக் கொண்டு சென்றீர்கள். இப்போ கல்விப் பணிப்பாளராகிக் கலக்குகிறீர்கள். பட்டணப் பாடசாலைகளெல்லாம் நல்ல முறையில் பிரச்சினைகள் இன்றி

இயங்குவதாக எல்லோரும் பேசுவதைக் கேட்க மகிழ்ச்சியாக இருக்கிறது. உண்மையில் உங்களைப் போலச் சகல அதிபர்களும் இருந்தால் பாடசாலைகள் யாவும் நல்ல முறையில் முன்னேறியிருக்கும்.'' மகிழ்சியுடன் கதைத்துக் கொண்டிருந்தார் வேலாயுதபிள்ளை. அவர் விக்னேஸ்வரமூர்த்தியைக் கதைக்க விடவில்லை. அதனால் விக்னேஸ்வரமூர்த்தி சிரித்தவாறு கேட்டுக் கொண்டிருந்தார்.

**875. தன்துணை இன்றால் பகைஇரண்டால் தான்ஒருவன்
இன்துணையாக் கொள்கவற்றின் ஒன்று.**

தனக்கு உற்றதுணை இல்லை, பகைவரோ இருவர். இந்நிலையில் அப்பகைவரில் ஒருவரை நல்ல துணையாக்கிக் கொள்ளல் வேண்டும்.

## நடுவாய் இரு

இலக்கியப் பேரவையில் நாவலடியில் வாழும் உருத்திர மூர்த்தி என்ற அறிஞர் ''இராம காவியத்தில் பெண்களின் பங்கு'' என்ற விடயம் பற்றிப் பேசிக் கொண்டிருந்தார்; ''இராம காவியம் என்பது மனித மேம்பாட்டைக் கதைவடிவில் கூறும் ஓர் அரிய நூல். மிகவும் அரிய பல பெண்மைக்குரிய தகவல்களைக் கம்பன் இந்நூல் வாயிலாக உலகிற்குத் தருகிறான். தசரதனுக்குப் பிள்ளைப் பாக்கியமின்மையால் அவர் மூன்று பெண்களை மணக்க வேண்டிய கட்டாயம் உண்டானது. தசரதர் ஓர் அரசர். அவருக்குப் புத்திர்களிலில்லாவிட்டால் அரச பரம்பரை அவருடன் முடிவடைந்துவிடும். ராஜகுருவின் கட்டளைப்படி

வசிட்டரின் துணையுடன் யக்ஞ புரிஷனிடமிருந்து பாகாசத்தைப் பெற்று நீதி முறைப்படி அதைப் பிரித்துத் தனது மூன்ற மனைவியர்களுக்கும் கொடுத்தார். இந்த மூன்று மனைவியருள் எவருக்கும் தசரதர் பாகுபாடு காட்டவில்லை. இதனால் அவர்கள் மிகுந்தபாசத்துடன் வாழ்ந்து வந்தனர். இவர்களைத் தவிர இராம காவியத்தில் சீதாதேவியார், தாடகை, அகல்யா என்ற மூன்று பாத்திரங்கள் முக்கியத்துவம் பெறுகின்றன. தாடகையான அரக்கி கொடுகைமள் பல செய்ததால் ஸ்ரீ இராமனால் கொல்லப்பட்டாள். கௌதம மகரிஷியின் மனைவி அகல்யாவுக்கு ஸ்ரீராமபிரான் சாபவிமோசன மளித்தார். சீதாபிராட்டியாரை ஸ்ரீராமபிரான் தனது துணைவியாக ஏற்றுக் கொண்டார்.

"கிருஷ்னர் இராம அவதாரம் எடுத்து மனிதனாக வாழ்ந்து காட்டினார். அவர் மனிதனாக வாழ அவருக்குச் சகல வழிகளிலும் துணை புரிந்தவர் அன்னை சீதாபிராட்டி. ஒரு பெண் எப்படி வாழ வேண்டும், கணவனுடன் எப்படி நடந்து கொள்ளுதல் வேண்டும்; புகுந்த வீட்டில் உள்ளவர்களுடன் எப்படிப் பழகுதல் வேண்டும்; அயலவர்கள் நண்பர்களுடன் எப்படி வாழ வேண்டும்; தனது எதிரிகளுடன் எப்படி நடந்து தனது பெண்மையைப் பாதுகாத்துக் கொள்ளல் வேண்டும் என்று நாம் இராம காவியத்தில் சீதையின் வாழ்க்கை முறையைக் கொண்டு அறிந்து கொள்ள முடியும். சீதை தான் இராமாயணத்தின் காவியத் தலைவி. சீதையில்லாவிட்டால் இராம இராவண யுத்தம் நடைபெற்றிருக்க மாட்டாது. அரக்கனான இராவணன் அழிந்திருக்கவும் மாட்டான். சீதாதேவியைத் தான் காட்டுக்குச் செல்லும் போது

அரண்மனையில் தங்குமாறு இராமன் பணித்த போதும், சீதாதேவியார் அதை மறுத்து நாடு நகரங்களைத் துறந்து சகல சௌபாக்கியங்களையும் துறந்து மரவுரி தரித்துக் காட்டுக்குச் செல்லும் இராமனின் பின்னே சென்றாள். இராம காவியம் முழுவதும் சீதையின் பெருமை பேசப்படுகிறது. சீதையால் தான் இராமயாணம் இன்றும் பேசப்படுகிறது. இராம அவதாரத்தின் மகிமையையும், பேராற்றலையும், புனிதத் தன்மையையும் புடமிட்டுக் காட்டுவது சீதை என்ற பெண்ணின் பாத்திரம் தான். கற்பு என்றும் உறுதி; கணவன் மீதிருந்த நம்பிக்கை, இராமன் மீதிருந்த அளவற்ற காதல்; கணவனைப் பிரிந்ததால் உண்டாகும் துயரம்; இனசன பத்துக்களையும் தனது ஆட்சி அதிகாரங்கள் முதலியவற்றையும் பெண்கள் எப்போதும் துறக்கத் தயாராக இருக்க வேண்டுமென்ற தன்மை....'' உருத்திரமூர்த்தி பேசிக் கொண்ருக்கும் போது மண்டப வாசலில் யாரோ சண்டை பிடிக்கும் சத்தம் கேட்டது. மண்படத்தில் நடைபெறும் பேச்சை விட அது அதிக சத்தமாக இருந்தது. அதனால் உருத்திரமூர்த்தி தனது பேச்சை நிறுத்தினார். ஒரு போதுமில்லாதவாறு அந்த நிகழ்வால் கவலையுற்ற விக்னேஸ்வரமூர்த்தியும் ஜெயபாலனும் மண்டப வாசலுக்கு வந்தனர்.

மண்டப வாசலில் கிருஷ்னன் நன்றாகக் குடித்து விட்டுக் கத்திக் கொண்டிருந்தான். ஊரவர்கள் பலர் அவனைக் கட்டிப் பிடித்துத் தூக்கிக் கொண்டிருந்தனர். அவனது தலையில் இருந்து இரத்தம் வழிந்து கொண்டிருந்தது.

“ஜெயபாலன் பெரிய ஆளோ…? முன்பு ஊர் முழுக்கச் சண்டித்தனம் செய்தவன்; கொள்ளை அடித்தவன்; பெண்களைக் கெடுத்தவன். அவனை இப்ப பெரிய மனிதர்கள் தம்மோடு சேர்த்து விட்டனர்….” கிருஷ்னன் பேசிக் கொண்டிருந்தான். விக்னேஸ்வர மூர்த்தியையும் ஜெயபாலனையும் கண்டதும் அவனது ஆத்திரம் அதிகரித்தது.

“நீங்கள் உள்ளே போங்கோ. அவன் அளவுக்கதிகமாகக் குடித்து விட்டுப் புலம்புகிறான்” என்று யாரோ சொன்னார்கள்.

விக்னேஸ்வரமூர்த்தி எதுவும் பேசாமல் திரும்பிப் போனார்; “முன்னர் ஒருவனைப் பற்றி ஆராய்ந்து தெளிந்தாலும் தெளியாவிட்டாலும் பிரச்சினைகள் உண்டாகும் போது அவனோடு சேராமலும் நீங்காமலும் பேசாமல் இருப்பதுதான் நல்லது” என்று எண்ணியவாறு மண்டபத்துள்ச் சென்று தனது ஆசனத்தில் அமர்ந்தார்.

அதன் பின்பும் கிருஷ்ணன் ஜெயபாலனைப் பற்றிக் கண்டபடி பேசிக் கொண்டிருந்தான். அதனால் அன்றைய நிகழ்வை இரத்துச் செய்து விட்டு வீட்டுக்குச் சென்றார் விக்னேஸ்வரமூர்த்தி.

---

**876. தேறினும் தேறா விடினும் அழிவின்கண்**
**தேறான் பகாஅன் விடல்.**

---

இதற்கு முன்பு ஒருவனைப் பற்றி நன்கு ஆராய்ந்து அறிந்திருந்தாலும், அறியாதிருந்தாலும், அழிவு வரும்போது அவனோடு சேராமலும்

நீங்காமலும் நடு நிலையாய் இருப்பதே நன்மை ஆகும்.

## சொல்லக் கூடாதது

ஜெயபாலன் கதிரேசனது வீட்டுக்கு வந்து அவருக்குப் பக்கத்தில் அமர்ந்து கொண்டான். கதிரேசன் அவனை; “வா, வந்து உட்கார்” என்று கூறாதது ஜெயபாலனுக்குக் கவலையாக இருந்தது. எனினும் அவன் அதைக் காட்டிக் கொள்ளாது கதிரையில் அமர்ந்தான். “ஜெயபாலன் பயம் காரணமாகக் கிருஷ்னனுக்கு அளவுக்கதிகமாக இடங்கொடுத்து வருகிறான்” என்று கதிரேசனுக்குத் தெரிந்தது. அதைப்பற்றி அவர் முன்பு அவனுக்குச் சொல்லியிருந்தார்; “ஜெயபாலு, நீ முன்பு இலட்சுமியுடன் கொண்ட தொடர்பைக் கிருஷ்ணன் யாருக்காவது சொல்லி விடுவான் என்று நினைத்துத்தானே பயப்படுகிறாய். அந்தப் பயம் நியாயமானது தான். ஆனால் அந்த விஷயம் ஊரில் பலருக்குத் தெரியும். இப்படி ஒவ்வொருவரும் உன்னை மிரட்டினால் என்ன செய்வாய்? உன்னில் கிருஷ்ணன் நன்றாக இடங்கண்டு விட்டான். அதனால் நீ இருக்கும் இடங்களில் பலருக்கு முன்னால் உன்னை அவமதிக்கிறான். அதற்குப் பயந்து நீ அவனைச் சந்தித்து அவனுக்கு ஏராளமான பணத்தைக் கொடுக்கிறாய். அந்தப் பணத்தைப் பெற்ற பின்பாவது அவன் திருப்திப் படல் வேண்டும். அப்படித் திருப்திப்படாது மேன்மேலும் உன்னை வருந்தினால் உன்னிடமிருந்து அதிக பணம் கறக்கலாமென பேராசைப்படுகிறான். பேராசை பெருந்தரித்திரம் என்று அவனுக்குப்

புரியவில்லை. அத்துடன் தான் பணம் பெறுபவனுக்கு விசுவாசமாக நடக்க வேண்டுமென்ற எண்ணமும் அவனுக்கு இல்லை. அதனால் அவன் தண்டிக்கப்பட வேண்டியவன். அவனுக்கு மேலும் மேலும் இடங்கொடுக்காதே; அவனுடன் மென்மையாக நடந்து கொள்ளாதே. நீ மென்மையாக நடப்பதால் தான் அவன் அளவுக்கு மிஞ்சி நடக்கிறான்.'' என்றார். அது ஜெயபாலனுக்குக் கேட்கவில்லை. அவன் யோசித்தக் கொண்டிருந்தான். ''தனக்கு வரும் துன்பத்தைத் தானாகவே அறிந்து கொள்ள முடியாதவனுக்கு நாமாக எதையும் சொல்லக் கூடாது'' என்று நினைத்தார் கதிரேசன்.

''நான் மிகவும் நொந்து போய் வந்திருக்கிறேன். நேற்று அயலூரில் உள்ள பெரும் அறிஞரான உருத்திரமூர்த்தி அவர்கள் சொற்பொழிவாற்றும் போது கிருஷ்னன் மிகவும் கேவலமாக நடந்து கொண்டான். அதனால் உருத்திரமூர்தி என்னைப் பற்றி என்ன நினைத்திருப்பார்? அத்துடன் ஊரவர்கள் மிகவும் கேவலமாகப் பேசின்றனர். பலர் நான் இலக்கியப் பேரவையில் சேர்ந்ததால் இலக்கிய பேரவையின் மானமும் ஊரின் மானமும் போய்விட்டதாகச் சொல்கின்றனர். அத்துடன் இலக்கியப் பேரவையில் நடந்த தொன்றும் எனது மனைவிக்குத் தெரியாது. அது தெரிந்தால் அவள் பெட்டியைத் தூக்கிக் கொண்டு சென்று விடுவாள். அத்துடன் அவள் இப்படியானதொரு சம்பவத்தைத்தான் எதிர் பார்த்துக் கொண்டிருக்கிறாள். எனக்கு என்ன செய்வதென்று தெரியவில்லை'' கண் கலங்கினான் ஜெயபாலன்.

“ஒவ்வொரு வரும் ஆராயாது செய்யும் தீமைகளுக்கு ஒரு நாள் தண்டனையை அனுபவத்தே தீர வேண்டும் என்பதை அறிந்தாலும் அக்கறை கொள்வதில்லை. அத்துடன் ஒவ்வொருவரும் தாம் திருந்துவதாகச் சிக்கல்கள் வரும் போது சொல்வார்கள். அந்தச் சிக்கல்கள் தீர்ந்தவுடன் திரும்பவும் பழைய நிலைக்குத் திரும்பி விடுவார்கள். இது தான் காலம் காலமாக நடைபெற்று வருகிறது. உனக்கு நான் இவ்வளவு நாளும் சொல்ல வேண்டிய எல்லாவற்றையும் சொல்லி விட்டேன். தனக்கு வரும் துன்பங்களைப் பற்றித் தானாகத் தெரிந்து கொள்ள முடியாத ஒருவனுக்கு நாமாக அதைச் சொல்லக் கூடாது என்று பழந்தமிழ் நூல் ஒன்றில் வாசித்துள்ளேன். உனக்கு இன்னும் பல தீங்குகளைச் செய்யப் பலர் காத்திருக்கின்றனர். அதை நீயாகவே உணர்ந்து கொள். இங்கு வந்து என்னைப் பிரச்சினைக்குட் படுத்தாதே. நீ இங்கு வருவதால் நான் உனனக்கு ஏதோ உதவி செய்வதாக ஊர் மக்கள் நினைக்கிறார்கள். அத்துடன் எனது உறவினரும் என்னைக் கண்டிக்கின்றனர். அத்துடன் உன்னிடம் நான பெரும் பண உதவி பெறுவதாகவும் பலர் நினைக்கின்றனர். இது எனக்குத் தேவையா?” என்று கேட்டார் கதிரேசன்.

கதிரேசனது சொல்லும் செயல்களும் ஜெயபாலனுக்குக்குக் கவலையை அளித்தது. அதனால் அவன் எழுந்து சென்றான். தான் உண்மையைச் சொன்னதால் அவன் அளவுக்கதிகமான கோபத்துடன் செல்கிறான் எனக் கதிரேசன் நினைத்தார். படலைவரை சென்ற அவன் திரும்பி வந்து; “நான் குழப்பத்தில் உங்களிடம்

சொல்லாமல் புறப்பட்டு விட்டேன். நீங்கள் சொல்வது நியாயம் என்பதை ஒப்புக் கொள்கிறேன்.'' என்று சொல்லி விட்டு நடந்தான் ஜெயபாலன்.

**877. நோவற்க நொந்தது அறியார்க்கு; மேவற்க மென்மை பகைவர் அகத்து.**

தான் துன்புற்றதைத் தாமாகவே அறிந்து கொள்ளாத நண்பர்க்குத் தான் பட்ட துன்பத்தைச் சொல்லக் கூடாது. பகைவரிடத்தில் மென்மையாக நடந்து கொள்ளவும் கூடாது.

## கர்வம் அழிய

ஜெயபாலன் வீட்டுக்கு வந்தான். கதிரேசன் அவமதித்ததை அவனால் பொறுத்துக் கொள்ள முடியவில்லை. தமக்கு வரும் துன்பத்தைத் தானாகவே அறிந்த கொள்ள முடியாதவர்களுக்கு நாமாக எதுவுஞ் சொல்லக் கூடாது. அத்துடன் பகைவர்களி டத்தில் ஒரு போதும் நாம் மென்மையானவர்கள் என்பதைக் காட்டக் கூடாது'' என்று கதிரேசன் கூறியது அவனது காதுகளில் ஒலித்துக் கொண்டிருந்தது.

முன்பொருநாள் அவர் சொன்னார்; ''ஜெயபாலு, ஒருவன் செய்ய வேண்டியவற்றை நன்கு அறிந்து கொள்ளல் வேண்டும்; தன்னை வலிமைப்படுத்திக் கொள்ளல் வேண்டும். அத்துடன் தற்பாதுகாப்பையும் செய்து கொண்டால் பகைவனுக்கு ஏற்பட்ட செருக்கு தானாகவே அழியும். நீ உனது பகைவனை அன்பாக அடக்க

நினைத்துப் பணங் கொடுக்கிறாய். அது சரி வராது. அதை விட்டு விட்டு வேறு வழிகளைப் பார்'' என்று சொன்னது நினைவுக்கு வந்தது.

அன்று இரவு ஏழுமணி அளவில் நாவலர் ஸ்ரீ வித்தியா மகா கணபதி சனசமூக நிலைய முன்றலில் பலர் கூடி நின்றனர். அப்போது கிருஷ்ணன் நல்ல வெறியில் வந்தான். அங்கு கூடி நின்றார்களைக் கண்டதும் அவனுக்கு உற்சாகம் பிறந்தது. மக்களுக்கு முன்னால் ஜெயபாலனைப் பற்றிக் கூடாமல் கதைத்தால் மறுநாள் ஜெயபாலன் அவனது வீட்டுக்குவருவான். அப்பொழுது அவனது மனைவி அவனைத் திட்டுவாள்; ‘‘உங்களுக்கு நன்றி இருக்கா? ஜெயபாலன் அண்ணை எங்களுக்கு எவ்வளவு உதவி செய்கிறார். அதைவிட நீங்கள் ஒவ்வொரு நாளும் அவரைத் தேடிப் போய்ப் பணம் வாங்குகிறீர்கள். நீங்கள் அங்கு போவதால் அவரது மனைவி அவரை ஏசுகிறாள். நாளைக்கு உங்களது கரைச்சல் தாங்க முடியாது அவரது மனைவி வெளிநாட்டுக்குச்சென்று விட்டால் எமது குடும்பத்திற்குக் கிடைக்கும் உதவிகள் இல்லாமல் போய் விடும். உங்களுக்கு மனச்சாட்சியே இல்லையா...?'' என்று ஏசுவாள்.

‘‘இனிமேல் நான் அப்படிக் கதைக்க மாட்டன். நேற்று வெறி கொஞ்சம் கூடி விட்டது... இனிக் கதைக்க மாட்டன்'' என்று மகா கணபதி மீது சத்தியம் பண்ணுவான். ஆனால் மறுநாள் அதை மறந்து ஜெயபாலனைப் பற்றித் தூற்றத் தொடங்குவான்.

சனசமூக நிலையத்தில் பலர் கூடியிருந்தனர். நிர்வாக சபைக்கூட்டம் நடைபெற்றுக் கொண்டிருந்தது. கிருஷ்ணன் சனசமூக நிலையத்திற்கு அருகில் நின்ற வாகை மரத்தின் கீழ் இருந்தான்; “கூட்டம் நடக்குதோ? ஜெயபாலண்ணையைக் கூட்டி வந்து மாலை போட்டால் வேண்டியளவு காசு தருவர். முன்பு எமது ஊரைக் கொள்ளையடித்து வெளிநாட்டுக்குப் போனவர். பின்பு வெளிநாட்டைக் கொள்ளையடித்துக் கொண்டு வந்து தான் ஊரில் செய்த அடாவடித் தனங்களை மறைக்கப் பணத்தை அள்ளிக் கொடுக்கிறார்..”

வேலாயுதபிள்ளை வெளியே வந்து; “கிருஷ்னா, நாங்கள் கூட்டம் வைக்கிறம். நீ வீட்டை போ” என்றார்.

“நீங்களெல்லாம் பெரியாட்கள். அன்றைக்குத் தனபாலனுக்கு அடித்த மாதிரி எனக்கும் அடிக்க வந்திட்டியளோ….? அடியுங்கோ பார்ப்பம்” என்றான்.

தணிகாலம் வந்து வேலாயுதபிள்ளையை உள்ளே அழைத்துச் சென்றார். இரவு ஒன்பது மணிக்குக் கூட்டம் முடிவடைந்தது. கூட்டம் முடிவடைந்த பின்பும் கிருஷ்ணன் அங்கிருந்து ஜெயபாலனைப் பற்றி ஏசிக் கொண்டிருந்தான். சனசமூக நிலையம் பூட்டிய பின்பு மெல்ல எழுந்த கிருஷ்ணன் வீட்டை நோக்கி நடந்தான். அப்பொழுது ஒரு மோட்டார் வண்டி அவனுக்கு அருகில் மெதுவாக வந்து நின்றது. அதிலிருந்து மூன்று பேர் இறங்கிக் கிருஷ்னனைத் தூக்கி

மோட்டார் வண்டியில் ஏற்றினர். அது வேகமாகப் புறப்பட்டது.

மோட்டார் வண்டி சனநடமாட்டமில்லாத இருண்ட ஓர் இடத்தில் நின்றது. மோட்டார் வண்டிக்குள் கிருஷ்னன் இருந்த போது; "ஜெயபாலனிடம் ஆயிரக்கணக்கில் பணம் வாங்கிவிட்டு அவரைத் தூற்றுகிறாயா?" என்று கேட்டுக் கிருஷ்னனுக்குப் பலர் பலமுறை அடித்தனர்.

கிருஷ்னன் பயத்தால் நடுங்கினான்; "டேய் இனி மேல் நீ ஜெயபாலனிடம் பணம் வாங்கவும் கூடாது. அவனைப் பற்றிக் கதைக்கவும் கூடாது" என்று கூறியபடி கிருஷ்னனை கம்புகளாலும் பொல்லுகளாலும் தாக்கினர். பின்பு; "இனிமேல் கதைத்தால் உன்னைக் கொன்று புதைத்து விடுவோம்" என்று எச்சரித்து விட்டு அவனை ஏற்றி வந்து சனசமூக நிலையத்துக்கருகில் இறக்கி விட்டனர்.

**878. வகையறிந்து தற்செய்து தற்காப்ப மாயும்
பகைவர்கண் பட்ட செருக்கு.**

ஒருவன் ஒரு செயலைச் செய்யும் வகையை அறிந்து, தன்னை வலிமைப்படுத்திக் கொண்டு, தக்க பாதுகாப்பையும் தேடிக்கொண்டால், அவனது பகைவனுக்கு ஏற்பட்ட செருக்குத் தானாகவே அழிந்து விடும்.

**முட்செடி**

விடிந்ததும் கிருஷ்னனின் மனைவி எழுந்து வந்தாள். கிருஷ்னன் முற்றத்தில் கிடந்து முனகிக் கொண்டிருந்தான். இரவில் அவன் வீட்டுக்கு வர இரவு பத்து மணிக்கு மேலாகும். அதனால் அவள் அவனுக்காகக் காத்திருப்பதில்லை. இரவு உணவை எடுத்து வைத்து விட்டுப் படுத்துவிடுவாள். அவன் வந்து உணவை உண்டு விட்டுப் படுப்பான். இரவு வைத்த உணவு மூடியபடி இருந்தது. அவள் அவனுக்கு அருகே வந்தாள். அவனது நெற்றியில் பெரிய காயம் ஒன்றிருந்தது. அதிலிருந்து இரத்தம் வழிந்து காய்ந்திருந்தது. உடல் முழுவரும் அடி காயங்கள் இருந்தனர். முகம் அடையாளம் காணமுடியாதபடி வீங்கியிருந்தது.

“என்ன நடந்தது? யாருடன் சண்டைக்குப் போனீர்கள்?”

கிருஷ்னன் முனகினான். அவனால் வேதனையைத் தாங்க முடியவில்லை; “ஐயோ நான் சாகப்போறன். என்னை வைத்தியசாலைக்குக் கொண்டு போங்கோ” என்றான்.

“யாரோடு சண்டைக்குப் போனீர்கள்?” என்று மறுபடியும் கேட்டாள் அவனது மனைவி.

“என்னை வைத்தியசாலைக்கு கொண்டு போ.... நான் எதுவும் சொல்ல மாட்டன். சொன்னால் என்னைக் கொன்று போடுவாங்கள்” என்று அழுதான் கிருஷ்னன்.

கிருஷ்ணனின் மனைவி தணிகாசலத்திடஞ் சென்றாள். அவர் வந்து அவனை

வைத்தியசாலைக்குக் கொண்டு சென்று அங்கு அனுமதித்தார்.

இரண்டு நாட்களின் பின் கிருஷ்னன் வைத்தியசாலையில் இருந்து வீட்டுக்கு வந்தான். அவன் தன்னைத் தாக்கியவர்கள் யார் என்று பலரும் கேட்ட போதும் சொல்லவில்லை. தணிகாசலம் அன்று அவனைப் பார்க்க வந்திருந்தார்.

“குடித்தால் மற்றவர்களுக்கு இடைஞ்சல் கொடாமல் நடந்து கொள்ள வேண்டும். உன்னால் இந்தக் கிராமத்திற்கே அவமானம்” என்றார் தணிகாசலம்.

“அப்படித்தான் அண்ணை சொல்லிச் சொல்லி அடித்தவங்கள். முட்செடி மரமாக வளர்வதற்கு முன் அதை வெட்டிவிடல் வேண்டும். நீ எமது கிராமத்தின் முள்மரம். உன்னை முன்பே திருத்தியிருந்தால் இன்று இவ்வளவு அவமானம் வந்திராது. முள்மரமாக வளர்ந்த நீ எமது கிராமத்தின் மதிப்பு மரியாதை எல்லாவற்றையும் கெடுத்து விட்டாய். அன்று அயலூரவரான உருத்திரமூர்த்தி பேசும் போது ஜெயபாலனைப் பற்றிக் கேவலமாகப் பேசிக் கூட்டத்தைக் குழப்பிவிட்டாய். உனக்கும் ஜெயபாலனுக்கும் பிரச்சினையென்றால் ஜெபாலனுடன் கதைக்க வேண்டும். அதை விட்டு விட்டு இலக்கியப் பேரவை நிகழ்வைக் குழப்பிறாய்.” என்று சொல்லிச் சொல்லி அடித்தார்கள். அழுதான் கிருஷ்னன்.

“அவங்கள் சொன்னது சரிதானே. ஜெயபாலனோடு உனக்கு என்ன பிரச்சினை? தினமும் அவனிடம் பணம் பெறுகிறாய். பிறகேன் அவனைப் பற்றிப் பொது இடங்களில் பேசுறாய். என்ன இருந்தாலும் நீ அன்று இலக்கியப் பேரவையில் குழப்பம் விழைவித்தது பிழை”

“ஒத்துக் கொள்ளுறன் அண்ணை. இனிமேல் அப்படி நான் நடக்க மாட்டன்” என்றான் கிருஷ்னன் அவனது குரல் நடுங்கியது.

“உனக்கு அடித்தவர்கள் யாரென்று தெரியாதா?”

“சத்தியமாய்த் தெரியாதண்ணை. என்ரை முகத்தைத் துணியால் கட்டிப் போட்டாங்கள்”

“குரலில் அடையாளம் தெரியவில்லையா…?”

“அதை விடுங்கோ. இனிமேல் நான் குடித்து விட்டு எதுவும் கதைக்கமாட்டன். நான்பட்டது போதும்” என்றான் கிருஷ்னன்.

“சரி நான் வாறன். நீ அவதானமாக இரு.” என்று கூறிவிட்டுச் சென்றார் தணிகாலசம்.

வாரம் ஒன்று கழிந்தது. கதிரேசன் நாவலர் ஸ்ரீ வித்தியா மகா கணபதி ஆலயத்திற்கு வந்தார். அங்கு ஜெயபாலன் நின்றான். அன்று அவன் கதிரேசனது வீட்டுக்கு வந்தபோது; “தமக்கு

வரும் துன்பத்தை அறிந்து கொள்ள முடியாதவனுக்குப் புத்திமதிகளோ ஆலோசனைகளோ கூறிப் பயனில்லை'' என்று சொன்ன பின்பு அவன் கதிரேசனைச் சந்திக்கவில்லை. கதிரேசன் வந்து கோயில் மண்டபத்தில் அமா்ந்ததும் ஜெயபாலன் அவரின் அருகில் வந்து; ''எப்படி சுகமாக இருக்கிறியளோ?'' என்று கேட்டான்.

கதிரேசன் பதில் சொல்லாமல் சிரித்தார். பின்பு; ''நீ கெட்டிக்காரன். இப்போ கிருஷ்னன் உன்னைப் பற்றி மட்டுமல்ல வேறு எந்தக் கதையும் கதைப்பதில்லை. அத்துடன் நான்கு மணிக்கு முன்பே வீட்டுக்குச் சென்று விடுகிறான்'' என்றார்.

ஜெயபாலன் பதில் சொல்லாது சிரித்தான். அச்சிரிப்பில் பல்லாயிரம் அா்த்தங்கள் இருந்ததைக் கதிரேசன் உணா்ந்து கொண்டார்.

**879. இளைதுஆக முள்மரம் கொல்க; களையுநா்**
**கைகொல்லும் காழ்த்த இடத்து.**

முள் மரத்தைக் கன்றாக இருக்கும் பொழுதே வெட்ட வேண்டும். வளா்ந்து மரமான பின் வெட்டினால் வெட்டுபவனின் கை புண்படும்.

## இறந்தவன்

''அன்று நான் உங்களின் வீட்டுக்கு வந்து போது நீங்கள் 'வா' என்று கூடச் சொல்லவில்லை. அதிலிருந்து நான் பல உண்மைகளை உணா்ந்து கொண்டேன். இளமைப் பருவத்தில் நான் பல

குற்றங்களை அறியாமையால் தான் செய்தேன். நான் அக்குற்றங்களைச் செய்யப் பலர் காரணிகளாக இருந்தனர். அதனால் அவர்கள்தான் பயனடைந்தனர். ஆனால் அவர்கள் இப்பொழுதும் அக்குற்றங்களை யாருக்கும் தெரியாமற் செய்கிறார்கள். அதனால் அவர்களை மக்களும் அறிஞர்களும் மதிக்கிறார்கள். ஒருவனிடம் திருடுவது களவு, நாட்டின் சொத்தைத் திருடினால் அது என்ன…? அவர்களுக்கு இந்த நாட்டில் பதவி உயர்வுகள் வழங்கப்படுகின்றன. அவர்களிடம் உதவி பெற மக்கள் இலஞ்சம் கொடுக்கிறார்கள். அதை அவர்கள் இலஞ்சமாகக் கொள்ளாது நன்கொடை, அன்பளிப்பு என்கிறார்கள். நான் செய்த குற்றங்கள் இப்போது எனது மனதை அரிப்பதால் தான் அதற்குப் பரிகாரம் தேட முயல்கிறேன். அதை எல்லோரும் தப்பாகத்தான் புரிந்துள்ளனர்.'' பெருமூச்சு விட்டான் ஜெயபாலன்.

``உனக்கு இப்போது உலகம் புரிந்து விட்டது. பகைவர்களுடைய கொடுமைகளை அழிக்கக்கூடிய வலிமை இருந்தும், அவ்வாறு செய்யாமல் அவர்களது தீய செயல்களைப் பார்த்துக் கொண்டு இருப்பவர்கள் உயிரோடு இருந்து மூச்சுவிட்டுக் கொண்டிருப்பவர்களே தவிர உயிர் வாழ்பவர்கள் அல்லர். அதை உணர்த்தத் தான் நான் அன்று அப்படி நடந்து கொண்டேன். அதனால் உனது பகைவன் பயந்து விட்டான். இனிமேல் அவன் மறந்தும் கூட உனது நாமத்தை நினைக்க மாட்டான். நீ எழுந்து செல்லும் போதே நான் நினைத்தேன். ஆனால், இங்குள்ளவர்கள் கிருஷ்னனுக்கு அடித்தது வேறு நபர்கள் என்று கதைக்கின்றனர். வேலாயுதபிள்ளை, நவராசாவும்

புஷ்பநாதனும் கஜேந்திரனும் தான் கிருஷ்னனுக்கு அடித்தது என்று கூறித் திரிகிறார். பாவம் அவர்கள். கஜேந்திரனைப் பற்றி இப்போது ஊரில் நல்ல அபிப்பிராயம் இல்லை. அவன் காதலிப்பது குற்றம் என்று கருதுகின்றனர். அத்திருமணத்தைப் பெற்றோர்கள் தான் நிட்சயித்திருப்பார்களே தவிர அந்தப் பெண் விரும்பவில்லைப் போலத் தெரிகிறது. மாப்பிள்ளையோ அவனுடைய பெற்றோரோ நானறிந்த வரை இங்கு வரவில்லை. பொதுவாகப் பிள்ளைகள் பிறந்தவுடன் பெற்றோர் அவர்களுக்குத் தமது இரத்த உறவினர்களின் பிள்ளைகளை நிட்சயம் செய்வார்கள். பின் அவற்றைப் பற்றி யார் நினைக்கிறார்கள். அவன் வித்தியாவைச் செய்வதாக இருந்தால் ஒரு தரம் என்றாலும் வீட்டுக்கு வந்திருப்பான். கண்காணாமல் இருக்கிறவை இன்னொடுவரைக் காதலிப்பது புதுமை அல்ல. அதைப் பெரிதுபடுத்துவது அறிவீனம். அத்துடன் கஜேந்திரனைக் கெட்டவனாக்கியதுடன் கிருஷ்னனுக்கு அடித்தது அவன் என்று கதைப்பதை என்னால் தாங்கிக் கொள்ள முடியவில்லை'' என்றார் கதிரேசன்.

ஜெயபாலன் யோசித்துக் கொண்டு நின்றான். பின் சொன்னான்; ''எனக்குப் பலாத்காரத்தில் நம்பிக்கையில்லை. பலமுறை கிருஷ்னனிடம் சென்று கெஞ்சிக் கேட்டனான். அத்துடன் அவனுக்கு எவ்வளவு பணம் கொடுத்திருப்பேன். பணத்தை வாங்கும் போது அழுவான். மாலையானதும் தனது தொழிலைத் தொடங்கி விடுவான். அவன் இதை ஒரு இலாபமான தொழிலாகக் கருதித்தான் செய்தவன். அவனை விட்டு வைத்தால் இந்தப் பிரச்சினையை எனது மனைவிக்கும் புஷ்பநாதனுக்கும் சொல்லி விடுவான்.

ஆரம்பத்தில் இரந்து கேட்டவன். பின் மிரட்டத் தொடங்கி விட்டான். அதனால் தான் அப்படி நடந்து கொண்டேன்'' என்றான் ஜெயபாலன்.

''நீ அப்படித்தான் செய்ய வேண்டும். எதிரி வீரனாக இருந்தால் அஞ்சத்தான் வேண்டும். ஆனால் அவன் கோழை; பலவீனமானவன். அவனை அடக்காவிட்டால் ஊரில் எந்த நிகழ்வையும் செய்ய முடியாமல் போய்விடும். அத்துடன் எமது கிராமத்தின் மானமும் போய்விடும். நீ செய்தது சரி. நானும் அதைத்தான் விரும்பினேன். ஆனால் வெளியே சொல்ல விரும்பவில்லை. அதை நீயாக உணர்ந்து செய்யட்டும் என்று நினைத்தேன். ஆதனால் நவராசாவும் கஜேந்திரனும் வீண்பழி கேட்பதை நினைக்க எனக்கு மனவருத்தமாக உள்ளது'' என்றார் கதிரேசன்.

''கிருஷ்னனுக்கு நான்தான் ஆள்வைத்து அடிப்பித்தது என்று தெரியும். ஆனால் அவன் அதைச் சொல்லமாட்டான். பலர் வற்புறுத்திக் கேட்டும் அவன் சொல்லவில்லை. வேலாயுதபிள்ளை அண்ணைக்குக் கஜேந்திரன் மீது வெறுப்பிருக்கு. அவர் தனபாலனுக்கு அடித்தது பிழையென்று கஜேந்திரன் சொன்னதற்காகப் பழிவாங்க நினைக்கிறார். ஆனால் அது நடவாது. கஜேந்திரனைப் பற்றி எல்லோருக்கும் தெரியும். இன்னும் சில நாட்களில் எல்லாம் சரிவந்து விடும். நீங்கள் கவலைப்படாதைங்கோ'' என்றான் ஜெயபாலன்.

பூசைக்கான கண்டாமணி அடித்தது. ஜெயபாலன் கால்முகம் கழுவச் சென்றான். கதிரேசன் மகாகணபதியை வணங்க எழுந்தார்.

---

**880. உயிர்ப்ப உளர்அல்லர் மன்ற செயிர்ப்பவர்**
**செம்மல் சிதைக்கலா தார்.**

---

தன்னைப் பகைத்தவனுடைய தலைமையைக் கெடுக்க முடியாதவர், மூச்சு விடும் அளவிற்கே உயிரோடு வாழ்பவராவார்.